
கல்கி
KALKI 31.5.98 ரூ. 4.50
மீண்டும்
காஜோல்!



சர்க்கரை வியாதியா? இயலாமையா? நரம்பு தளர்ச்சியா?

இனி கவலையே வேண்டாம்!



அடிக்கடி சிறுநீர் பிரிதல், பசி, தாகம், சோர்வு, எடை குறைதல், கால் குத்தல், மயக்கம், கண் பார்வை மங்குதல், நரம்பு தளர்ச்சி, புண் ஏற்பட்டால் ஆறாத நிலை போன்றன ஒருவருக்கு தெரிந்தால் சர்க்கரை வியாதி இருப்பதாக கொள்ளலாம். இவர்கள் தெய்வீக மூலிகைகளான வேப்பிலை, வில்வம், அருகம்புல், மாவிலை, நாவல், சிறுகுறிஞ்சான், ஆவாரம்பூ, நெல்லி போன்ற மூலிகைகளை பறித்து வந்து வெய்யிலில் உலர்த்தி பொடி செய்து தக்க அளவில் கலந்து வைத்துக் கொண்டு தினமும் காலை, மாலை உணவுக்கு அரை மணி நேரம் முன்பாக ஒரு ஸ்பூன் தூளை எடுத்து ஒரு டம்ளர் குடிதண்ணீரில் கலந்து சுமார் நான்கு மாதங்கள் உட்கொண்டு வந்தால் எவ்வித பக்க விளைவுகளும் இன்றி குணம் பெறலாம்.

உணவு முறை - இந் நோயாளிகள் மூன்று வேளை உணவில் இரு வேளை 3/4 வயிறு சாதாரண சைவ உணவு உட்கொள்ளலாம். உணவில் ராகி, கோதுமை, கம்பு, பார்லி, மக்காசோளம் போன்ற தானியங்களை அடிக்கடி உணவாக உட்கொள்ளவும். ஏதேனும் ஒரு வேளை உணவு இயற்கை உணவுகளான பப்பாளி, அன்னாசி, வெள்ளரி, தர்பூசணி, மா, கொய்யா, நாவல்,கேரட், வெண்டை, வெள்ளரிக்காய், பீர்க்காய், வெங்காயம், தக்காளி போன்றவைகளில் தினசரி உணவில் ஏதேனும் நான்கு வகைகளை உட்கொள்வது நல்லது. மேலும் காலை மாலை சுமார் 15 நிமிடம் நடத்தல், குனிந்து நிமிருதல், சைக்கிள் ஓட்டுதல், உட்கார்ந்து எழுதல், நீச்சல் போன்ற எளிய உடற்பயிற்சி செய்வதாலும் இந்நோயிலிருந்து விடுபடலாம். இது பற்றிய விரிவான ஆலோசனைக்கு நேரிலும் கடிதம் மூலமும் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி.

தெய்வீக மூலிகை வைத்தியர்கள்



தலைமை முகவரி : Dr.M.குருபரன் & Dr.M.சபாபதி, S/o.Dr.C.K.மாணிக்கவாசகம்

P.B. No: 30, No: 3, திருநாத முதலி நகர், (காலேஜ் எதிரில்), திருப்பத்தூர் (N.A.A.) 635 601 ✆: 04179-20469, 22769.

சென்னை கிளை : 115, புரசைவாக்கம் நெடுஞ்சாலை, பிரின்ஸ் மேனர் பக்கத்தில் கெல்லீஸ், சென்னை-10.

இரு முகவரிகளின் ஆலோசனை நேரம் தினமும் காலை 10 to 1 மாலை 6 to 8

✆ : 6424285, 6427638

Singapore Enquiry : Mrs. Renuka, Blk 101, #04, -176, Jurong East Street-13, Singapore - 600 101. ✆ : 0065 - 562121

1998 வைத்தியரிடம் நேரில் ஆலோசனை/மருந்தினைப் பெற முகாம் விவரம்.
(முக்கிய பண்டிகை தினங்களிலும் முகாம் உண்டு)

2-ந் தேதி	- வேலூர் (N.A.)	: மிற்பகல்	1 to 2 மணி வரை ஹோட்டல் கன்னா (கங்கா), 16, ஆஃபீஸர்ஸ் லைன், ✆ : 0416 / 23060.
2-ந் தேதி	- காஞ்சிபுரம்	: மாலை	5 to 6 ராஜம் லாட்ஜ், (பஸ் நிலையம் அருகில் 9, காமராஜர் தெரு, ✆ : 04112 / 22519.
1,3,10,17,18,19,20,27,28-ந் தேதி	- சென்னை	: காலை	9 to 2 மேலே உள்ள சென்னை முகவரியில், ✆ : 044 / 6424285, 6427638.
4-ந் தேதி	- கடலூர் (S.A.Dt.)	: காலை	9 to 11 ஆற்காடு உட்லண்ட்ஸ் ஹோட்டல், ✆ : 04142 / 30707, 30717
4-ந் தேதி	- விழுப்புரம்	: மிற்பகல்	2 to 3 ஹோட்டல் ஆனந்தா, பஸ்நிலையம் எதிரில், ✆ : 04146 / 22962.
4-ந் தேதி	- திருவண்ணாமலை	: மாலை	5 to 6 ராதா லாட்ஜ் (பஸ் நிலையம் எதிரில் ✆ : 04175 / 22536.
9-ந் தேதி	- பெங்களூர்	: காலை	11 to 12.30 ஹோட்டல் பிராட்வே, (கல்பனா தியேட்டர் அருகில் கெம்பே கவுடா ரோட் ✆ : 2266374
9-ந் தேதி	- ஓசூர்	: மாலை	3 to 4 சீனிவாசா லாட்ஜ், பாகலூர் ரோட், ✆ : 04344 / 22899.
12-ந் தேதி	- சேலம்	: காலை	11.30 to 12.30 ஹோட்டல் செல்வம், புதிய பஸ் நிலையம் எதிரில், ✆ : 0427 / 449333.
12-ந் தேதி	- ஈரோடு	: மாலை	4 to 5 ஹோட்டல் ஆக்ஸ்ஃபோர்டு, பஸ் நிலையம் எதிரில், ✆:0424 / 226611 / 12 / 13 / 14/15/16/17/18
13-ந் தேதி	- கோயம்புத்தூர்	: காலை	9.30 to 12.30 சேரன் பேலஸ் லாட்ஜ் (சாந்தி தியேட்டர் பின்புறம்) ✆ : 0422 / 302211, 302220
14-ந் தேதி	- மதுரை	: காலை	9 to 11 ஹோட்டல் கிராண்ட்ஸ் சென்ட்ரல், மேலப் பெருமாள் மேஸ்திரி தெரு, ✆ : 0452 / 743941
14-ந் தேதி	- தஞ்சாவூர்	: மாலை	5 to 6 அசோகா லாட்ஜ், ✆ : 04362 / 30021 / 30022
15-ந் தேதி	- திருச்சி	: காலை	9 to 11 ஹோட்டல் ஆனந்த், (சென்ட்ரல் பஸ் நிலையம் அருகில், ✆ : 0431 / 460545.
15-ந் தேதி	- நாமக்கல்	: பிற்பகல்	2.30 to 3.30 ஹோட்டல் தேவி அன்னபூர்ணா, ✆ : 04286 / 20433
22-ந் தேதி	- தர்மபுரி	: காலை	9 to 10 ஸ்ரீ மாதேஸ்வரா லாட்ஜ், ✆: 04342 / 60226.
22-ந் தேதி	- திருப்பூர்	: பிற்பகல்	2 to 3 ராமகிருஷ்ணா லாட்ஜ், ✆ : 0421 / 740418.
22-ந் தேதி	- உடுமலைபேட்டை	: மாலை	6 to 7 குறிஞ்சி லாட்ஜ், (பஸ் நிலையம் எதிரில் ✆ : 04252 / 24353.
23-ந் தேதி	- திண்டுக்கல்	: காலை	9 to 10.30 ஹோட்டல் குறிஞ்சி, (பஸ் நிலையம் பின்புறம் ✆:27017.
23-ந் தேதி	- தூத்துக்குடி	: மாலை	5 to 6 ஹோட்டல் ஆப்பிள், தேவர் புரம் ரோடு, ✆ : 0461 / 327780
24-ந் தேதி	- திருநெல்வேலி	: காலை	8.30 to 11 ஹோட்டல் ஸ்ரீ சித்தரபதி, மதுரை ரோடு, ✆ : 0462 / 333312.
24-ந் தேதி	- நாகர்கோவில்	: பிற்பகல்	2 to 3 ஹோட்டல் சரண்யா, மீனாட்சிபுரம், ✆: 04652 / 25669.
25-ந் தேதி	- விருதுநகர்	: காலை	9 to 10 அண்டன் லாட்ஜ், மதுரை ரோடு, ✆ : 04562 / 45537.
25-ந் தேதி	- கரூர்	: பிற்பகல்	2.30 to 3.30 மணி வரை அரசி லாட்ஜ், ஜவகர் பஜார், ✆ : 63763.

Dr.CKM

DIVINE HERBAL CENTRE

தகவல் : டாக்டர் அவர்களின் மூலிகைகள் பற்றிய 23 வருட அனுபவ ஆராய்ச்சிகள் அடங்கிய **'எளிய முறையில் பிணி அகற்றும் தெய்வீக மூலிகைகள்'** என்ற புத்தகத்தினை பதிவுத்தபாலில் பெற ரூ.60/-ம் இயற்கை உணவுகளின் பெருமைகள், அதிசய உண்மைகள் அடங்கிய **'என்றும் இளமை காக்கும் இயற்கை உணவுகள்'** என்ற புத்தகத்தினை பதிவுத் தபாலில் பெற ரூ.60/-ம் மூலிகை மகிமை பற்றிய ஆடியோ கேசட்டை பெற ரூ.60/-ம் தலைமை முகவரிக்கு M.O. அல்லது D.D. அனுப்பவும்.

7-ந் தேதி - மும்பை : காலை 9 to இரவு 8 மணி வரை The South Indian Concerns Ltd., 401, Telang Road, Matunga, (CR), Ph : 4011589

“நாங்கள் என்ன இளிச்சவாயர்களா?”

‘சோபா’ என்று த.மா.கா.வினரால் பாசத்தோடு அழைக்கப்படும் எதிர்க்கட்சித் தலைவர் சோ. பாலகிருஷ்ணன் ஆர்ப்பாட்டம் ஏதுமில்லாமல் அமைதியாகச் செயல்படுபவர். மனத்தில் பட்டதை தைரியமாகச் சொல்பவர். “இப்படி வெளிப்படையாக நான் பேசுவதால் எனக்கு இதுவரை எந்தச் சிக்கலும் வந்ததில்லை!” என்றும் சொல்பவர். அவரைச் சந்தித்தபோது –



“என்ன ஸார், திடீர்னு சட்டசபையில் வெளிநடப்பெல்லாம் செய்து அசத்திட்டீங்களே...”

“இந்தியன் வங்கி விவகாரத்தில், த.மா.கா. பிரமுகர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சொல்லி ஊர்வலம் – ஆர்ப்பாட்டம் நடத்த வாழப்பாடி கட்சியினர் ஒரு வாரத்திற்கு முன்னரே போலீஸாரிடம் அனுமதி வாங்கியிருந்தனர். எனவே போலீஸ் உஷாராக இருந்து அவர்களை நோட்டம் பார்த்திருக்க வேண்டும். முதல்வர் சட்டமன்றத்தில் சொன்னது போன்று அவர்கள் மூப்பனார் – சிதம்பரம்

எதிர்க்கட்சித் தலைவர் பேட்டி

உருவ பொம்மைகளை (கொடும்பாவி) மறைத்து எடுத்து வரவில்லை. பகிரங்கமாகவே எடுத்து வந்து கொளுத்தினார்கள். போலீஸ் வேடிக்கை பார்த்தது. ஒரு தனியார் தொலைக்காட்சி, இதைப் படம்பிடித்து ஒளிபரப்பியது. அதைப் பார்த்தவுடன் எங்களுக்கு ரத்தம் கொதித்தது. ஐக்கிய முன்னணி ஆட்சியில் பிரதமர் பதவியை வேண்டாம் என்று ஒதுக்கிய பெரிய தலைவர் மூப்பனார். தடம்புரண்ட பொருளாதாரத்தைத் தூக்கி நிறுத்திய பெருமைக்குரியவர் சிதம்பரம். இவர்கள் இருவரும் இந்தியன் வங்கியில் கடன் வாங்கியிருக்கிறார்களா? இல்லை, கடன் வாங்கியவர்களைத் திருப்பிக் கட்ட வேண்டாம் என்று சொல்லியிருக்கிறார்களா? பொது வாழ்க்கையில் இருக்கும் நாங்கள் பலருக்கு கடன் வழங்க சிபாரிசு செய்திருக்கலாம். ஆனால் வங்கி மற்றவர்களுக்கு எந்தச் சட்ட விதிமுறைகளை அனுசரித்துக் கடன் கொடுக்கிறதோ அது போன்றேதான் நாங்கள் சிபாரிசு செய்தவர்களுக்கும் கொடுத்திருக்கிறது. இந்தியன் வங்கியில் மட்டுமல்ல; 'அனைத்து தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளிலும் கொடுக்கப்பட்ட கடன்களில் 45,000 கோடி ரூபாய் இன்னும் வசூலாகாமல் இருக்கிறது' என்று பிரதமரே சமீபத்தில் சொல்லியிருக்கிறார். அனைத்துக் கட்சி பிரமுகர்களும் வங்கிகளில் கடன் வாங்கியிருக்கிறார்கள். அப்படியிருக்க, தமிழ் மாநில காங்கிரஸை மட்டும் தனிமைப்படுத்துவது ஏன்? எங்களுக்கு மடியில் கனமில்லை. எங்களது வருத்தம் என்னவென்றால் தோழமைக் கட்சி ஆட்சி செய்யும் போதே எங்கள் தலைவர்களின் கொடும்பாவிகள் எரிக்கப்படுவதுதான். ஒருவேளை கொடும்பாவி எரிப்பைத் தடைசெய்து பி.ஜே.பி. அரசில் அமைச்சராக உள்ள வாழப்பாடியின் கோபத்தை சம்பாதித்துக் கொள்ள தி.மு.க. விரும்பவில்லையோ என்று கூடத் தோன்றுகிறது. ஆட்சிக் கலைப்பு என்று பேச்சு அடிபட்டுக் கொண்டிருக்கையில் எல்லோரையும் பார்த்து பயப்படும் சூழ்நிலைக்கு தி.மு.க. வந்து விட்டது என்றுதான் சொல்ல வேண்டும்!"

"இதுபோன்ற ஆர்ப்பாட்டங்களில் கொடும்பாவிகள் எரிக்கப்படுவது வழக்கமாக நடந்து வரும் சங்கதிதான். கடந்த இரண்டு வருட காலத்தில் மக்கள் பிரச்னைகளுக்காகக் கூட நீங்கள் வெளிநடப்புச் செய்ததில்லை. உங்கள் சத்தியமூர்த்தி பவன் வளாகத்திலேயே நரசிம்மராவ், முரசொலி மாறன் கொடும்பாவிகள் கொளுத்தப்பட்டிருக்கின்றன. அப்படியிருக்க, திடீரென நீங்கள் இந்த விஷயத்தில் வெளிநடப்புச் செய்திருப்பது தி.மு.க. கூட்டணியை விட்டு விலகுவதற்கான அறிகுறியாக எடுத்துக் கொள்ளலாமா?"

"சத்தியமூர்த்தி பவனில், 1996-ல் நரசிம்மராவ் கொடும்பாவி எரிக்கப்பட்டதற்கு தலைவர் மூப்பனார் மன்னிப்புக் கேட்டுக் கொண்டார். கொடுத்த வாக்குறுதியை மீறி அடிமைத்தனமாக நடந்து கொண்ட நரசிம்மராவை, எதிர்த்து எழுந்த தொண்டர்களின் உணர்ச்சிப் பிரவாகம் அது. அதே போல் மாறன் கொடும்பாவி விவகாரத்தில் த.மா.கா. மாணவர் பிரிவு அமைப்பாளர் விடியல் சேகர் கட்சியிலிருந்து உடனடியாக டிஸ்மிஸ் செய்யப்பட்டார். இன்னமும் போலீஸ் கேஸ் நடந்து கொண்டிருக்கிறது. இந்தச் சம்பவங்களை வாழப்பாடி கட்சியினர் நடத்திய அநாகரீகத்தோடு ஒப்பிடாதீர்கள். அவர்கள் திட்டமிட்டு நடத்தியிருக்கிறார்கள். முதல்வர் கருணாநிதியின் கொடும்பாவியை எரிக்கப் போகிறோம் என்று தூக்கிக் கொண்டு வந்தால் போலீஸ் பேசாமல் இருந்திருக்குமா? எங்கள் தலைவர்களும் நாங்களும் என்ன இளிச்சவாயர்களா? தி.மு.க. ஆட்சியில் முதல் ஒரு வருடம் ஜெ.வின் ஊழலை அம்பலப்படுத்துவதிலும் நடவடிக்கை எடுப்பதிலும் நேரம் சரியாக இருந்தது. இரண்டாவது வருடம் ஆட்சியின் குறைபாடுகளைப் பேசத் துவங்கினோம். இப்படியாக ஐந்து வருட காலத்திற்கு நாங்கள் எங்களை வளர்த்துக் கொண்டு, காமராஜ் ஆட்சியைக் கொண்டு

நினைவிருக்கிறதல்லவா?

அமரர் கல்கி நூற்றாண்டு விழா சிறப்புச் சிறுகதைப் போட்டிக்கான சிறுகதைகளை அனுப்ப வேண்டிய கடைசித் தேதி: ஜூன் 15.

முழு விவரங்களுக்குச் சென்ற வார இதழையோ அல்லது வரும் வார இதழையோ பாருங்கள்.

வர ஒரு ஸ்கீம் வைத்திருந்தோம். ஆனால் இடையில் பாராளுமன்றத் தேர்தல் வரவே தி.மு.க.வுடன் ஒருங்கிணைந்து வேலை செய்ய வேண்டிய நிலை. இப்போது காங்கிரஸோடு இணைந்து பணியாற்றப் போவதாக தலைவர் சொல்லியிருக்கிறார். மற்றபடி தி.மு.க.வுடனான எங்கள் நிலை பற்றி கொள்கை முடிவெடுக்க வேண்டியவர் தலைவர்தான். அவர் சுட்டிக்காட்டும் பாதையில்தான் எங்கள் பயணம்."

"மூப்பனாரைக் கேட்டுக் கொண்டு தான் நீங்கள் வெளிநடப்புச் செய்தீர்களா?"

"சட்டமன்றத்தில் ஒரு முழுமையான எதிர்கட்சியாகச் செயல்பட எங்களுக்குத் தலைவர் முழுச் சுதந்தரம் கொடுத்திருக்கிறார். தொலைக்காட்சியில் எரிப்பு சம்பவத்தைப் பார்த்து எழுந்த கோபத்தில்தான் மறுநாள் நாங்கள் நாலைந்து பேர் சட்டசபையில் கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்தோம்."

"வெளிநடப்புச் செய்த பிறகு தலைவரிடம் சொன்னீர்களா?"


"வேறு வேலையிருந்ததால் நான் தலைவரைப் பார்க்கவில்லை. ஆனால் சொக்கரும், சுதர்சனமும் தலைவரிடம் முழு விவரத்தையும் சொன்னார்கள்."

"அவரது ரியாக்ஷன் என்ன?"

"உங்களுக்குத் தெரியுமே! தலைவர் தமது உணர்வுகளை அவ்வளவாக வெளிக்காட்டிக் கொள்பவரல்ல. மௌனமாக இருந்தார். எனவே நாங்கள் நடந்து கொண்ட முறையில் அவருக்கு வருத்தம் ஏதுமில்லை என்றுதான் எடுத்துக் கொள்ள வேண்டும்."

"கலைஞருடைய நிர்வாகத்தைப் பற்றி உங்கள் கருத்தென்ன?"

"முதலில் நன்றாகவே இருந்தது. ஆனால் சமீப காலங்களில் ஆட்சிக் கலைப்பு பற்றிய செய்திகள் அவரிடம் கலக்கத்தை ஏற்படுத்தியிருக்கின்றன. 352, 356 என்ற பிரிவுகளின் அடிப்படையில் நடவடிக்கை எடுக்க சட்டபூர்வமாக அனுமதி கிடையாது என்று தெரிந்தும் கலைஞர் பயப்படுவதற்கான காரணம் புரியவில்லை. இந்த பயத்தின் விளைவான தயக்கத்தின் காரணமாக நிர்வாகம் ஸ்தம்பித்து நிற்கிறது. எமர்ஜென்ஸியை எதிர்த்துக் குரல் கொடுத்தவர் இப்படி நடந்து கொள்கிறாரே என்று ஆச்சர்யமாக இருக்கிறது. ஆட்சிக் கலைப்பு



"எதுக்கு அந்தக் கட்சிக்காரங்க மேடையில பாய் போட்டு உட்கார்ந்திருக்காங்க?"

"அவங்களுக்கு நாற்காலி ஆசையெல்லாம் கிடையாதாம்!"

– கொங்கணாபுரம் வே. செந்தில்

நடக்கிறதோ இல்லையோ, மனோரீதியாக தி.மு.க. பாதிக்கப்பட்டிருக்கிறது."

"சட்டம் ஒழுங்கு பற்றி எதிர்க்கட்சித் தலைவர் என்ற முறையில் உங்கள் கருத்து என்ன?"

"தேர்தலை ஒட்டி கோவை வெடிகுண்டுச் சம்பவங்கள் நடந்ததால் வோட்டுச் சிந்தனையோடுதான் செயல்பட முடிந்தது. ஆனால் இப்போது போலீஸுக்கு முழுச் சுதந்தரம் கொடுத்திருக்கிறார்கள். அவர்களும் தீவிர நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள். சட்டம் ஒழுங்கு மோசம் என்று சொல்ல முடியாது. ஆனால் பயங்கரவாதிகள் பலர் இன்னமும் தலைமறைவாக இருப்பதால் மக்களிடம் ஒருவித பீதி இருக்கிறது."

"தி.மு.க. அமைச்சர்களின் செயல்பாடு பற்றி என்ன சொல்கிறீர்கள்?"

"அரசு இயந்திரத்தை நன்கு புரிந்து கொள்ளாமல் செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். பெரும்பாலோருக்கு அதிகாரிகள் சொல்வதே சரி என்ற நம்பிக்கை இருக்கிறது. சுயமாகச் சிந்தித்து மக்களுக்கு எது நல்லது என்று முடிவு செய்யும் போக்கு இல்லை. ரேஷன் கடைகளில் தில்லுமுல்லுகள் தொடர்கின்றன. போக்குவரத்துத் துறையில் அதிருப்தி தரும் விஷயங்கள் இருக்கின்றன!" ●

சந்திப்பு : **ப்ரியன்**

படம் : **ஸ்ரீஹரி**


மீண்டும்
காஜோல்!



மின்சாரக் கனவு என்கிற பெரிய வெற்றிப் படத்தில் நடித்தும் தொடர்ந்து தமிழில் தலைகாட்டாமல் இருந்து வந்த காஜோல், இப்போது மீண்டும் வருகிறார். சிவசக்தி பாண்டியன் தயாரிப்பில் (இன்னும் பெயரிடப்படாத) முரளி நடிக்கும் படத்தில் இந்த மும்பைத் தென்றல் மறுபடி எட்டிப் பார்க்கிறது. காஜோலை மும்பையில் சந்தித்து 'ஏன் இத்தனை நாள் இடைவெளி?' என்று கேட்டோம்.

''மின்சாரக் கனவு மிகப் பெரியவொரு நிறுவனம் (ஏவிஎம்) தயாரித்து, பெரிய டைரக்டர், ரகுமான் இசை

"எனக்கு இன்னும் காதலிக்கும் வயசு வரலை!"

என்று பிரும்மாண்டமாக எடுக்கப்பட்ட படம். ஆனால் அந்தப் படத்தில் நடித்த அனுபவம் என்னைப் பொறுத்தவரை கசப்பானதுதான். ஏகப்பட்ட கால்ஷீட் வாங்கி அநியாயத்துக்கு வீணடித்தார்கள். எடுத்த காட்சிகளையே திரும்பத் திரும்ப எடுத்து, பொறுமையைச் சோதித்தார்கள். அந்தப் படத்தில் நடித்ததற்குப் பதிலாக நான் இரண்டு இந்திப் படங்களை ஒப்புக் கொண்டு நடித்து முடித்திருக்கலாம். பொதுவாக தமிழ் தயாரிப்பாளர்கள் - இயக்குநர்கள், வீணான காலதாமதம்

செய்வதில்லை என்று இண்டஸ்ட்ரியில் ஒரு பேச்சு உண்டு. ஆனால் என் அனுபவம் ஏனோ அப்படியாகிவிட்டது. அதனால்தான் தொடர்ந்து வந்த எந்த வாய்ப்புக்களையும் ஏற்றுக் கொள்ளவில்லை."

"இப்போது சிவசக்தி பாண்டியனின் படத்தில் நடிக்க ஒப்புக் கொண்டிருப்பதாகத் தெரிகிறதே!"

"யெஸ். பாண்டியன், தொடர்ந்து வெற்றிப் படங்களையே தருகிற தயாரிப்பாளர். அவரது நிறுவனம், நாடு முழுக்கத் தெரிந்த ஒரு பிரபல நிறுவனம். எனக்கு சொல்லப்பட்ட கதை நன்றாக இருந்தது. நடிப்பதற்கு நல்ல ஸ்கோப் உள்ள படம். அதனால் நடிக்கிறேன். பாண்டியன், எதிலும் தாமதம் செய்யமாட்டார் என்பதும் முக்கியக் காரணம்."

"பொதுவாக ஹீரோயின்களுக்கு யாரும் கதை சொல்வதில்லையே? உங்களுக்குக் கதை கேட்டு நடிப்பது கட்டி வருகிறதா?"

"நீங்கள் சொல்வது வாஸ்தவம். ஆனால் அதெல்லாம் அறிமுகமான புதிதில்தான். கொஞ்சம் பிரபலமாகிவிட்டால் நமக்கும் ஹீரோக்களுக்குத் தருகிற மரியாதை கிடைக்கிறது. "மேடம், உங்களைச் சுற்றித்தான் கதை அமைந்திருக்கிறது" என்று காது நிறைய பூ சுற்ற ஆரம்பித்து விடுவார்கள்" (சிரிக்கிறார்).

"கவர்ச்சிக்காக மட்டும் அல்லாமல் நடிப்பதற்குமான ஹீரோயினாக நீங்கள் கருதப்படுகிறீர்கள். வில்லி வேஷத்துக்கு விருதெல்லாம் வாங்கியிருக்கிறீர்கள். ஆனால், பெரும்பாலும் ஹீரோ ஓரியண்டட் சப்ஜெக்ட்களாக மட்டுமே வரும்போது உங்கள் மன நிலை எப்படி இருக்கும்?"

"அப்படி அமைவது வழக்கமாகிவிட்டது. ஆனால், அதையும் மீறி ஷர்மிளா தாகூர், ஹேமமாலினி போன்றோர் புகழ் பெறவில்லையா? என்னாலும் அப்படி முடியும். இப்போது நான் கோவிந்தாவுடன் நடித்துக் கொண்டிருக்கும் படம் கூட, ஹீரோ சப்ஜெக்ட்தான். ஆனாலும் என் திறமையைக் காட்ட நிறைய வாய்ப்புக் கொடுத்து, திரைக் கதை அமைத்திருக்கிறார்கள். அதைப் பயன்படுத்திக் கொண்டால் போயிற்று."

"பொதுவாக எல்லா நடிகைகளுமே கேரக்டர் பற்றிப் பேசி, ஆனால் கவர்ச்சியாகவே நடிக்கிறார்கள். ஏன் இந்த முரண்பாடு?"

"இது காலம் காலமாக இங்கு இருந்து வருகிற விஷயம்தானே? ஒரு நடிகை தன் முதல் பத்து படங்களில் வாயே திறக்க முடியாது. சொன்னபடி செய்தால்தான் ஃபீல்டில் நிலைக்க முடியும். பிறகு நிலைத்த பின், நம் விருப்பத்தையும் வெளிப்படுத்தலாம். ஆனால் போட்டி மிகுந்த சினிமா உலகில் நிலைப்பதற்கு கிளாமராக நடிப்பது ரொம்ப அவசியமாகி விட்டது. நாம் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் அதைத் தவிர்க்க முடியாது என்கிற சூழ்நிலை உருவாகி விட்டது."

"இந்தி நடிகைகளின் காதல் கதைகள் வெகு பிரபலம். உங்கள் காதல் அனுபவங்கள் பற்றிக் கூறுவீர்களா?"

"ஸாரி. எனக்கு இன்னும் காதலிக்கிற வயது வரவில்லை."

"நிஜமாகவா சொல்கிறீர்கள்?"

"ஆமாம். ஒரு 24 - 25 வயது ஆன பிறகுதான் காதல் பற்றி யோசிக்க வேண்டும். அப்போது வரக் கூடிய காதல்தான் உண்மையானது."

"கடவுளே! உங்களுக்கு இப்போது 24 வயது கூட ஆகவில்லை என்கிறீர்களா?"

"ஷ்யூர்!"

(ஹூஉம்!)

"உங்கள் லட்சியப் பாத்திரம்?"

"விஜயசாந்தி மாதிரி ஆக்ஷன் கேரக்டரில் நடிக்க விரும்புகிறேன். இதுவரை அப்படியொரு வாய்ப்பு வரவில்லை. வந்தால், என் சம்பளத்தைக் கூடக் குறைத்துக் கொள்ளத் தயார்!"

(தெலுங்கு தயாரிப்பாளர்கள் கவனிக்கவும்.)

பேட்டி : **நீலா**

"நேத்திக்கு எங்க டாக்டர், ஞாபகமறதியில, அஞ்சாம் நம்பர் ரூம் பேஷண்ட்டுக்கு பண்ண வேண்டிய ஆபரேஷனை ஆறாம் நம்பர் ரூம் பேஷண்ட்டுக்குப் பண்ணிட்டார்!"

"ஐயையோ! அப்புறம்?!"

"கடைசியிலே, அந்த ரெண்டு பேஷண்ட்டுகளுக்கும் ரூம்களை மாற்றி சரி பண்ணிட்டார்!"

— யமுனா ரெங்கநாதன்



ஓயாத போராட்டம்!

இந்த வார இளைஞர்:



• சுரேஷ்

"இந்த இளைஞரின் திறமை பிரமிக்கத் தக்கதாக உள்ளது. வெகு சீக்கிரம் இவர் இந்திய அணிக்குள் நுழைந்து விடுவார்!" என்று அஸாரும் டெண்டுல்கரும் ஒரு சேரப் பாராட்டியுள்ளார்கள்.

பாராட்டப்பட்டவர் – சுரேஷ்! சுரேஷுக்கு வயது 23. சென்னை குருநானக் கல்லூரியில் படித்த சுத்தத் தமிழர். ஆனால் கோவாவுக்காக ரஞ்சி கிரிக்கெட் ஆடுபவர்.

பிரமாதமான ஆல் ரவுண்டரான சுரேஷைச் சந்தித்தோம். தமிழக அணியில் ஆடாமல் மெனக்கெட்டு கோவா அணியில் சேர்ந்து ஏன் ஆடவேண்டும்?

கேட்டதும் சோகம் கவ்விக் கொண்டது அவரை.

"நானா ஆடமாட்டேன் என்கிறேன்! இங்கே இடம் கிடைக்கவில்லையே!" என்கிறார் பாவமாக.

இத்தனைக்கும் இந்த வருடம்தான் கோவாவுக்காக ரஞ்சிப் போட்டியில் களமிறங்கியிருக்கிறார் சுரேஷ். வந்த சூட்டிலேயே தமிழக, ஐதராபாத் அணிகளுக்கெதிராக ஆடி, விளாசி இருக்கிறார். ராபின் சிங், ரமணா போன்ற டெஸ்ட் வீரர்களை எதிர் கொண்டு ஆடி சதமடித்தது மட்டுமல்லாமல் ஐதராபாதுக்கு எதிரான போட்டியில் ஆறு விக்கெட்டுகளையும் வீழ்த்தி தேர்வாளர்களை அசர வைத்திருக்கிறார்.

"அந்த மேட்ச் முடிந்ததும் அஸாரே நேரில் என்னைக் கூப்பிட்டு, "நீ ரொம்ப நன்றாக ஆடுகிறாய்" என்று பாராட்டி விட்டுப் போனார். அவர்தான் சச்சினிடமும் என்னைப் பற்றிச் சொல்லியிருக்க வேண்டும்" என்கிறார் பெருமிதம் பொங்க.

இரண்டு வருடங்கள் ஓயாமல் போராடியிருக்கிறார் சுரேஷ். எதற்கு? எப்படியாவது தமிழக அணியில் இடம் [illegible] மறுக்கப்பட்டிருக்கிறது.

"இங்கே ரஞ்சிப் போட்டியில் ஆடினால் நான் இந்தியாவுக்காக ஆட வாய்ப்புப் பெற முடியும். தமிழ்நாட்டில் அதற்காக முயன்று கிட்டத்தட்ட என் நம்பிக்கையே இடிந்து போகத் தொடங்கிய நேரம் வி.பி. சந்திரசேகர் கோவா அணியில் ஆட வாய்ப்பு பெற்றுத் தந்தார்.

அங்கே ஆடத் தொடங்கிய முதல் வருடமே 480 ரன்கள், 21 விக்கெட்டுகள் எடுத்தேன்" என்கிறார்.

தமிழக அணி அளவுக்கு கோவா ரஞ்சி அணி, இந்திய கிரிக்கெட் போர்டு தேர்வாளர்களால் கவனிக்கப்படுவதில்லை. ஆகவே எப்படியாவது த.நா. அணிக்கு ஆட வர வேண்டும்; தற்போதைய சாதனைகள் அதற்கு உதவும் என்று நினைக்கிறார் சுரேஷ்.

"ஆனால் வெறுமனே அணியின் உள்ளே இருந்து பயனில்லை. ஆட வாய்ப்புத் தர வேண்டும். என்னை நிரூபிக்க ஒரு சந்தர்ப்பத்தை எதிர் பார்த்துக் கொண்டிருக்கிறேன்" என்கிறார் சுரேஷ்.

தேர்வாளர்கள் காதில் விழ வேண்டும்.

— சிம்மம்

மும்பை மசாலா :

பாடம் புதிது!

மஹாராஷ்ட்ராவில் பி.ஜே.பிக்கும் சிவசேனைக்கும் கட்டாயக் கல்யாணம் என்று 'இடி'த்துக் கொண்டிருப்பவர்களுக்குப் புதிய அவல் – சிவசேனைக்கும் 'சிவ சைனிக்'குகளுக்குமே ஒத்து வரவில்லை! பிரச்னைகளைப் பிரகடனப் படுத்தும் வேலையை பிள்ளையார் சுழி போட்டுத் துவக்கியிருக்கிறார் கணேஷ் நாயக்! இவரை, அமைச்சர் பதவியிலிருந்து ராஜினாமா செய்யுமாறு ஜோஷி கூறிய போது, தகுந்த காரணமின்றி, ஜோஷி என்ன, தாக்கரேவே ஆணையிட்டாலும் அடிபணிய முடியாது என்று மறுத்து விட்டார். உடனே பதவியிறக்கமும் செய்யப்பட்டார். இவருக்கு ஆதரவான 27 சிவசேனை கார்ப்பொரேட்டர்கள், உடனடியாகக் கட்சியிலிருந்து விலகி, ஒரு புதிய அமைப்பை உருவாக்கியுள்ளனர். நடக்க இருக்கும் மேயர் தேர்தலை இது எக்கச்சக்கமாக பாதிக்கும் என நம்பப்படுகிறது. 'உட்கார்' என்றால் மறு பேச்சில்லாமல் நாற்காலியில் உட்காருபவர்கள் எல்லாம், 'இறங்கு' என்ற உடனே அதேபோல் இறங்கி விடமாட்டார்கள் என்ற புதிய பாடத்தை ரிமோட் கண்ட்ரோல்காரர் கற்றிருப்பார்!

புகுந்த வீட்டுக் கொடுமையில்

கலங்கியவர் கலக்குகிறார்

முன்னாள் மாமியார், நாத்தனார், கொழுந்தனார் இவர்களுடன் சொந்தப் பிள்ளையுமே கிரிக்கெட் 'பாட்'டை எடுத்துக் கொண்டு வந்து ஒரு முன்னாள் பிரபலத்தை பந்தாடியிருக்கிறார்கள் என்பதை நம்ப முடிகிறதா? 'தம் மாரோ தம்' என்று விசிறிகளுக்கு உபதேசித்த ஜீனத் அமானையும், அவரது நண்பர் ஜாஹீர் அஸ்லாமையும், வீட்டிலிருந்த ஃபர்னிச்சர்களையும்தான் 'தம் தமால்' என்று த்வம்சித்திருக்கிறார்கள், அவரால் 'விவாகரத்து'ச் செய்யப்பட்ட மஜார்கான் குடும்பத்தினர். குழந்தைகள் யார் பொறுப்பிலிருப்பது என்பது பற்றி ஏதோ 'கசமுச'வாம்! ஊரைக் கூட்டி, பத்திரிகையாளர்களையும் கூட்டி, ஒரு கலக்கு கலக்கி விட்டார் ஜீனத்! அவருடன் டிம்பிள் கபாடியாவும், ஹனி இரானியும் சேர்ந்து கொண்டு, ஆண் ஆதிக்கத்தையும், புகுந்த வீட்டுக் கொடுமைகளையும் எதிர்த்துப் போராடும்படி எல்லா பெண்களையும் உசுப்பி விட்டிருக்கிறார்கள்! இவர்களைப் போன்ற நட்சத்திரங்களுக்கே இந்த கதி என்றால், சாதாரணர்கள் எப்படிப் போராடுவதென்பதையும் கொஞ்சம் விளக்கமாகச் சொன்னால் உபயோகமாக இருக்குமே?

'பல்'லுக்குப் 'பல்'லெடுத்து...

நவால்கரால் நியமிக்கப்பட்டு, தற்போது அனில் தேஷ்முக்கால் பராமரிக்கப்படும் "thought police"க்கு எக்கச்சக்க வேலை! மாட்டியிருப்பது, 'காடில்லா'வின் உள்ளாடை விளம்பரம்! விளம்பர மாடல்கள் வெறும் உள்ளாடைகளுடன் காட்சியளித்தது ஒருபுறம் கொந்தளிப்பை ஏற்படுத்த, ஆண் மாடல் கினா மொரியா, சயனித்திருக்கும் பெண் மாடலான பிஷா பாஸுவின் "பாண்ட்டி"யை வெறும் பல்லால் உருவ, சாட்டையை உருவி விட்டார்கள் மும்பையின் புதிய கலாசாரப் பாதுகாவலர்கள். "பல்லுக்கு உறுதி காடிலா பாண்ட்டீஸ்" என்று சொல்ல வந்தார்களோ என்னவோ? விளம்பரத்தை வாபஸ் பெறாவிட்டால் பல்லைத் தட்டிக் கையில் கொடுத்து விடுவேன் என்கிறார்களே?


"பஞ்ச்"சாக்ஷரி!

பொது நிகழ்ச்சிகளில், அதுவும் சமூக சேவை நிகழ்ச்சிகளில் கலந்து கொள்பவர்கள் அனைவரும் கங்கையில் குளித்து,

திருநீரை அபிஷேகித்துக் கொள்ளும் புனிதர்களாய் இருக்க வேண்டுமென யாரும் எதிர்பார்க்காவிட்டாலும், 'சைவ உணவு மட்டுமே சாப்பிடு' என உபதேசிக்க வருபவர், அட்லீஸ்ட் மாமிசம் சாப்பிடாமலிருக்க வேண்டும் என்றாவது எதிர்பார்க்கலாமல்லவா? அண்மையில் 'கான்சர் பேஷண்டுகள் எய்டு'க்காக அந்தாக்ஷரி நடத்தி, அவர்களை எல்லாம் குஷிப்படுத்தியது நல்ல விஷயம்தான்! ஆனால் நிகழ்ச்சியைத் தொகுத்தளித்த பல்லவி ஜோஷியும், அனு கபூரும்



* பால் தாக்கரே



நாட்டைக் கலக்கிய நடிகை!

புகைமண்டலத்திலேயே மிதக்கும் பயங்கர ஸ்மோக்கர்ஸ்! முதலில் இவர்களுக்கு "லங்-கான்சர்" வராமலிருக்க வேண்டுமே என்று கூட்டத்தில் ஒருவர் விசனப்பட்டது, நல்ல 'பஞ்ச்'!

'போக்குவரத்து' கவலைகள்


மும்பையில் இப்போதெல்லாம் தடுக்கி விழுந்தால், ஏதாவதொரு "ஃப்ளை ஓவரில்"தான் தடுக்கி விழ வேண்டும்! ஃப்ளை ஓவர்களுக்கான வேலை ஜரூராக நடக்கும் போர்வையில், ஆங்காங்கே சாலைகள் ரிப்பேராகிக் கிடக்கின்றன! பிரதான சாலைகளில் ஏற்கெனவே ஆமை வேகத்தில் ஊர்கின்ற வாகனங்களை, இப்போது சக்கரமே இல்லாமல் கூட நகர்த்திக் கொண்டு போய் விடலாம்; அவ்வளவு ட்ராஃபிக் ஜாம்! மழைக்காலம் வருகிறதே என்ற கவலை மக்களுக்கு! தேர்தல் நெருங்குகிறதே என்ற கவலை அரசுக்கு. இன்னும் பாக்கியிருக்கும் ஆட்சிக் காலமான இரண்டாண்டிற்குள் எதையாவது செய்து காட்டி சாதனை படைத்தாக வேண்டுமே! ஆட்சியைப் 'போக்கிக்' கொள்ளாமல், மீண்டும் "வர"த்தான் இந்த உத்தி என்றாலும், அப்படியாவது போக்குவரத்துப் பிரச்னைகள் தீர்ந்தால், சரிதான்!

— ஜெயஸ்ரீ ராஜ்



• 'அக்னி' ஏவுகணை

• பாக். தயாரிப்பு - கோரி



போக்ரானில் நடந்த அணுகுண்டு பரிசோதனைகள் பாதுகாப்பு நடவடிக்கையா? மிரட்டலா...? எதிர் மிரட்டலா....? முடிவே காண முடியாத அபாயகரமான விளையாட்டுதான் அணு ஆயுத ஆயத்தங்கள்!

"நாங்கள் வன்மையாகக் கண்டிக்கிறோம். மற்ற நாடுகளும் இதைக் கண்டிக்க வேண்டும் என விரும்புகிறோம்" என்று கூறியுள்ளார் பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சர். மூன்று அணுகுண்டு சோதனைகளை இந்தியா வெற்றிகரமாக நடத்திய தற்குத்தான் இந்தக் கண்டனம்.

அதே சமயம் இரு வாரங்களுக்கு முன் "இனி வாலாட்ட நினைப்பதற்கு முன் நம் எதிரி நூறு முறை யோசிப்பான்" என்று பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரிப் வெடிச் சிரிப்புடன் கூறியது நினைவுக்கு வருகிறது. ('எதிரி' என்று அவர் குறிப்பிட்டது இந்தியாவை என்பது சொல்லாமலே புரிந்திருக்கும்). அவரது அன்றைய துள்ளலுக்குக் காரணம் 'கோரி' - சென்ற மாதம் பாக் விஞ்ஞானிகளால் வெற்றிகரமாகப் பரிசோதிக்கப்பட்ட ஏவுகணை.

சுமார் 1,500 கிலோ மீட்டர் தூரம் வரை கோரி ஏவுகணையால் சேதம் விளைவிக்க முடியும். அதாவது இஸ்லாமாபாதிலிருந்து இந்த ஏவுகணையை இயக்கினால் சென்னை நகரம் கூட நாசமாகும்.

போர் ஆயுதங்கள் விஷயத்தில் பாகிஸ்தான் எப்போதுமே முனைப்புக் காட்டி வந்திருக்கிறது. 'பக்கத்திலேயே ஒரு பிரம்மாண்டமான நாட்டைப் பகைத்துக் கொண்டிருக்கிறோமே' என்ற 'காம்ப்ளெக்ஸ்' காரணமாக பலவித பொருளாதார நெருக்கடியிலும் போர்த்தளவாடங்களை வாங்கிக் குவித்துக் கொள்வதில் மட்டும் பாகிஸ்தான் சலிப்புக் காட்டியதே இல்லை. தவிர, உள்ளூர் பிரச்னைகள் தலைகாட்டும் போதெல்லாம் காஷ்மீர் பிரச்னையை உணர்ச்சி பொங்கக் கிளறி விட்டு, இந்தியாவுக்கெதிராகத் தங்கள் மக்களைக் கொம்பு சீவிவிட்டு, திசை திருப்புவதில் பேனசீரிலிருந்து நவாஸ் வரை எல்லோருமே ஒரே கட்சிதான்!

எண்பதுகளிலேயே "நவீனமுறை போர் செயல்திட்டங்களிலும் இனி பாகிஸ்தான் தன்னிறைவு பெற முயற்சிக்கும்" என்று அறிவித்தார் டாக்டர் அப்துல் காதிர் கான் -

பழைய சரித்திரம்; புதிய ஏவுகணை!

இவர் 'பாகிஸ்தானின் அணு ஆயுதத் திட்டங்களின் தந்தை' என்ற பாராட்டப்படுபவர். அமெரிக்கா மற்றும் சீனா ஆகிய நாடுகளிலிருந்து போர் விமானங்களைத் தொடர்ந்து வாங்கி வந்தாலும், நவீன போர் ஆயுதங்களான ஏவுகணை, அணு ஆயுதங்கள் ஆகியவற்றையும் ஸ்டாக் செய்ய ஆரம்பித்தது பாகிஸ்தான். ஆக 'கோரி' ஒன்றும் எதிர்பாராத ஒன்றல்ல. என்றாலும் இது அதிர்ச்சி அலைகளை ஏற்படுத்தி உள்ளதென்றால் அதற்குப் பல்வேறு காரணங்கள்.

அணு சக்திக் கொள்கைகளை மறுமதிப்பீடு செய்யப் போவதாகவும், தேவைப்பட்டால் அணு ஆயுதங்களைப் பயன்படுத்துவதில் தங்கள் கட்சிக்கு எந்தவித ஆட்சேபமுமில்லையென்றும், "பா.ஜ.க.வின் அறிவிப்புக்கு பதிலடிதான் கோரியா?" என்ற கேள்விக்கு, "பதிலுக்கே அவசியமில்லை. எங்கள் செயல்பாடுகளே எங்கள் எண்ணத்தைப் பிரதிபலிக்கின்றன" என்றும் கூறினார் நவாஸ் ஷெரிப்!

கோரி முழுக்க முழுக்க பாகிஸ்தான் விஞ்ஞானிகளால் வடிவமைக்கப்பட்ட ஒன்று என்று நவாஸ் கூறினாலும், 'வடகொரியாவிலிருந்து கடத்தப்பட்டு வந்த தொழில் நுட்பம் இது' என்று குறிப்பிட்டிருக்கிறது டைம்ஸ் இதழ். வடகொரியாவின் 'நோ-டாங்' தொழில் நுட்பம்தான் கோரியில் பயன்படுத்தப்பட்டிருக்கிறதாம். (வளைகுடாப் போரில் சதாம் உசேன் பயன்படுத்திய ஸ்கட் ஏவுகணைக் குடும்பத்தின் ஓர் உறுப்பினர்தான் நோ-டாங்!)

இது மட்டுமல்ல! ஜெர்மனி, ஜப்பான், அமெரிக்கா ஆகிய நாடுகளிலிருந்தும் பாகிஸ்தான் போர்த் தளவாடங்களை இறக்குமதி செய்ததுண்டு. அவ்வளவு ஏன், சர்வதேச அரங்கில் பாகிஸ்தானை ஆதரிக்காத சோவியத் யூனியன் உடைந்த பின், தனி நாடுகள் ஆன உக்ரெய்ன், போலந்து ஆகிய நாடுகளுடன் கூட பாகிஸ்தான் இந்த வகை வணிகத்தில் ஈடுபட்டிருக்கிறது!

இந்தியா தனது 'பிருத்வி' ஏவுகணையை பாக். எல்லையில் நிறுவியதற்கு பதிலடிதான் 'கோரி' என்பவர்கள் உண்டு. எதிர் உணர்வுகள் கொண்ட நாடுகளுக்கிடையே இப்படிப்பட்ட செயல்பாடுகள் ஒன்றும் அதிசயம் அல்லதான். ஆனால் தனது ஏவுகணைக்கு பாகிஸ்தான் சூட்டிய பெயரில்தான் அதன் குசும்பு பளிச்சென்று தெரிகிறது. பிருதிவிராஜ் சௌஹான் என்ற ராஜபுதன மன்னனை முஸ்லிம் மன்னனான கோரி யுத்தத்தில் வென்றான். நமது ஏவுகணையின் பெயர் ப்ருத்வி... பாக் ஏவுகணை கோரி...!

இந்தியாவைப் பொருத்தவரை தன் ஏவுகணைக்கு 'பிருத்வி' என்று பெயர் வைத்தது ரொம்பத் தற்செயலான ஒன்று. பஞ்சபூதங்களில் ஒன்று என்ற அர்த்தத்தில்தான் 'பூமி' என்ற பொருள் வரும் பிருத்வி என்ற பெயரை அது தேர்ந்தெடுத்தது. (ஏற்கெனவே 'அக்னி' என்று தனது ஒரு ஏவுகணைக்கு அது பெயரிட்டுள்ளது.)



• அப்துல் காதர் கான்

இந்திய ராணுவத்தைச் சேர்ந்த சிலர் இப்போது வேறொன்றையும் சுட்டிக் காட்டுகிறார்கள்.

"மூன்று முறை கோரியைத் தோற்கடித்து சிறைப் பிடித்தவன் பிருத்வி. ஆனாலும் தனது இளகிய மனம் காரணமாக அவனை அப்போதெல்லாம் விடுவித்ததன் காரணமாகத்தான் இறுதி முடிவு வேறு மாதிரி அமைந்து விட்டது. எனவே நாம் இளகி விடாமல் எச்சரிக்கையாய் இருக்க வேண்டும்" என்கிறார்கள்!


'அக்னி'யின் தொடர் சோதனை, ஹைட்ரஜன் அணுகுண்டு சோதனை போன்ற நடவடிக்கைகள் இந்த எச்சரிக்கையின் எதிரொலிதான் என்று சமாதானம் சொல்லப்படுகிறது.

— ஜி.எஸ்.எஸ்.

சிலருக்குக் கோணலாகவே எல்லாமும் படும்...

ஒரு குருகுலத்தில் ஆசார்யர் சிஷ்யனுக்குச் சொல்லிக் கொடுத்துக் கொண்டிருந்தார் :

காஷாய தண்ட மாத்ரேணா
யதி : பூஜ்யோ நசம்சய :
– இதன் அர்த்தம்



என்ன...?

காஷாயம் உடுத்திக் கொண்டிருக்கிறார்; கையிலே ஏகதண்டமோ த்ரிதண்டமோ வைத்துக் கொண்டிருக்கிறார். அப்படிப்பட்ட ஒருவருக்கு யதீச்வரர் என்று பெயர். இந்த சன்னியாச ஆசிரமம் ரொம்ப விசேஷமானது. அதை நாம் கொண்டாட வேண்டும். சேவிக்க வேண்டும். நித்தியம் பஜிக்க வேண்டும். ஆகையினாலே அந்த குரு தம் சிஷ்யனுக்குச் சொல்லிக் கொடுத்தார், காஷாய - தண்டத்துடன் இருப்பவர்கள் பூஜிக்கத்தக்கவர்களாவார்கள். நசம்சய : 'இந்த விஷயத்திலே நீ சந்தேகமே கொள்ளாதே...' என்று சொல்லிக் கொடுத்தார்.

சிஷ்யன் என்ன செய்தான்...? வீட்டுக்குப் போனான். போய்ப் படிக்க ஆரம்பித்தான். எப்படிப் படித்தான்?... 'யதி : பூஜ்யோ ந,' என்று 'ந'வைப் பிரித்து ஒரு கமா போட்டு நிறுத்தினான். இதனால் என்ன அர்த்தம் ஆயிற்று...? 'காஷாய தண்ட மாத்திரத்தினாலேயே மட்டும் யதிகள் பூஜிக்கத் தக்கவர்கள் அல்லர்... ஏனென்றால், அவர்கள் நிஜமான யதியா அல்லவா என்பது சந்தேகாஸ்பதமாக இருக்கிறது... பரீக்ஷை பண்ணிப் பார்த்தால்தான் தெரியும்...' - இப்படி அர்த்தம் மாறி விட்டது!

'காஷாய, தண்டத்தைக் கண்டால் சேவி, நமஸ்காரம் பண்ணு' என்று ஆசார்யர் சொல்லிக் கொடுத்தால், காஷாய தண்டத்தை நம்பக் கூடாது; பரீக்ஷை பண்ணித்தான் அவர்களை நம்ப வேண்டும் என்று அர்த்தம் பண்ணிக் கொள்வது விபரீத புத்தி இல்லையா?

ஆகையினாலே நமது புத்தியானது, தூய்மையாய் இருக்க வேண்டும். அந்யதா ஞானம், விபரீத ஞானம், சம்சயம் - இதெல்லாம் இல்லாமல் அது விஷயத்தை கிரஹிக்க வேண்டும்.

ஒன்று சொன்னால் அதை வேறொன்றாக மாற்றி நினைப்பது, விபரீதமாக நினைப்பது - இப்படிப்பட்ட புத்தி மாறாட்டங்களைப் போக்கடிக்கக்கூடியவன் பகவான்தான். ஆகையினாலே பரமாத்மாவை தியானம் பண்ண தியானம் பண்ண....

'சுமதிம் பஜாமஹே' - நல்ல புத்தியை, அழுக்கில்லாத புத்தியை அவன் நமக்குக் கொடுக்கிறான்.

இப்படி நம் புத்தியைத் தூய்மைப்படுத்தி தெளிவாக்குகிறதனாலேயும் அவனுக்கு அமலத்வம் என்கிற குணம் உரியதாகிறது. அமலன் ஆதிபிரான்; அமலன் அவியாத சுடர், அளவில்லா ஆராவமுதமாய் இருந்து நம்மை ரக்ஷித்துக் கொண்டிருக்கிறான். யார் அவன்...? சூர்ய மண்டல அதிபதியான விஷ்ணு. ஓம் விஷ்ணவே நம : என்று சொல்லும் போது இந்த அமலத்வமாகிற குணம் சொல்லப்படுகிறது.

இரண்டாவது ஒன்பதிலே, இரண்டாவது குணம் ஆச்ருத வாத்ஸல்யத்வம்.

வத்ஸலன் என்று பகவானுக்குப் பெயர்.

சமாச்ருதாள் யாராகயிருந்தாலும் ரக்ஷிக்கிறேன் என்கிறான் பகவான். அடிபணிந்தவர்களுக்கு மிகவும் சுலபன் அவன். அடிபணியாதவர்களால் அவனை கிரஹிக்க முடியாது.

சுவாமி தேசிகன், பாதுகாசஹஸ்ரத்திலே ரொம்ப அழகாகச் சொல்கிறார்.


பரதனுடைய ஆராதனைக்குரிய ராமபாதுகை இருக்கிறதே... அது என்ன பண்ணுகிறது என்று கேட்டால், உயர்ந்தவர்களுக்குத் தாழ்வைக் கொடுக்கிறது அது. தாழ்ந்தவர்களுக்கு உயர்த்தியை உண்டுபண்ணுகிறது!

இதிலே ஒன்று நமக்குப் பிடிக்கிறது; இன்னொன்று பிடிக்கவில்லை!

தாழ்ந்தவர்கள் உயர்கிறார்கள் என்றால் ரொம்ப சந்தோஷம்தான். ஆனால் உயர்ந்தவர்கள் தாழ்வதாவது...?

அதற்கொரு நயமான விளக்கம்- ஏற்கெனவே இதைச் சொல்லியிருக்கிறேன்... திருவேங்கடமுடையான் திருமலைமேலே அழகாகப் பிரகாசிக்கிறான். குரங்குகள் இங்கேயும் அங்கேயும் தாவிக்கொண்டேயிருக்கின்றன.

அருள்வாக்கு



மனுஷ்ய ஸ்வபாவத்தைப் பார்த்தால் சொத்து, ஸ்வதந்த்ரம் உள்ளவன்தான் லஞ்சம் வாங்குகிற வாய்ப்பு குறைச்சல். இப்படி நான் சொன்னால் நீங்கள் ஒப்புக் கொள்ளாமல் சண்டைக்கு வரலாம். பேர் பேராக ஆஸாமிகளைக் காட்டி, 'லக்ஷம், பத்து லக்ஷம் என்று சேர்ந்த பிற்பாடும் இவர்களெல்லாம் இரண்டு கையாலும் வாங்கிக் கொண்டே இருக்கிறார்களே!' என்று கேட்கலாம். ஆனாலும் இப்படி வாழ்க்கையே பணம்தான் என்று பணத்துக்காகப் பறக்கிற போக்கு நம்மிடையே ஏற்பட்டது ஸமீப காலத்தில்தான். ஆத்ம ஸம்பத்து தேய்ந்து கொண்டே வந்து, அதே ஸமயத்தில் நூதன நூதனமாக போக்யப் பொருள்கள் கடைக்கு வருவதாகவும், பேப்பர் ரூபாயென்றும், அதை லக்ஷம் கோடி என்று பாங்க் என்பதாக ஒன்றில் எவ்வளவு வேண்டுமானால் போட்டு வைக்கலாம்

ஸ்ரீரங்கத்திலே படுத்தவண்ணமிருக்கிறானே... அவன்தான் இங்கே மேலே இருக்கிறான் என்கிறார் திருப்பாணாழ்வார்.

எதற்காக அங்கே திருமலையிலே நின்றான்...?

தேவதைகளுக்கெல்லாம் ரொம்பவும் கஷ்டம் வந்துவிட்டதாம். ரொம்ப வியசனப்பட்டார்களாம். 'எங்கேயோ போய் படுத்துக் கொண்டு விட்டானே... நாமெல்லாம் சீக்கிரமாகப் போய் சேவிக்க முடியாத அளவுக்கு எங்கேயோ கீழே (ஸ்ரீரங்கம்) படுத்திருக்கிறானே...!' என்று கவலைப்பட்டார்களாம்.

வளமையின்புறு சோழ மண்டல
வாழ்க்கை காரண மாகவே
கருது செம்பொன்னம்பலத்திலோர்
கடவுள் நின்று நடிக்குமே
காவிரி திருக்கரையிலே ஒரு
கருணை மாமுகில் துயிலுமே!

– ஒரு கவி சொல்கிறார். சோழ வள நாடு சோறுடைத்து.

'அன்னமாகிற பரபிரும்மத்தைப் பெற்ற நாடு அது. அந்த ஸ்ரீரங்கத்திலே பள்ளி கொண்டிருக்கிறானே பரமாத்மா, அவனிருக்கிறபோது நமக்கென்ன குறை...? ராத்திரி பகலானாலென்ன? பகல் ராத்திரியானால் தான் என்ன? சூரியன் அஸ்தமித்தால் என்ன...? சமுத்திரம் வற்றிவிட்டால் என்ன...? என் ரங்கநாதன் இருக்கறச்சே எனக்கென்ன குறை...?' என்கிறார்.

இங்கே படுத்திருக்கிறவன்தான் அங்கே நிற்பதாக – திருவேங்கட மலைமேல் நிற்பதாகத் தெரிகிறது. ஆகையினாலே இவரிடத்திலே ஈடுபட்ட ஆழ்வார், திருவேங்கட மலைக்குப் போனார்.

அவன் ஏன் அங்கே நிற்கிறான்...?

தேவதைகளுடைய பிரார்த்தனையின் பேரில் அங்கே நிற்கிறான். மேலே இருக்கிற தேவதைகளையெல்லாம் கீழே இறங்கி வரும்படிப் பண்ணுகிறான்.

நம்மை மேலே ஏறச் சொல்கிறான்... அவர்களை இறங்கச் சொல்கிறான். அவர்களை இறக்கி, நம்மை ஏற்றி... இரண்டு பேரையும் ஏக கோஷ்டியில் நிற்க வைத்து, அனுக்கிரஹம் பண்ணுகிறான்.

வானவர்க்குச் சமமாய் நம்மை ஏற்றி அனுக்கிரஹம் பண்ணுகிறானே.... அவனுடைய காருண்யத்தை என்னவென்று சொல்வது!

'ஏடுகொண்டல வாடா! வேங்கட ரமணா... உன் தயையை நினைத்துக் கொண்டால் என் உடம்பு நடுங்குகிறது...' என்கிறார் ஒரு தெலுங்குக் கவி!

'குகனோடு ஐவரானோம், சுக்ரீவனோடு அறுவரானோம்', என்று சரணமடைந்தாரைச் சேர்த்துக் கொண்டான். யாரோ வான சபரிக்கு உயர்ந்த கதி கிடைத்தது. – இது ராமாயணத்தில் என்றால், கிருஷ்ணாவதாரத்திலே, மாலை கட்டித் தரக்கூடிய எளிய பூக்காரனுக்கும், அஷ்டாவக்கிரனுக்கும், குசேலருக்கும் ஐச்வர்யத்தைக் கொடுத்தது....

– இந்த நிகழ்ச்சிகளையெல்லாம் நினைத்துக் கொண்டேன். விசேஷமாக இத்தனை பேருக்கும் அனுக்கிரஹித்தாயே... உன் தயையை நினைக்கிறபோது என் உடம்பு நடுங்குகிறது! என்றார்.

உயர்ந்தவர்கள் அவனை வணங்காது போனால் தாழ்கிறார்கள். தாழ்ந்தவர்கள் வணங்கினால் உயர்கிறார்கள்.

பகவான் நம்மிடத்திலே விரும்புவது

என்றும் ஏற்பட்ட பிற்பாடுதான் நம் ஜனங்களுக்குப் பணமே குறி, பணம் சேர்ப்பதே வாழ்க்கை லக்ஷ்யம் என்று ஆனது. இதற்கு முந்தி, போக்ய வஸ்துக்களுக்கு ஓர் அளவு இருந்தவரையில், இருந்த வஸ்துக்களின் அநுபோகத்தையும் கட்டுப்படுத்தும் சாஸ்த்ரங்களில் பொதுவாக ஜனங்களுக்கு பயம் இருந்தவரையில், பாங்கில் ஸர்வ ஜாக்ரதையாக எத்தனை வேண்டுமானால் போட்டு வைத்துக் கொள்ள இடம் இல்லாத வரையில், நம்முடைய மக்களுக்குப் பணத்தில் இத்தனை ஆசை இருக்கவில்லை. அதனால் பணக்காரர்கள் லஞ்சம் வாங்கும் வாய்ப்பு அப்போது ரொம்பக் குறைவுதான். இப்போதுங்கூட, 'கம்பேரடிவ்'வாக (ஒன்றுக்கொன்று ஒப்பிட்டு) பார்த்தால், பணமே இல்லாதவன் பதவிக்கு வந்தால் 'கண்டது காணாதது மாதிரி' என்கிறபடி, வசதி படைத்தவனை விட ஜாஸ்தியாகத்தான் பணத்தாசை பிடித்துக் கை நீட்டலாம். ஸமத்வம் என்று சொல்லிக் கொண்டு இம் மாதிரியான நடைமுறை உண்மைகளை மறந்து தர்மத்துக்கும் நீதிக்கும் ஹானி செய்வது உசிதமல்ல.

- ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய ஸ்வாமிகள்.

என்ன...? இந்த வணக்கம்தான்! வணங்கினால் அனுக்கிரஹம் பண்ணுகிறான். ஆச்ரயிப்பவர்களுக்கு அவன் வத்ஸலன்.

'எல்லோரும் எனக்குச் சமம். துவேஷம் கிடையாது; இன்னார் இனியார் என்பது கிடையாது...' என்கிறான் பகவான். அப்படியானால், நல்ல முறையிலே சாஸ்திரங்களை அனுஷ்டிக்கக்கூடியவனும் ஒன்றுமே செய்யாதவனும் பகவானுக்கு ஒன்றுதானா? இந்த இரண்டு பேரையும் அவன் ஒன்றாக பாவித்தால் அது எப்படிப் பொருந்தும்...?

பகவானுடைய எண்ணத்தை நாம் சரியாகத் தெரிந்து கொள்ள வேண்டும்: அவன் திருவடியை யார் ஆச்ரயிக்கிறார்களோ, பற்றுகிறார்களோ அவர்களிடையிலே வித்தியாசம் பாராட்டமாட்டான் என்பதுதான் பொருள். வணங்குகிற எல்லோரையும் சமநோக்குடன் அனுக்கிரஹம் பண்ணுகிறான்.

கன்றுக்குட்டியினிடத்திலே பசு காட்டும் அன்புக்கு வாத்ஸல்யம் என்று பெயர்.

துர்கந்தமான ஆகாரத்தைப் பொதுவாகப் பசு சாப்பிடாது. ஆனால் அதன் கன்றுக்குட்டி வந்து ஊட்டுகிறது. குட்டியின் உடல் முழுவதும் நாற்றம்! சாணமெல்லாம் படிந்து ஒரே துர்கந்தம்! ஆனால் பசு என்ன பண்ணுகிறது...? கன்றுக்குட்டியின் உடல் முழுவதையும் நாக்காலேயே நக்குகிறது!

தனக்கு வேண்டிய ஆகாரத்திலே துர்கந்தம் வீசினால் தொட மாட்டேன் என்கிற பசு... துர்கந்தமுள்ள குட்டியை நாவால் வருடி பாலை வர்ஷிக்கிறது. இதை என்னவென்று சொல்வது...?

இதுதான் தன் 'வத்ஸத்'தினிடத்திலே கன்றுக்குட்டியினிடத்திலே – பசு காட்டும் அன்பு.

இதே அன்புதான் பகவானிடத்திலும் காணப்படுகிறது.

யாரிடத்தில் அன்பு வைக்கிறான் அவன்...? தன் திருவடியை யார் பற்றுகிறார்களோ, அப்படிப்பட்டவர்களிடத்திலே விசேஷமான அன்பு இருக்கிறது.

விபீஷணன் சரணாகதி பண்ண வந்தபோது, அவனைச் சேர்த்துக் கொள்ளக் கூடாது என்று ராமனுக்குத் தடையாய் நிற்கிறான் சுக்ரீவன். ரொம்பத் தீவிரமாகப் பேசுகிறான்...

அவனுக்குத் தக்கவிதமான பதில் வைத்திருக்கிறார் பகவான்.

(தொடரும்)



''எப்படி ஷ்யூரா சொல்றே... நான் போயிட்டு வந்தது போலி டாக்டர் கிட்டேதான்'னு?...''

– சுமன்

'தேவதா குபேர உச்சாடனம்'
(பூஜா உபதேசம்)

அன்றைய ஆண்டவன் முதலானோரும் செய்து அரிய பெருமைகளை அடைந்த பூஜைகள்தான் உச்சாடனம். ஈரேழு பதினான்கு லோகங்களிலும் என்னை மீறிய செல்வந்தன் லக்ஷ்மிகடாக்ஷம் பெற்றவன் இருக்கக் கூடாது என்று குபேரன் செய்த உச்சாடன பூஜை இது. அதே குபேரன் வீட்டில் உள்ள லக்ஷ்மிகடாக்ஷம் பூரணமாய் பொங்கி வழிய வேண்டும் என்பதற்காக லங்கேஸ்வரன் ராவணனும் செய்த பூஜைதான் உச்சாடனம். இதனை எவர் செய்கின்ற இதயவலு, இணக்கமான ஜாதக அமைப்பு இயலுமான தீய பழக்கமற்ற தன்மைகள் படைத்திருக்கின்றாரோ அவர் குபேர செல்வத்தை இந்த உபதேசத்தால் அடைவது உறுதி. தொடர்ந்து ஒரு மணி நேரம் 2 மணி நேரம் பூஜையை செய்கின்ற வலுவும், எல்லையில்லா செல்வ நிலை அடைகின்ற துடிப்பும் இருக்க வேண்டும். எவர் ஒருவருக்கு இறைவனால் அவ்வித விதி அமைப்பு இடப்பட்டு இருக்கின்றதோ அவர் நிச்சயமாக இந்த பூஜா உபதேசம் பெறுகின்ற வாய்ப்பை அடைந்தே தீருவார். அவருக்குத்தான் இந்த விளம்பரம் கண்ணில்படும். உரிய காலத்தில் ஜாதக நகலுடன் விண்ணப்பித்துக் கொள்ளும் வாய்ப்பு ஏற்படும். இந்த அரிய பூஜை இன்றைய நிலையில் அறிந்தார் இல்லையோ என்று எண்ணும் அளவிற்கு அரிகிவிட்டனர். வேற்று கிரகங்களுக்கு விண்வெளி விமானங்கள் விடப்படும் இந்த நாளில் கூட எண்ணியதை ஈடேற்றிட எவ்வித உறுதியும் இல்லை. இந்த அரிய பூஜையால் கோடான கோடி செல்வம் கேட்கினும் உரியபடி செய்திட உடனே கிடைக்கும். அத்தகைய அரிய கலை ஒன்று தேய்ந்து மறைந்து விடலாகாது. உரியவர்கள் அறிந்து ஆண்டவன் அனுமதியோடு அற்புத குபேர சரித்திரம் படைக்க வேண்டும் என்பதற்காகவே இதனை வெளியிடுகின்றோம். உரிய .7.1998 தேதிக்குள் உங்கள் ஜாதக நகலுடன் விண்ணப்பம் செய்யுங்கள். தீய பழக்கங்களான- மதுபானம் செய்தல், புகைபிடித்தல், புகையிலைபோடுதல், பொடி போடுதல் இருக்கக் கூடாது. நல்லொழுக்கம் உடையவராயினும் தினசரி பூஜை செய்யும் பழக்கம் உள்ளவராயிருப்பினும்- ஜாதகநகலுடன் உரிய காலத்திற்குள் மனு செய்து கொள்ளுங்கள். அத்தேதி தவறி வரும் மனுக்கள் கவனிக்கப்படமாட்டாது. ஏனெனில் அவை கடவுள் அனுமதியற்றவை என்று பொருள். இப்பூஜா உபதேசம் பெற்று உயர்வு அடையும் விதி அமைப்பு உடையவராயின் உரிய தேதிக்குள் ஜாதக நகலுடன் மனுச் செய்து கொள் வார்.



பிரபல ஜோதிடர், ஜோதிட ஆசிரியர்,
ஸ்ரீமத் ஜெயவீர தேவா, யோகி,
பிளாட் எண்: 204, அண்ணாநகர்,
மதுரை-625 020.
தொலைபேசி: 533412, 534634





1998 மே 31
வெகுதான்ய வைகாசி 17
மலர் : 56
இதழ் : 44

கல்கி

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்.




அணுகுண்டு சோதனை; அநாகரிக மிரட்டல்கள்!

போக்ரானில் வெடித்த அணு குண்டுகள் ஏற்படுத்திய விளைவுகளையும் பாதிப்புகளையும் நேரில் கண்டறிய ராஜஸ்தான் செல்கிறார் பிரதமர். உண்மையில் பாதிப்புகள் ராஜஸ்தானுக்குள்ளோ, போக்ரான் எல்லைக்குள்ளோ அடங்கிவிடப்போவதில்லை!

உலகம் முழுவதும் ஒரே கிராமம் என்கிற நிலை வேகமாக உருவாகி வருகிறது. பூகோள எல்லைகளையும், சரித்திர விரோதங்களையும், பாரம்பரிய வேறுபாடுகளையும் கடந்து உலக நாடுகள் ஒரு குடும்பமாக வாழ வேண்டியிருக்கிறது. அவை ஒன்றையொன்று சார்ந்திருப்பதென்பது இந்த நவீன சாடிலைட் யுகத்தில் கட்டாயமாகியிருக்கிறது. யுத்தம், போர், தாக்குதல் போன்றவை இனி வீரச் செயல்கள் அல்ல; சோக நிகழ்வுகள்தாம்.

இப்படிப்பட்ட காலகட்டத்தில், அணுகுண்டு பரிசோதனை மூலம் இந்தியா தன் யுத்த பராக்கிரமத்தைப் பறைசாற்ற முற்படுவதே பகலில் தீப்பந்தம் பிடிக்கும் முயற்சி. போதாக் குறைக்கு 'போக்ரான் சாதனை' பின்னணியில் நமது பாதுகாப்பு மற்றும் வெளியுறவுத் துறையைச் சேர்ந்தவர்கள் பேசும் பேச்சும், விடும் அறிக்கைகளும் சகிக்க முடியாத தரத்தில் இருக்கின்றன.

பாகிஸ்தானும் சீனாவும் இன்று நேற்று நம் நிலப் பகுதிகளை ஆக்கிரமிக்கவில்லை. இந்திய எல்லைப் புறங்களின் ஆக்கிரமிப்பு பல வருடப் பிரச்னையாக இருந்து வருகிறது. அப்படியிருக்க, அணுகுண்டு



பரிசோதனையை வெற்றிகரமாக முடித்த அதே மூச்சில் அந்நாடுகளின் ஆக்கிரமிப்பை நினைவூட்டுவதும் அது குறித்து எச்சரிப்பதும் புதுப்பணக்காரனின் பவிசைப் போல் அநாகரிகமான மிரட்டல்களாகவே தெரிகின்றன.

பாகிஸ்தானும் சீனாவும் பதிலுக்கு உறுமிச் சீறுகின்றன. எதிரியின் எதிரி எனக்கு நண்பன் என்பது போல் அவை இந்திய விரோதத்தில் இணைந்து செயல்படத் தயாராகின்றன!

'இந்த அணு ஆயுதப் பரிசோதனையானது, மக்களுக்குப் பாதுகாப்புணர்வு ஏற்படுத்தும் முயற்சி' என்ற வாதம் தோற்றுப்போய் நிற்கிறது.


சீனா ஏற்கெனவே அணு ஆயுதங்களை ஆயத்தப்படுத்தி வைத்துள்ளது.

இந்தியாவுக்கு நிகராக நாமும் அணு குண்டுப் பரிசோதனை நடத்திக் காட்டுவோம் என்று கறுவுகின்ற பாகிஸ்தானைத் 'தடுத்தாட்கொள்கிறது' அமெரிக்கா! 'நீங்கள் ஏன் தயாரிக்க வேண்டும்? வேண்டாம்! எங்கள் ஆயுதங்களை உங்களுக்கு அளித்து உதவுகிறோமே' என்று தன் அணு ஆயுத நிழலில் பாதுகாப்புத் தரத் தயாராகிறது.

ஐரோப்பாவில் அமெரிக்க அணு ஆயுதங்களைக் கொண்டுவந்து நிறுத்தியதுபோல் பாகிஸ்தானிலும் செய்ய பில் கிளின்டன் தயங்கமாட்டார் என்பதை அவரது சமீபத்திய டெலிவிஷன் பேட்டி ஒன்று உணர்த்தியிருக்கிறது.

அமெரிக்காவின் இந்த உதவியை மட்டும் பாகிஸ்தான் ஏற்க முடிவுசெய்யுமானால், அந்நாடு பாதுகாப்புக்கென செலவிட்டுவரும் தொகையில் பெரும்பகுதி குறையும். அந்தத் தொகையை வளர்ச்சிப் பணிகளுக்கும் தொழிற்பணிகளுக்கும் திருப்பிவிட்டு திறமையாகச் செயல்பட்டால் பாகிஸ்தான் விரைவில் முன்னேற்றம் காணலாம்.

இதற்கு நேர்மாறான நிலவரம் இந்தியாவில்! அணு ஆயுதப் பரிசோதனைகளின் மூலம் இந்தியா உலக நாடுகளின் பார்வையில் உயர்வதற்குப் பதில் தாழ்ந்துபோயிருக்கிறது. எச்சரிக்கைகளையும் பொதுக் கட்டுப்பாடுகளையும் மீறியதற்காக அமெரிக்கா இந்தியா மீது பொருளாதாரத் தடைகளை விதித்



திருக்கிறது! ஜி-8 நாடுகள் கண்டனம் தெரிவித்திருக்கின்றன.

பொருளாதாரத் தடைகளினால் பாதிப்பு அதிகம் இராது என்று சமாதானத்துக்கு வேண்டுமானால் சொல்லிக் கொள்ளலாம். ஆனால், ஏற்கெனவே டாலருக்கு எதிராக ரூபாயின் மதிப்பு விழுந்து கொண்டிருக்கிறது. ஏற்றுமதிகள் தடைசெய்யப்பட்டால் அந்நியச் செலாவணி வருவாய் பலத்த அடி வாங்கும். அதேபோல், பிற நாட்டுத் தொழில் நிறுவனங்கள் நம்முடன் செய்துள்ள தொழில்/வர்த்தக ஒப்பந்தங்களைத் துண்டித்துக் கொண்டாலோ, தொடர மறுத்தாலோ, தொழில்துறை பாதிக்கப்படும். அயல்நாட்டுத் தொழில் முதலீட்டாளர்கள் இந்தியச் சந்தையை விட்டு வெளியேறிவிட்டால், இங்கே போட்டியும் கணிசமாகக் குறைந்து போகும். போட்டி குறைவதனால் உள்ளூர் உற்பத்தியாளர்களின் கை ஓங்கிப்போகும். தரத்தில் சமரசம் செய்து கொண்டு கொள்ளை லாபம் அடிக்கும் முயற்சிகள் அதி கரிக்கும். தாராளமயமாக்கல் கொள்கையினால் விளைந்த வளர்ச்சி தொடர்வதற்கு பதிலாகத் தேக்கம் உண்டாகும்; அல்லது சரிவு கூட ஏற்படலாம்...!

நடந்து முடிந்த போக்ரான் பரிசோதனையை இனி ரத்து செய்ய முடியாது. ஆனால், அதன் விளைவு களை ஓரளவு கட்டுப்படுத்தலாம். உலக நாடுகள் எதிர்பார்த்து வலியுறுத்துவதுபோல், சி.டி.பி.டி. மற்றும் என்.பி.டி. ஒப்பந்தங்களில் விரைந்து கையொப்பமிடலாம்.

இந்த ஒப்பந்தங்களை ஏற்பதன் மூலம் உலக நாடுகளைச் சமாதானப்படுத்தலாம். மேற்கொண்டு உறவுச் சிக்கல்கள் தோன்றாமல் தடுக்கலாம். உலகின் எதிர்ப்பைக் கண்டு இந்திய அரசு 'இனி அணு ஆயுதப் பரிசோதனைகள் நடத்த மாட்டோம்' என்கிற அளவுக்கு இறங்கி வந்துள்ளது. ஆனால் முழுமனத்துடன் சி.டி.பி.டி.யில் கையொப்பமிட முன்வரவில்லை.

இன்று தேசமே கிளர்ந்தெழுந்து மகிழ்ச்சியுடன் அணு ஆயுதப் பரிசோதனைக்கு அங்கீகாரம் கொடுத் துள்ளதுபோல் தோன்றலாம். ஆனால், பொருளாதாரச் சீர்குலைவு ஏற்படும்போது வேறு விதமாகப் பேசுவார்கள். போக்ரான் சாதனை என்கிற போர்வையைக் கொண்டு பி.ஜே.பி. தனது ஆட்சியிலுள்ள பொத்தல்களை நீண்ட நாட்களுக்கு மறைக்க முடியாது.



தமிழ் பேசும் பேஜர்!

தமிழ் பேசும் பேஜரை அறிமுகப்படுத்தியுள்ளது 'மோட்டரோலா' நிறுவனம்.

சென்னையை அடுத்த கோவளம் கடற்கரையில் 'ஃபிஷர்மேன்ஸ் கோவ்' ஓட்டலில் அறிமுக விழா. கடற்கரையில் சிற்றுக் கொட்டகை, தமிழ்நாட்டுப் பாரம்பரியக்கலைகளான கரகாட்டம், பொய்க்கால் குதிரை, மயிலாட்டம், கை ரேகை பார்த்து ஜோசியம் சொல்ல ஒரு முதிய பெண்மணி என்று நூதன மான 'செட் அப்'. குறிப் பிட்ட நேரத்தில் திடீரென கடல்பரப்பில் ஒளி வெள்ளம் பாய, பிரம் மாண்டமான காற்றடைத்த பலூன் பேஜர் ஒன்று, கடலிலிருந்து கரையை நோக்கி வந்தது. அது தமிழில் செய்தி தாங்கிய பேஜர்! களைகட்டிய ஆரம்ப நிகழ்ச்சிகளைக் கண்டு களித்து விட்டு மேல் விவரங்களை, 'மோட்டரோலா' நிறுவன அதிகாரி நரேந்திராவிடம் கேட்டோம்:

"தமிழ் பேஜருக்கும், ஆங்கிலப் பேஜருக்கும் வடிவமைப்பில் என்ன வேறுபாடு?"

"டெக்னிகலாகவே சில வேறுபாடுகள் உண்டு. தற்போது, புழக்கத்திலுள்ள ஆங்கில பேஜர்களில், தமிழ் மெசேஜ்கள் பெறுவது சாத்தியமில்லை. பிரத்யேகமாக பேஜர் வாங்க வேண்டியதுதான்!"

"தமிழ் பேஜரில் ஆங்கில வார்த்தைகள் இடம் பெறும் மெசேஜ்களைத் தர முடியுமா?"

"முடியும். தமிழ் செய்தியில், இடையில் ஆங்கில வார்த்தைகள் இடம் பெறுமானால், அதை அப்படியே அனுப்ப முடியும். பேஜரில் கிடைக்கிற மெசேஜில், ஆங்கில வார்த்தை சுற்று தடித்த எழுத்தில் அப்படியே இடம் பெறும்."

"எனக்குத் தமிழ் தெரியாது. ஆனால் தமிழ் பேஜர் வைத்திருப்பவருக்கு செய்தி சொல்ல வேண்டும். என்ன செய்ய?"

"ஓ எஸ்! நீங்கள் ஆங்கிலத்தில் கொடுக் கிற செய்தியை, பேஜிங் சர்வீஸ் கம்பெனி யின் ஆபரேட்டர் தமிழில் மொழி பெயர்த்து, தமிழ் பேஜருக்கு அனுப்பி வைத்து விடுவார்! ஆகவே, நோ பிராப்ளம்!"

"தமிழ் பேஜரின் விலை?"

"இப்போதைக்கு சுமார் மூவாயிரத்து ஐந்நூறு ரூபாய்!"

"பேஜர் என்பது ஒருவழிப் பாதையாகத்தானே இப்போது உள்ளது? அதை இருவழிப் பாதையாக்கும் சாத்தியம் உண்டா?"

"என்ன இப்படிக் கேட்டு விட்டீர்கள். இப்போதே அமெரிக்காவில் அது நடந்து கொண்டுதான் இருக்கிறது. அது பேஜர் தொழில் நுட்பத்தின் அடுத்தக் கட்டம். இன்னும் சில ஆண்டுகளில் இந்தியாவுக்கும் வந்துவிடும்!"

— கௌதம்


• ரங்கராஜன் குமாரமங்கலம்

"இந்தச் சட்டம் அமுலுக்கு வந்தால் மாநில மின்வாரியங்கள் வெறும் வசூல் செய்யும் அலுவலகங்களாக மட்டுமே இயங்க முடியும்" என்று சொல்கிறார் முதன் முதலாக இந்தச் சட்டத்துக்கு தமிழகத்தில் எதிர்ப்புக் குரல்கொடுத்த முன்னாள் மின்சாரத் துறை அமைச்சர் பண்ருட்டி ராமச்சந்திரன்.

"இப்போது தயாரிப்பாளர் - பயனீட்டாளர் இருவரையும் மனத்தில் கொண்டு தான் மின்கட்டணம் நிர்ணயிக்கப்படுகிறது. இந்த மின்சட்டப்படி, தயாரிப்பு அடிப்படையிலேயே மின்கட்டணம் நியமிக்கப்படும். இப்போது நுகர்வோர்களில் தாங்கக்கூடியவர்கள் யார்? தடுமாறுபவர்கள் யார் என்று கண்டறிந்து கட்டணம் நிர்ணயம் செய்யப்படுகிறது. உதாரணமாக வீட்டு மின் கட்டணத்தி லேயே கூட ஓரளவுக்கு மேல் அதிக யூனிட் செலவழிப்பவருக்குக் கட்டணம் அதிகமாக உள்ளது. அதே போல தொழிற்சாலைகளுக்குப் பலவிதமான கட்டண விகிதங்கள் உள்ளன. சிலவித கட்டண விகிதங்களுக்கும் மின்உற்பத்தி செலவுக்கும் தொடர்பே இல்லாத வகையில் அதிகமாக இருக்கிறது. ஏன் அதிகமாக இருக்கிறது! மின்சாரத்தை வைத்து லாபகரமான தொழில் நடத்தக்கூடிய நுகர்வோர்களிடம் இருந்து வசூல் செய்யப்படும் பணத்தில்தான் இலவச மின்சாரச் செலவு ஓரளவு ஈடுசெய்யப்படுகிறது. இதை cross subsidy என்று சொல்வார்கள். இந்தச் சட்டம் வந்த பிறகு அல்ல; இப்போதே கூட 2000 கோடி ரூபாய் மின்வாரியத்துக்கு இலவச மின்சாரத்தால் நஷ்டம் உண்டாகலாம். ஆனால் அரசு 500 கோடியை மான்யமாகவும், 1000 கோடியை cross subsidy மூலமாகவும் மீதி 500 கோடியை மின்வாரிய நஷ்டக் கணக்கிலும் எழுதித்தான் சமாளிப்பார்கள்.

"அது சரி; இந்தச் சட்டம் அமுலுக்கு வந்தால் என்ன ஆகும்? கட்டணத்தை நிர்ணயம் செய்யும் உரிமை சீரமைப்பு கமிஷனிடம் போய் விடும். மாநில அரசுக்கு எந்த உரிமையும் இருக்காது. தாங்கும் சக்தியைப் பார்த்து மின்கட்டணம் நிர்ணயம் செய்கிறோம் அல்லவா? அதற்கும் வழி கிடையாது. இதனால் cross subsidy அடிபட்டுப் போய் விடும். அதனால்தான், cross subsidy இருக்காது என்பதால்தான், அரசுக்கு 2000 கோடி செலவாகும் என்று சொல்கிறார்கள்.

"மாநிலஅரசுகளின் எதிர்ப்பைச் சமாளிக்க, அமைச்சர் ரங்கராஜன் குமாரமங்கலம் தமது சௌகரியத்துக்கு வாதத்தை அமைத்துக் கொள்கிறார் :

மூன்று வருடத்துக்குப் பிறகு, விவசாயம் உட்பட எல்லா தரப்பினரிடமிருந்தும் உற்பத்திச் செலவில் குறைந்தது 50 சதவீதத்தைக் கட்டணமாக வசூலிக்க வேண்டும் என்றும், எந்தப் பிரிவினருக்காவது சலுகை காட்ட வேண்டாமென்றால் மான்யம் கொடுத்துச் சமாளிப்பது மாநில அரசின் இஷ்டம்தான்!' என்றும் சமாளிக்கிறார் ரங்கராஜன். அதற்கேற்றபடி சட்டத்தில் சில திருத்தங்கள் செய்யப்படும் என்றும் சொல்கிறார்கள். அப்படித் திருத்தம்

இலவச மின்சாரம் :

மறைக்கப்படும் உண்மைகள்!

செய்ய இருப்பார்களேயானால் இந்தப் புது சட்டத்துக்கு அவசியமே இல்லை. இப்போது இருக்கும் நிலையே நீடிக்கலாமே! இந்த மின்சட்டத்துக்கு அவசியம் என்ன என்பதை ஊகிப்பது சுலபம்!

“இப்போது மின்துறையில் தனியார்கள் ஆதிக்கம் பெருகி விட்டது. அப்படி வரும் தனியார்கள் 'எங்களின் ஒரு யூனிட் உற்பத்திச் செலவு 'இவ்வளவு' என்று நிர்ணயிப்போம். அதை வசூலித்துக் கொடுக்க வேண்டும். அதற்கு கியாரண்டி கொடுங்கள்!'' என்று மத்திய அரசை வற்புறுத்துவதாலேயே இந்த அவசரச் சட்டம் போடப்பட்டிருக்கிறது. மத்திய அரசு எதற்கு கியாரண்டி கொடுக்க வேண்டும்? தனியார்களின் நோக்கம் லாபம் சம்பாதிப்பதாகத்தான் இருக்க முடியும். எனவே மத்திய அரசு இந்த விஷயத்தில் தலையிடாமல், தனியார்களை நேரடியாக மாநில அரசுகளுடன் தொடர்பு கொண்டு செயல்படச் செய்ய வேண்டும்.

"இந்த மின் சட்டப்படி, இலவச மின்சார விவகாரம் தவிர மாநிலங்களிடையே மின்சாரப் பகிர்வு செய்து கொள்வதற்கும் பல சிரமங்கள் ஏற்படும். எனவே மின்வாரியங்கள் நஷ்டமடையாமல் இயங்க வேறு வழிமுறைகளை ஆராய்வதை விட்டு விட்டு இலவச மின்சாரத்தில் கை வைத்தால் தேன் கூட்டில் கை வைத்தது போல் ஆகும்!'' என்றார் பண்ருட்டி.

எந்தவொரு பொருளையும் உற்பத்தி செய்கிறபோது அதற்கென்று ஒரு செலவு ஆகாமல் இருக்க முடியாது. அந்தச் செலவை எப்படியாவது ஈடுகட்டித்தானே ஆக வேண்டும்?

அந்த வகையில் பார்த்தால், அரசு கொடுக்கிற இலவச மின்சாரத்துக்கும் உற்பத்திச் செலவு ஆகத்தான் செய்கிறது. அந்த உற்பத்திச் செலவை எப்படிச் சரிக்கட்டுவது? இப்போது தரப்படுகிற இலவச மின்சாரத்துக்கு ஆகும் செலவில் முப்பது சதவிகிதத்தை மட்டும்தான் அரசு மான்யமாகத் தருகிறது. மீதி எழுபது சதவிகிதம் மின்வாரியத்தினுடைய நஷ்டமாகவே காட்டப்படுகிறது.

மத்திய அரசின் இப்போதைய மின் சட்டம் என்ன சொல்லுகிறது? விவசாயிகளுக்கோ அல்லது வேறு யாருக்கு வேண்டுமானாலும் இலவசமாக மின்சாரம் கொடுப்பதென்பது முழுக்க முழுக்க மாநில அரசின் உரிமை. அதை மத்திய அரசோ அல்லது சட்டமோ தடை செய்யவே இல்லை. ஆனால் மின்வாரியத்திடமிருந்து மாநில அரசு வாங்கும் மின்சாரத்துக்கான கட்டணத்தை முழுமையாகத் தந்து விட வேண்டும், அதாவது இப்போது தரப்படுகிற 30 சத மான்யத்தை நூறு சதமாகக் கொடுக்க வேண்டும் என்கிறது.

"இப்படி தமிழக அரசு செய்யாவிட்டால், தமிழக மின்வாரியத்தால் புதுப்புது மின்உற்பத்தித் திட்டங்களை உருவாக்க முடியாத நிலை ஏற்படும். அந்த நிலையில் தமிழகத்தில் எக்கச்சக்கமான அளவுக்கு மின்வெட்டு ஏற்படுவதைத் தவிர்க்க முடியாமலே போய்விடும்!'' என்று சொல்கிறது மத்திய அரசு.

இதில் நியாயம் இருப்பதாகவே நமக்குப்படுகிறது. ஏனெனில் உற்பத்தி செய்யப்படுகிற எந்தப் பொருளுக்கும் ஒரு விலை வைத்தே ஆக வேண்டும் என்பதுதான் பொருளாதாரத்தின் அடிப்படை.

இந்த உண்மையை நமது தமிழக அரசியல்வாதிகள் அனைவருமே கட்சி பேதமின்றி மறைக்கிறார்கள் என்பதுதான் கொடுமை! நிலைமை இப்படியே நீடித்தால் இருட்டில் தடுமாறப்போவது நாம்தான்! ○

— நமது நிருபர்கள்

• பண்ருட்டி ராமச்சந்திரன்



சினிமா பாட்டு தவிர தனி ஆல்பங்கள் நிறைய லேட்டஸ்டா வர ஆரம்பிச்சிருக்கு. எல்லாம் தமிழ் பாப் ஸாங்ஸ். நான்கூட டான்ஸ் பார்ட்டின்னு ஒரு ஆல்பம் கேட்டேன். சும்மா ரிதம்க்கு மட்டும் முக்கியத்துவம் குடுத்து கச்சா முச்சான்னு நிறைய ஸாங்ஸ் ரோடு ஓர டீக்கடை ஸ்பீக்கர்களுக்காக வருது. இதை ஒரு கலாசாரப் புரட்சிங்கற மாதிரி கேஸட் கம்பெனிக்காரங்க நினைச்சி, பயங்கரமா பப்ளிஸிடி வேற பண்றாங்க. ஸேல்ஸ் ரொம்பப் பிரமாதம்னு கம்பெனிக்காரங்க சொன்னாலும் 'நாட் பேட்'னுதான் கடைக்காரங்க சொல்றாங்க. குரோம்பேட்டைல ஒரு டீலர் பளிச்னு ஒரு டயலாக் விட்டார் – "இதெல்லாம் டைம்பாஸுக்கு வேர்க்கடலை கொறிக்கறாப்பல மேடம். ஒருத்தனாவது இந்த கேஸட்டுங்கள்ல இருக்கற ஏதாவது ஒரு பாட்டை முணுமுணுக்கறானா சொல்லுங்க."

சினிமா ஸாங்ஸ்க்கு ஒரு ஆல்டர்னேட் வேணுங்கறது நியாயம்தான். அது, சினி ம்யூசிக் டைரக்டர்ஸ் பயந்து, இன்னும் சிரத்தையா பண்ணணுமுன்னு நினைக்கறாப்பல குவாலிட்டியோட இருக்கணுமே தவிர, அதே பேட்டை ராப், முனியம்மா, ராக்கம்மா வகையறாக்களோட வழித் தோன்றல்களா இருந்தா ரொம்ப நாள் உயிர் இருக்காதுன்னு நினைக்கறேன்.

போன வாரம் போலி டாக்டர்கள் வாரம்! நியூஸ் பேப்பர்ஸ்ல அணுகுண்டுக்கு அடுத்த இடம் இதுக்குத்தான். கல்கி சப் எடிட்டர் ஒருத்தரோட போன்ல பேசிட்டிருந்தப்ப, 'இந்த இஷ்யுல அதிகபட்சம் போலி டாக்டர் ஜோக்ஸ்தான் வருது சுமி'ன்னார். ஒரு மெடிக்கல் ஸ்டூடன்ட்ங்கற முறைல ஏன் இப்படின்னு கொஞ்சம் யோசிச்சிப் பார்த்தேன். ஏமாத்தறது, பணம் சம்பாதிக்கறது மட்டுமே குறிக்கோளா இருக்கறவன் டாக்டரா நடிச்சித்தான் சம்பாதிக்கணும்னு அவசியம் இல்லை. பிகாஸ், இது ரொம்ப ரிஸ்கான ஜோலி. தென் எப்படி இத்தனை ஃப்ராடுகள்?

அரைகுறைப் படிப்பு. தட்ஸ் த ரீஸன். படிப்பு ரொம்ப காஸ்ட்லியான விஷயமாயிடுச்சு. ப்யூர் மெரிட்ல (என்னை மாதிரி!) ஸீட் வாங்கறவங்க குறைச்சல். ஒரு அஞ்சு லட்சம் ஸ்பெண்ட் பண்ண 'தில்' இருந்தா தனியார்

பாரதிராஜா கூப்பிட்டாலும் ஒத்துக்கறதா இல்லை!

இன்ஸ்டிடியூஷன்ஸ்ல இடம் பிடிக்க முடியுது. எல்லா இன்ஸ்டிடியூஷன்ஸும் பிரமாதமா இயங்குதுன்னு எப்படி சொல்ல முடியும்? மோர் ஓவர், பணம் குடுத்துப் படிக்க வரவங்க பணத்தை எடுக்கறதுல குறியா இருப்பாங்களே ஒழிய படிப்புல குறியா இருக்கறது ரொம்ப ரேர். தென், சரியான ஃப்ரெண்ட்ஸ் அமையாம, வழி மாறிப் போறது, பாதில டிஸ்கன்டின்யூ பண்ணிட்டு, தெரிஞ்ச வரைக்கும் போதும்னு பிராக்டிஸ் பண்ண ஆரம்பிக்கறது... இதுதான் ரீஸன்னு தோணுது.

கோளாறு நம்ம எஜுகேஷன் சிஸ்டத்துலதான்னு நினைக்கறேன். வாட் டு யூ ஃபீல்? எழுதுங்களேன்.

'மழை ஆல்பம்'னு கார்த்திகா ராஜ்குமாரோட கவிதைத் தொகுப்பு ஒண்ணு படிச்சேன். ஊட்டி



கிளைமேட்டை அப்படியே ஃபீல் பண்ண வெக்கறார்! க்ரேட்! சங்க இலக்கியங்கள்லேருந்து சமீப இலக்கியம் வரைக்கும் மழை வருணனை வந்துட்டுதான் இருக்கு. பட், ஒரு பார்டிகுலர் ஏரியா ஜனங்களோட வாழ்க்கைல மழை ஒரு தினசரி தவிர்க்க முடியாத அம்சமா இருக்கறதை ரொம்ப ரியலிஸ்டிக்கா காட்டறார். 'நெருப்புன்னு எழுதினா பொசுங்கற வாடை வரணும்'னு லா.ச. ராமாமிர்தம் ஒரு இடத்துல எழுதியிருக்கார் - எழுத்து அத்தனை வலிமையா இருக்கணும்ங்கற அர்த்தத்துல. இந்த கலெக்ஷனைப் படிக்கும்போதே ஜில்லுனு மழைல நனையற ஃபீலிங் வந்தது. கிடைச்சா படிச்சுப் பாருங்க.

சுமி, உன்னை ஒரு டிபிகல் கிராமத்துப் பொண்ணா, பாவாடை தாவணில பார்க்கணும் போல இருக்குன்னு, சுமார் நூறு இருநூறு (ம்க்கும்... ஏழெட்டு) லெட்டர்ஸ் வந்தது. ஒரு ரசிகர், 'உனக்கு முப்பத்தி மூணு சதவீத ரசிகர்கள் மொஃபஸல் சைடுல இருக்காங்க'ன்னு சென்ஸஸ் வேற எடுத்து சொல்றாரு. இந்த முப்பத்தி மூணு பர்சன்ட், அறுவத்தொம்பது பர்ஸன்டையெல்லாம் லேசா புறக்கணிச்சிட முடியாது இல்லியா? ஸோ நம்ம ஆர்டிஸ்ட் நடனம் கிட்ட சொல்லி கிராமத்து கெட்டப்ல ஒரு கார்ட்டூன் வரைஞ்சு வாங்கிப் போட்டிருக்கேன். (பாரதிராஜாவெல்லாம் பார்த்துட்டு அப்ரோச் பண்ணா, ஒத்துக்கறதா இல்லை.)

தென் இந்த வார ஜோக்.

ஒரு ஆள், ஒரு துணிக்கடை திறந்தாரு. திறந்த அன்னிக்கு ஒரே ஒரு ஷர்ட் மட்டும்தான் வித்தது. அவர் ரொம்ப சோகமா தன்னோட ஃப்ரெண்டுகிட்ட இதை சொன்னாரு. அவர் உற்சாகப்படுத்தி, ''நாளைக்குப் பாரு, சேல்ஸ் பிச்சிட்டுப் போகும்''னாரு.

மறுநாள் அந்த ஃப்ரெண்ட் வந்து, ''இன்னிக்கு எப்படி?''ன்னு கேட்டதும் இவரு அழாத குறையா, ''நேத்தே பரவாயில்லை. இன்னிக்கு ஒரு ஷர்ட்கூட விக்கலை''ன்னாரு.

மறுநாள், நண்பர் வந்ததும் வராததுமா, இவரு, ''இன்னிக்கு சேல்ஸ் நேத்தைவிட ரொம்ப மோசம்''னாரு.

''அது எப்படி? நேத்துதான் ஒண்ணுகூட விக்கலையே? அதைவிட மோசமா எப்படி இருக்க முடியும்?''

''முந்தாநேத்து ஷர்ட் வாங்கிட்டுப் போனவன் திருப்பிக் கொண்டு வந்து போட்டுட்டுப் போயிட்டானே!''

(நான் முன்ன சொன்னேன் இல்லை? என் நாப்பது வயசு 'மேல் ஃப்ரெண்டு' சுப்ரமணியன்? அவர் சொன்ன ஜோக் இது!)

பி.கு: சுமி செக்ஷனுக்கு, ரசிகர் மன்ற உறுப்பினர்கள்கூட ஜோக்ஸ் அனுப்பலாம். எனக்குப் பிடிச்சா, பப்ளிஷ் பண்ண ஏற்பாடு செய்யறேன்.

— சுமி

நெகிழ வைத்தார் பாலசந்தர்!

என்னுள் நிகழ்ந்த மனவியல் மாற்றங்களையும் அதற்கான அடிப்படைக் காரணங்களையும் எண்ணிப் பார்க்கிறேன். எது என் கற்பனைத் திறனை வளர்த்தது? எந்த விஞ்ஞானப் படிப்பு எனக்கு எதிலும் ஒரு விஞ்ஞான அணுகுமுறையை அளித்தது? ஆழத்தில் இருந்த இந்த இரண்டு தீவிர எண்ணங்களும் ஆசைகளும் எப்படி என்னை ஒரு எழுத்தாளனாகவும் விஞ்ஞானத் துறையிலும் தொழில் துறையிலும் ஈர்த்தன? எப்படி வாழ்வில் அதற்கேற்ப சம்பவங்கள், தானாக நேர்ந்து கொண்டிருந்தன?

எண்ணங்கள் எப்படி ஆசைகளாகி, 'நம்மால் முடியும்' என்ற நம்பிக்கைகளாகி, நம் வாழ்வை நடத்துகின்றன என்பது திருப்பதியில் பல படிகளேறி, பல மைல்களைக் கடந்து ஏழுமலையானைத் தரிசிப்பது போலத்தான். அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் படித்துக் கொண்டிருந்த போதே கதைகள் எழுதினேன். மனத்தில் அபரிமிதமான கற்பனை. எழுதப் போகும் ஒவ்வொரு வரியும், என் மனத்தில் ஓடிக் கொண்டிருக்கும். படிப்பை முடித்த முதல் ஆண்டே எனது 'சுயம்வரம்' என்ற சிறுகதை ஆனந்த விகடனில் வெளி வந்தது. அதற்கு முன், பி.எஸ்ஸி படித்த போதே தினமணி கதிரில் என் விஞ்ஞானக் கட்டுரைகளும், பொன்னி, சுதேமித்திரன் ஞாயிறு மலர் இதழ்களில் என் கதைகளும் வெளி வந்தன.

தினமணியிலிருந்து 15 ரூபாய்க்கு செக் அனுப்பி இருந்தார்கள். எனது "அறிவுள்ள தாவரங்கள்" என்ற கட்டுரைக்கு 'லாயிட்ஸ் பேங்க் ஆப் லண்டன்' என்ற அந்த 'செக்' லாயிட்ஸ் வங்கியின் தலைமையகமான லண்டனிலிருந்து வருகிறது என்பதைப் பார்த்த எனக்கு - ஒரு இண்டர் மீடியட் படித்த மாணவனுக்கு - இருந்த உற்சாகம் பெருமை, அளவு கடந்தது. எனது பேராசிரியர்கள் இதை அறிந்து பெருமைப் பட்டார்கள்.



ஆனால், இந்த கற்பனை உலகம் என்னை நடைமுறை உலகிலிருந்து அப்புறப்படுத்தி விட்டது என்பதைப் போகப் போக உணர்ந்தேன். நான் மனத்தில் கண்டு, வாழ்ந்த கற்பனை உலகம் வேறு; நடைமுறை உலகம் வேறு. எனவே எனக்கு நடைமுறை உலகின் நெளிவு சுளிவுகள் தெரியவில்லை. என்னால் சமாளிக்க முடியவில்லை. ஒரு பூ விற்கின்ற பெண்மணி "வாங்குகிற ஆளைப்பாரு!" என்று சொல்லி விட்டால் 'நான் ஒன்றுக்குமே உதவாதவன்' என்று கற்று முற்றும் பார்ப்பேன். "பூ வாங்கக் கூட நாம் லாயக்கில்லை. நம் மனைவி சொல்வதுதான் சரி" என்று நிழலில் ஒதுங்கினேன்.

பின் ஒரு நாள் நன்றாக உள்ளுக்குள்ளே விசாரணை நடத்தினேன். ஒரு காரியம் செய்தேன். அதாவது, கதை எழுதுவதை குறைத்துக் கொண்டேன்! அல்லது விட்டேன் என்றே சொல்லலாம்! இது ஒரு கட்டம். ஒரு மாற்றம்.

நான் குடந்தையிலிருந்து, விரிவுரையாளராகப் பதவி உயர்வு பெற்று சென்னைக்கு வந்தபோது எனது கதைகள் - மாதம் ஒரு கதை என்கிற ரீதியில் - தினமணி கதிர் பத்திரிகையில் வெளிவந்து கொண்டிருந்தன. அப்போது துமிலன், அதன் ஆசிரியர், பெரிய சைசில் போட்டுக் கொண்டிருந்த தினமணி கதிரை விகடன் அளவில் மாற்றிய அந்த முதல் இதழிலும் எனது 'நட்சத்திரக்



காதலி' என்ற கதை வெளியாகி இருந்தது.

அப்போது குமுதம் 'ஓகோ' என்று போய்க் கொண்டிருந்த காலம். எனக்கு ரா.கி. ரங்கராஜன், 'கே. மாலதி' என்கிற புனை பெயரில் எழுதுகின்ற நகைச்சுவைக் கதைகளும் ஜ.ரா. சுந்தரேசன் எழுதிய கதைகளும் மிகவும் பிடிக்கும். குமுதத்தில் என்னுடைய கதையும் எனது கல்லூரித் தோழர் கே. பாலசந்தர் அவர்களது கதையும் ஒரே இதழில் வெளி வந்தது. ஒரு கதாசிரியன் கதை எழுத உட்கார்கிறான். அவனது கதாபாத்திரங்கள் அவனுடன் பேச ஆரம்பிக்கின்றன. கதாபாத்திரங்களின் கதையை நகர்த்த நகர்த்த, கதாசிரியனுக்கும், கதாபாத்திரங்களுக்கும் நடக்கும் விவாதத்தை கற்பனையுடன் எழுதி இருந்தேன்.

பாலசந்தர் ஹாஸ்யமாக "ஆண்களுக்கு மட்டும்", "பெண்களுக்கு மட்டும்" என்ற தலைப்பில் ஒரு நகைச்சுவைக் கட்டுரையை எழுதி இருந்தார். யோசித்துப் பார்க்கிறேன். இரண்டு இளைஞர்கள், பல்கலைக் கழகத்தில் பட்டம் பெற்றவர்களை, தாங்களே சிருஷ்டித்துக் கொண்ட ஒரு எழுத்துத் துறை அவர்களை எப்படி ஆட்கொண்டது என்பதை எண்ணி வியக்கிறேன். நம் எண்ணங்கள் – நம் ஆழ் மனத்தின் ஆசைகள்தாம் நம் வாழ்வை செதுக்குகின்றன.

அடுத்த முறை நான் பாலசந்தரை சந்தித்தது ஆபட்ஸ்பாரிக்கு எதிராக – இன்றைய அண்ணாசாலையில். எதிரும் புதிருமாக சந்தித்தோம் சைக்கிளில். தான் அக்கௌண்டண்ட் ஜெனரல் அலுவலகத்தில் பணிபுரிவதாகவும், 'ராகினி ரிக்ரியேஷன்ஸ்' என்ற நாடகக் குழுவை நடத்தி வருவதாகவும் சொன்னார். நான் கிண்டி பொறியியல் கல்லூரியில் விரிவுரையாளராக இருப்பதைச் சொன்னேன்.

அடுத்தமுறை நான் பாலசந்தரைச் சந்தித்தது அவர் சினிமா டைரக்டராகி அவர் எடுத்த சினிமா படங்களை எல்லாம் பார்த்த கால கட்டத்தில் – ஒன்பதாண்டுகள் கழித்து. வளர்ச்சி என்றால் பிரமிக்கத்தக்க வளர்ச்சி! கதை அமைப்பு, நகைச்சுவை, கதையுடன் நம்மை ஒன்ற வைக்கும் அவரது பாணி, கதையின் கருத்து, கற்பனை என்று அவர் எங்கோ போய்விட்டார். நான் அசந்து போனேன். எல்லாவற்றிலுமே அவர் முத்திரை இருந்தது. அதற்கு முன்பாக "இது சிவாஜி படம்", "எம்.ஜி.ஆர் படம்" என்று நடிப்பவர்களை முன்னிறுத்தியே படம் ஓடிக் கொண்டிருந்தது. முதன்முதலாக உள்ளே வேலை செய்யும் ஒரு கலைஞனை முன்னிறுத்தி அதாவது "டைரக்டர் பாலசந்தர் படம்" என்று அவர் பெயரைச் சொல்லி அதற்காக மக்கள் படம் பார்க்கப் போனதைப் பார்த்தேன். எப்படிப்பட்ட மாற்றம்!

ஒரு விதையானது, செடியாகி வளர்ந்து பூக்கும்போதுதான் அதன் மணம் எல்லோரையும் கவர்கிறது. ஆனால் அந்த விதைக்குள், அந்த பூ, காய், கனி, இலை மரம் என்ற எல்லா அம்சங்களும் இருக்கின்றன. அவை உள்ளுக்குள்ளே சதா வேலை செய்து கொண்டுதான் இருக்கின்றன.

அவர் அண்ணாமலையில் படித்தபோது அவர் படித்த இரண்டாவது பாடம் தமிழல்ல. அவர் எடுத்துக் கொண்ட மொழி 'பிரெஞ்சு'. படித்து பி.எஸ்ஸி பட்டம் பெற்ற போது அவர் ஒருவர் தான் மூன்று பாடங்களில் – பிரெஞ்சு, விலங்கியல், தாவரவியல் என்ற மூன்று பாடங்களில் – முதல் வகுப்பு பெற்றிருந்தார். இது சாதாரண விஷயமல்ல.

என் திருமணத்தின்போது கலை அம்சத்துடன் ஓர் ஓவியம் வரைந்து தன் வாழ்த்துச் செய்தியினைத் தெரிவித்திருந்தார். நான் அவரை சந்திப்பதுண்டு. அதாவது

டாக்டர் எம்.எஸ். உதயமூர்த்தி

எப்போதாவது. ஏதாவது ஒரு குறிப்பிட்ட வேலை விஷயம் இருக்கும்போது மட்டும் தான் கூப்பிடுவேன். ஏனெனில் அவரை நான் அவரது ஆக்க பூர்வமான கலைத் தொழில் சிந்தனையிலிருந்து அப்புறப் படுத்த விரும்புவதில்லை. இஸ்ரேலில் ஒரு தெருவின் முன் ஒரு வாசகம் வைக்கப் பட்டிருக்கிறதாம்.

"இங்கு நமது கவிஞர் எழுதிக் கொண் டிருக்கிறார். அவரது சிந்தனையைக் கலைக்காதீர்கள். அமைதியாகச் செல் லுங்கள்'' என்று!

என்னை ஆச்சரியப்பட வைத்த மற் றொரு சம்பவம் பின்னால் நிகழ்ந்தது.

அதாவது மக்கள் சக்தி இயக்கத் துவக்க நாள். 1988 மே 29ம் தேதி. அன்று மாலை எனது நூல் ஒன்றை வெளியிடும் விழாவை எனது பதிப்பாளர் வானதி திருநாவுக்கரசு அவர்கள் பாரதிய வித்யா பவனில் ஏற்பாடு செய்திருந்தார். விழா வுக்கு முக்கியப் பிரமுகர்களை நண்பர் திருநாவுக்கரசு அழைத்திருந்தார். கல்கி ராஜேந்திரன், பாலசந்தர், திருமதி சிவ சங்கரி, அமுதசுரபி ஆசிரியர் விக்கிரமன் முதலியோர் பாரதிய வித்யா பவனில் மேடையில் அமர்ந்திருக்கிறார்கள். நல்ல கூட்டம். கல்கி ராஜேந்திரன் என்று நினைக்கிறேன் – பேசியபோது குறிப்பிட் டார். "உதயமூர்த்தியின் கருத்துக்கள் எல் லாம் பொதுமக்களிடையே பரவ வேண்டு மானால், நான் பாலசந்தரை ஒன்று கேட் டுக் கொள்வேன், அவரை சினிமாவில் நடிக்க வையுங்கள்!'' என்றார். ஒரே சிரிப்பு. நான் என் வழுக்கைத் தலை யின் முன்புறத்தைத் தடவிக் கொண் டேன்!



அடுத்து பேச, பாலசந்தர் எழுந்தார். "என் படத்தில் உதயமூர்த்தி நடிக்கிறார்!'' என்று சொல்லி விட்டு மேலும் கீழும் மேடையில் நடந்தார். கூட்டத்தைப் பார்த்து சட்டென்று திரும்பினார். ஒரே சஸ்பென்ஸ்! "இதோ பாருங்கள்! உதய மூர்த்தியே நாற்காலியின் முனைக்கு வந்து விட்டார்!'' என்றார். விவரம் புரியாத ஆர்வம் என்னுள். நான் பேசி வருகிற பொதுக்கூட்டங்களின், சில காட்சிகளை எடுத்து அவரது சினிமாவில் உபயோகித் திருக்கக் கூடும்'' என்று எண்ணம் ஓடி யது.

இதற்கு ஒரு சில மாதங்களுக்கு முன், பாலசந்தர் ஒரு கடிதம் எழுதி இருந்தார். "அன்புள்ள உதய்; உங்கள் கட்டுரைத் தொடரின் தலைப்பை நான் களவாடிக் கொண்டிருக்கிறேன்'' என்று. அப்போது தான் "நம்பு தம்பி, நம்மால் முடியும்'' என்ற தலைப்பில் ஒரு கட்டுரைத் தொடரை ஆனந்தவிகடனில் எழுதி முடித்து இருந்தேன். எனவே, 'உன்னால் முடியும் தம்பி' என்கிற தலைப்பில் படம் பிடிக்கிறார் என்பது மட்டும் ஓரளவு எனக்குத் தெரியும். என்ன சொல்லப் போகிறார் என்று, நான் அவரை நோக் கினேன்.

"உன்னால் முடியும் தம்பி' படத்தில் கதாநாயகனின் பெயர் உதயமூர்த்தி!'' என்று சொல்லி சற்று நேரம் நிறுத் தினார். என் உள்ளத்தில் ஒரு சிலிர்ப்பு; முகத்தில் ஒரு புன் னகை என்னை அறியாமல். அடுத்து ஓரிரு மாதங்களில் படத் தின் பிரிவியூக்காக என்னை அழைத்திருந்தார். நானும் என் மனைவியும் சென்றோம். படத்தில் கமலஹாசன்தான் கதாநாயகன் வேடம். படம் கொஞ்ச தூரம் ஓடிய பின் ஜெமினி கணேசன் – கமலஹாசனின் அப்பா – தன் மகனைக் கூப்பிடுகிறார், உரத்த குரலில் "உதயமூர்த்தி!'' என்று.

நான் திரை அரங்கில் பார்வை

யாளனாக அமர்ந்திருக்கிறேன். திரையில் தோன்றுகின்ற மனிதர் என் பெயரைச் சொல்லி என்னை அழைக்கிறார்! நான் எழுந்து மேடையை நோக்கி நடக்காத குறைதான்!... இது சினிமா என்று உணர ஒருகணம் ஆயிற்று!



"நாம் என்ன செய்து விட்டோம்? இப்படி ஒரு மனிதர், தானே முன்வந்து, ஆத்மார்த்தமாக நமக்காகச் செய்திருக்கிறாரே!" என்ற நன்றிப் பெருக்குதான் என் உள்ளத்தில் மேவியது. என்னால் அதை அவரிடம் வெளிப்படுத்த முடியவில்லை. படத்தைப் பாராட்டி விட்டு வெளியே வந்தேன்.

அவர் செய்ததின் கனத்தை முழுமையாக விளக்க வேண்டுமானால் மற்றோர் விஷயத்தைக் குறிப்பிட வேண்டும். 'உன்னால் முடியும் தம்பி' படத்தைத் திரையிடுவதற்கு முன் ஒரு பிரபல அரசியல் தலைவரைப் படம் பார்ப்பதற்கு அழைத்திருக்கிறார். படம் முடிந்தவுடன் அவரை அணுகி படம் எப்படி இருக்கிறது என்று பாலசந்தர் கேட்டிருக்கிறார். 'படத்தின் கதை அமைப்பையோ, டைரக்ஷனையோ, நடிப்பையோ பற்றி விமர்சிப்பார்' என்று எதிர்பார்த்த பாலசந்தரிடம் "உதயமூர்த்திக்குப் பாராட்டு விழா எடுத்திருக்கிறீர்கள்!" என்று சொன்னாராம் அந்தத் தலைவர்!

1997க்கான ராஜா சர் அண்ணாமலைச் செட்டியார் விருதினையும், பண முடிப்பையும் அளிக்க என் நூல்களைத் தேர்ந்தெடுத்திருந்தார்கள். அறக்கட்டளையின் தலைவி திருமதி தேவகி முத்தையா அவர்கள் என்னை போனில் கூப்பிட்டார்கள். "உங்களுக்குப் பிடித்த, உங்கள் நண்பர் பாலசந்தரைத்தான் உங்களைப் பாராட்டக் கூப்பிட்டிருக்கிறோம். அவரும் வருவதாக ஒத்துக் கொண்டார்" என்றார்கள். ராஜா அண்ணாமலை மன்றத்தில் அன்று - ஒரு பக்கத்திலே என்னுடைய இனிய மாணவர் 1958லிருந்து நான் பழகிய இனிய நண்பர் மிகப் பெரிய தொழிலதிபர் ஏ.சி. முத்தையா. மறுபக்கத்தில் எனது பெருமதிப்புக்குரிய நண்பர், என் கல்லூரித் தோழர், இந்தியாவின் ஒரு தலை சிறந்த டைரக்டர் பாலசந்தர்.

இதைவிடப் பெருமை, மகிழ்ச்சி ஒரு மனிதனுக்கு வேறு என்ன ஏற்பட முடியும்? வார்த்தைகளினால் வர்ணித்து விட முடியாத, ஒரு வாழ்நாள் அனுபவம்!

நாமும் உயர்ந்து, அவர்களும் உயர்ந்து - ஆத்மாவின் சங்கமம் அங்கே நிகழ்ந்து கொண்டிருந்தது. எங்கும் ஆண்டவன் நிறைந்திருப்பது போன்ற ஒரு உணர்வு. மனம் கை கூப்பியது. ஆண்டவனுக்கு நன்றி கூறிக் கொண்டிருந்தேன். மனித உருவில் இருந்த என் நண்பர்களின் கைகளைப் பிடித்துக் கொண்டு.



(தொடரும்)

TV மர்சனம்

"சென்னையில் அதிக பட்சம் 41 டிகிரி செல்ஷியஸ்; குறைந்த பட்சம்....." என்று தினமும் சாவி கொடுத்த பொம்மை போல் ஒப்பிக்கும் சன் டி.வி. அறிவிப்பாளினி! பின்னாலிருக்கும் தமிழக வரைபடத்தைத் திரும்பிப் பார்த்து மறுபடியும் காமிராவைப் பார்த்து, மறுபடியும் திரும்பி... வெயிலைப் போலவே அறிவிப்பும் தாங்க முடியாததாகி விடுவதற்குள் கொஞ்சம் மாறுதல் புகுத்தலாமே...

● டிஸ்கவரியில் ஆப்ரிக்க சவானா காடுகளின் வெயிலை செல்ஷியஸ் அறிவிப்பெல்லாம் சொல்லாமலே நாய்க் குட்டியைப் போல் 'ஹே ஹே' என்று தாகத்தில் நாக்கைத் தொங்கப்



• சிறுத்தையல்ல; கிர் காட்டு சிங்கங்கள்

போட்டுக் கொண்டு மூச்சிரைக்கப் படுத்துக் கிடக்கிறது சிறுத்தைப் புலி. மரத்தின் மேல், நிழலில் அதன் குட்டி. அம்மாவால் அசையக் கூட முடியாத போது, குட்டி மட்டும் கறுகறுவென்று சிற்றெறும்பு வேகத்தில் இறங்கி, குதித்து, அம்மாவிடம் நெருங்கி, கொஞ்சி, பஞ்சுப் பந்து போல் மோதி, சிணுங்கி... அதுவரை அமைதிகாத்த பின்னணி இசையமைப்பாளர் குட்டியின் அசைவுகளுக்கு மட்டும் ரப்பர் பந்தைத் தட்டுவது போன்ற குதூகல ஒலி புகுத்த.. பிள்ளைப் பிராயத்தின் உல்லாசம் நம்மையும் பற்றிக் கொண்டது.. ஆனால் அம்மா சிறுத்தை அசைய வேண்டுமே..! 'மனுஷங்க மாதிரி என்னால இந்தப் புள்ளையை சம்மர் ஸ்கூலுக்கு அனுப்ப முடியலையே..' என்று ஒரு பெருமூச்சு கலந்த பார்வை!

சவானா சம்மர் படப்பிடிப்பைப் பற்றி சொல்லிக் கொண்டே போகலாம்... கோடை முடிந்து மழைக் காலம் ஆரம்பிக்க, மரக் கிளைகளின் முள் முனைகளில் வழிந்து ஒரு கணம் நின்று யோசித்து, நிலத்தில் சொட்டும் மழை நீரைப் படம்பிடித்த கவிதை உள்ளம் வாழ்க.

● மோசமான நகைச்சுவையைக் கூட மன்னிக்கலாம்... கவிதையை உல்டா பண்ணுகிறேன் பேர்வழி என்று கோவை அனுராதா தமது நாடகத்தில் 'சின்ன சின்ன ஆசையை' கொலை பண்ணியதை மன்னிக்க முடியாது. அதையும் ஒரு சிறுமியைக் கொண்டு பாடச் செய்தது மகா அபத்தம்.

● 'அடிமைப் பெண்' படப் பாடல்களை முதலில் எஸ்.பி.பி.தான் பாடி ஒலிப்பதிவு செய்தாராம். ஆனால் 'அதில் சின்னவருக்கு முழு திருப்தியில்லை' என்றார் டி.எம்.எஸ். விஜய் டி.வியில் "தாயில்லாமல் நானில்லை பாடலை டி.எம்.எஸ். பாடினால்தான் எனக்குப் பொருத்தமாயிருக்கும்னு சின்னவர் சொல்லியிருக்கார். உடனே ஆர்.எம்.வீரப்பன் எனக்கு போன் செய்ய, என்னாலே தட்ட முடியல்லை..." என்று விளக்கிய அந்த வெண்கலக் குரலார் அன்று தம் ரேட்டை மும்மடங்காக உயர்த்திக் கேட்டதாகவும் வாக்குமூலம் தந்தார். பாடலுக்கு ஐந்நூறிலிருந்து ஆயிரத்தைந்நூறு என்று ட்ரிபிள் ஜம்ப்! டி.எம்.எஸ் பற்றிய தொடரில் இப்படிப் பல சுவாரஸ்யங்கள்.

● தாரக நினைவூட்டிய சில நாட்களுக்குள்ளாகவே டிடி இயக்குனர் நடராஜன் இரண்டாவது சானலின் காலை கச்சேரிகளை மறுபடி வழங்க முயன்று ஜெயித்திருக்கிறார். போன வாரம் மனைவியும் - ஜெயந்தி கிரண் - இந்த வாரம் கணவனும் - ரவிகிரண் - தனித்தனியே தேனருவி பொழிந்தார்கள். ஜெயந்தியின் ஹம்சநாதம் ஒரு வாரம் கழித்தும் மனத்தில் சுற்றி வருகிறது. ரவிகிரணுக்குப் பக்கவாத்தியமாக இன்னொரு சித்திர வீணை. ரவியின் கை வண்ணத்தோடு சிந்தனையையும் கற்பனையையும் சேர்த்து அளவாக எதிரொலித்துக் கொண்டேயிருந்த இந்தப் பக்கபலம் நல்ல யுக்தி. ○

— ஆன்டெனா



எய்ட்ஸ் பற்றி சரியாக தெரிந்து கொள்ளுங்கள்.

எய்ட்ஸ்

உடலுறவு மூலம் எப்போது பரவும்?

1. திருமணத்திற்கு முன் பாதுகாப்பற்ற உடலுறவு கொள்ளுவதால் பரவலாம்.
2. திருமணத்திற்குப் பின் மனைவியைத் தவிர மற்றவர்களுடன் பாதுகாப்பற்ற உடலுறவு கொள்ளும் போது பரவலாம்.

உடலுறவு மூலம் எப்போது பரவாது?

1. திருமணம் வரை உடலுறவைத் தவிர்த்தால் பரவாது.
2. திருமணத்திற்குமுன் உடலுறவு கொள்ள நேரிடும்போது ஆணுறை அணிந்தால் பரவாது.
3. ஒருவனுக்கு ஒருத்தி என்ற நெறிமுறையைக் கடைப்பிடித்து வாழ்ந்தால் பரவாது.
4. திருமணத்திற்குப் பின் மனைவியைத் தவிர வேறெந்த பெண்ணிடமும் உடலுறவு கொள்ளும் போது ஆணுறை அணிந்தால் பரவாது.

இரத்தம் மூலம் எப்போது பரவும்?

1. மருத்துவமனைகளில் பரிசோதனை செய்யப்படாத இரத்தத்தை நோயாளி களுக்குச் செலுத்தினால் பரவலாம்.

இரத்தம் மூலம் எப்போது பரவாது?

1. நன்கு பரிசோதனை செய்யப்பட்ட இரத்தத்தை செலுத்துவதால் பரவாது.
2. மனித உடலில் சிரிஞ்சின் மூலம் வெளியே எடுக்கப்பட்ட இரத்தம் சில நிமிடங்களில் உறைந்துவிடுகிறது. மேலும் அதில் உள்ள எய்ட்ஸ் கிருமிகள் சூரிய ஒளியில் அழிந்துவிடுவதால் அந்த இரத்தத்தைச் செலுத்தி எய்ட்ஸை பரப்ப முடியாது.

ஊசி மூலம் எப்போது பரவும்?

1. ஒருவருக்கு பயன்படுத்திய சிரிஞ்ச் மற்றும் ஊசிகளைச் சுத்தப்படுத்தாமல் மற்றவருக்குப் பயன்படுத்துவதால் பரவலாம்.

ஊசி மூலம் எப்போது பரவாது?

1. ஒருவருக்கு பயன்படுத்திய சிரிஞ்ச் சுத்தப் படுத்திய பிறகு மற்றவருக்கு உபயோகித்தால் பரவாது.
2. சிரிஞ்சில் இரத்தத்தை வெளியே எடுத்தபின் அது உறைந்து விடுவதால் எய்ட்ஸ் கிருமிகள் அழிந்து விடுகின்றன. உறைந்த இரத்தத்தை ஊசி மூலம் செலுத்த முடியாது. அதனால் ஊசியின் மூலம் எய்ட்ஸ் பரவ வாய்ப்பில்லை.


தமிழ்நாடு எய்ட்ஸ் கட்டுப்பாடு சங்கம்

417, பாந்தியன் ரோடு, எழும்பூர், சென்னை - 600 008.

தொலைபேசி எண் : 044-8255467

TNSACS/2002/98/ELEGANT

EXCLUSIVE



டெண்டுல்கரின் விடுமுறை!

"டீவியில் கூட கிரிக்கெட் பார்க்க மாட்டேன்..."

இந்தியா– கென்யா–பங்களாதேஷ் அணிகள் மோதும் மூன்று நாடுகள் கிரிக்கெட் தொடரில் டெண்டுல்கர் ஆடவில்லை. ஏன்? மும்பையில் அவரைச் சந்தித்துப் பேசினோம். ஷார்ஜா சாதனைகளின் ஒளி வட்டம் இன்னமும் அவரது தலைக்குப் பின்னால் சுழன்று கொண்டிருந்தாலும் ஆர்ப்பாட்டம் ஏதுமின்றி படு அமைதியாக நம்மிடம் பேசினார். பேட்டியிலிருந்து:

கல்கி: *ஆஸியுடனான தொடர் ஆரம்பிக்குமுன் உங்களைச் சந்தித்தபோது, 'இது எனக்கும் ஷேன்வார்னுக்குமிடையேயான யுத்தம் என்று தயவு செய்து கூறாதீர்கள்' என்று சொன்னீர்கள். ஆனால் சமீபத்தில் வார்ன், 'படுத்தால்' கனவில் கூட நீங்கள் வந்து அவர் பந்தை விளாசுவதாகச் சொல்லியிருக்கிறாரே, கவனித்தீர்களா?*

கல்கி இன்டர்நெட் முகவரி: www.kalkiweekly.com ஈ மெயில்: kalki@md2.vsnl.net.in



''தலை எழுத்து... தூக்கம் வரலைன்னு சொல்லி அந்த டாக்டர்கிட்ட போனது தப்பாப் போச்சு...''

''ஏன்?''

''என்னை மடில படுக்கச் சொல்லி 'ஆராரோ ஆரிராரோ' பாட ஆரம்பிச்சுட்டாரு!''

– ஜி. செல்லத்துரை

சச்சின்: அப்படிச் சொன்னது, அவரது பெருந்தன்மையைத் தான் காட்டுகிறதே யொழிய அவரைக் குறைத்து மதிப்பிடக் கூடாது! அவர் மாதிரியான ஒரு போலர் உருவாவது எத்தனை கஷ்டம் என்று எனக்குத் தெரியும்! என்னென்ன விதமாகப் பந்து வீசுவார் தெரியுமா? அந்த சீரீஸில் எல்லா இந்திய வீரர்களுமே சிறப்பாக ஆடினார்கள்; நானும் நன்றாக ஆடினேன். அவ்வளவு தான்!

கல்கி: இருப்பினும் ஷார்ஜாவில் உங்களால்தான் இந்தியா வென்றது என்பதை உலகமே ஒப்புக் கொள்கிறதே? அப்படியொரு பேய் ஆட்டம் ஆட சிறப்புப் பயிற்சி ஏதாவது எடுத்துக் கொண்டீர்களா?

சச்சின்: யெஸ். ஆஸி அணி இந்தியா வருவதற்கு முன்பாக சென்னையில் ஒரு ஐந்துநாள் பயிற்சி முகாம் நடந்ததல்லவா? அதில் கலந்து கொண்டபோது நான் ஒரு லெக் ஸ்பின்னரை பிரத்தியேகமாக லெக் ஸ்பின், கூக்ளி, டாப் ஸ்பின் என மாற்றி மாற்றிப் போட வைத்து, அடித்துப் பழகி விசேஷப் பயிற்சி எடுத்துக் கொண்டேன். மேலும் பிட்சில் வேண்டுமென்றே சில 'Rough patch'கள் உருவாக்கி, அந்த இடத்தில் பந்தை வீச வைத்துப் பயிற்சி செய்தேன். அதுமாதிரி ரஃப் பேட்ச்களில் பந்து விழுமானால் (டெஸ்ட் மாட்ச்களில் நாலாவது தினத்தில் பிட்ச் அப்படி ஆகும்) கன்னா பின்னாவென்று சீறிவரும். அப்போது எதிர்கொள்வது கஷ்டம். அதற்காகவே செயற்கையாக 'முரட்டு மேடு'களை உருவாக்கி, பந்த வீச வைத்துப் பயிற்சி செய்தேன். இந்தப் பயிற்சிக்கு நான் உபயோகித்த ஸ்பின்னர் யார் தெரியுமா? எல். சிவராமகிருஷ்ணன்! அற்புதமான போலர் அவர். மறுபடியும் அவர் இந்திய அணிக்கு ஆட வாய்ப்பு இருப்பதாகவே நான் கருதுகிறேன்.

கல்கி: ஷார்ஜாவில் நீங்கள் அந்த விலையுயர்ந்த காரை (பரிசு) பார்த்தபடியே ஆடியதாகச் செய்திகள் வந்தனவே?

சச்சின்: அதெல்லாம் வெறும் பொய். ஸ்டார் ஸ்போர்ட்ஸ் டீ.வி.காரர்கள் என்னையும் அந்த காரையும் மாற்றிமாற்றிக் காட்டி அப்படியொரு பொய்த் தோற்றத்தை உருவாக்கி விட்டார்கள்! நான் இந்தியாவுக்காக ஆடுகிறேன் என்பதைத் தவிர, வேறெந்த நினைவும் எப்போதும் இருந்ததில்லை. மேலும் என்னிடம் பணமா இல்லை? அது மாதிரி நாலு காரை நானே வாங்க முடியுமே?

கல்கி: உங்களுடைய அடுத்த பிளான்?

சச்சின்: கம்ப்ளீட் ரெஸ்ட்! ஒரு மாதம் டீ.வி.யில் கூட கிரிக்கெட் பார்க்கப் போவதில்லை. என் மனைவி, குடும்பத்தாருடன் எங்காவது ஒரு ஹாலிடே ட்ரிப் போய் விடப் போகிறேன். எங்கு போகப் போகிறேன் என்பது சஸ்பென்ஸ். சொல்லி விட்டால் பிரைவஸி போய்விடுமே? இந்த மாதம் முழுவதுமே ஓய்வுதான்! (இதனால்தான் மூன்று நாடுகள் மேட்சிலிருந்து ஓய்வு தரப்பட்டிருக்கிறார்.)

கல்கி: எல்லா நாடுகளும் உலகக் கோப்பைக்குத் தயாராகி விட்டனவே? உங்கள் கணிப்பில் நம் அணி எப்படி உள்ளது?

சச்சின்: கவலையே வேண்டாம். நல்ல, பலமாக உள்ளது நம் அணி! நிறைய திறமையுள்ள இளைஞர்கள் பலர் வந்து விட்டார்கள். அவர்களுக்கான பயிற்சியும் தீவிரமாகத் தரப்பட்டு வருகிறது. இப்போது இருப்பதை விடவும் அடுத்த ஆண்டு நம் அணி இன்னும் பலம் பொருந்தியதாக ஆகிவிடும்! ●

பேட்டி: **நந்தினி**

இன்டர்நெட்டில் தமிழ் சினிமா!

இன்டர் நெட்டில், 'தமிழ் சினிமா' என்ற ஒரு பத்திரிகையைத் தொடங்கியிருக்கிறார், அன்டோ பீட்டர் என்ற இளைஞர். பிறந்தது தூத்துக்குடி. விறகுக்கடை நடத்தியவரின் மகன்தான் கம்ப்யூட்டருக்குள் புகுந்து சாகசம் செய்பவர்.

பீட்டர் நடத்தும் சாஃப்ட் வியூ நிறுவனத்துக்குச் சென்றபோது, எதிர்ப்பட்ட வாசகம், 'தமிழை வளர்க்க தமிழர்களிடம் தமிழில் பேசுங்கள்' என்பதுதான்.

ஆரம்பத்தில் சென்னையில் உள்ள பல்வேறு கம்ப்யூட்டர் நிறுவனங்களில் சர்வீஸ் எஞ்சினியராகப் பணி புரிந்திருக்கிறார். இந்த அனுபவம் பீட்டரின் வளர்ச்சிக்குப் பெரிய அளவில் கை கொடுத்திருக்கிறது.

இன்டர் நெட்டில் 'தமிழ் சினிமா வெளி'யை உருவாக்க சுமார் மூன்றாண்டுகள் உழைத்திருக்கிறார். பி.எச்டி. ஆய்வு போல ஏகப்பட்ட தகவல்கள்.

''அணுகுண்டு சோதனை நடக்கிற வரைக்கும் அரசு ரகசியமா வச்சிருந்தது மாதிரி இந்த ப்ராஜக்டை என் மனைவியிடம் கூடச் சொல்லவில்லை'' என்றார்.

தமிழ் சினிமா பற்றிய எந்தத் தகவல் வேண்டுமென்றாலும் இவர் தொடங்கியிருக்கும் Http://www.tamilcinema.com என்ற இன்டர்நெட் முகவரியில் தொடர்பு கொள்ளலாம்!

நடிகர், நடிகையர் வாங்கிய விருதுகள் அவர்களின் ஒரிஜினல் பெயர், புனைபெயர், யார் யார் இரட்டை வேடத்தில் நடித்திருக்கிறார்கள், எத்தனை படங்கள், கம்ப்யூட்டர் பயன்படுத்தும் நடிகர்கள், நடிக்க வரும் முன் அவர்கள் பார்த்த வேலை (ஸ்ரீகாந்த் நடிக்க வரும் முன் அமெரிக்காவில் ஒரு நிறுவனத்தில் அலுவலக அதிகாரி, ஆனந்தராஜ் - சாராய வியாபாரம் இப்படி...) என்று குறுக்கும் நெடுக்குமாக எக்கச்சக்கவ தகவல்கள்!

''இந்தத் தகவல்களை ஒரு புத்தகமாகப் போட வேண்டும் என்றால் 4,000 பக்கங்கள் தேவைப்படும். வெளி நாட்டினருக்காகத் தொடங்கப்பட்டதுதான் இந்த 'தமிழ் சினிமா'. அவர்களிடம் மிகப் பெரிய வரவேற்பைப் பெற்றுள்ளது. வீட்டுக்கு ஒரு கம்ப்யூட்டர் என்பது அவர்களுக்குச் சாதாரணம்'' என்றார்.

இன்டர் நெட்டிலே நடிகர்களின் பேட்டி வருகிறது. இந்த வார 'டாப் டென் மூவிஸ்', 'டாப் டென் பாடல்கள்', சினிமா விமர்சனம், சினிமா தொழிலாளர்களின் பிரச்னைகள்... இப்படி செய்திகளைத் தருகிறார்கள்.

நட்சத்திர இரவு, இன்ன நடிகர் இன்ன தேதியில் இன்ன ஊரில் இருப்பார் என்ற பயணத் திட்டம், வாசகர்களிடம் இருந்து வந்த கடிதங்கள், அவற்றிற்கு பதில்கள் என முழுமையான சினிமா அலசல்!

"இந்தப் பக்கத்தை இதுவரை ஒன்பது லட்சம் பேருக்கு மேல் பயன்படுத்தியுள்ளனர்'' என்றார் பீட்டர். ●

— அம்மாபட்டி ஜம்பு





வழிமுழுக்க செத்துப் போ, செத்துப் போ என்று திட்டிக் கொண்டே வந்தார் அப்பா.

விமலா, அவரது பேச்சுக்கு பதில் சொல் லும் உத்தேசத்திலில்லை. காலையில் ரயில் ஏறியதிலிருந்து அப்பா துப்பும் விதவிதமான வார்த்தைகள். ஒரே விஷயத்திற்கு சளைக்கா மல் வேறு வேறு பாஷைகளில் தாக்கிக் கொண்டு வருகிறார். கண்களை மூடிச் சாய்ந்தாள்.

"வெளியே சொன்னா வெக்கக்கேடு, எத் தப் பைத்தியமாவது இப்படி நினைக்குமா?" விழித்திருக்கும் செவிப்பறையில் மோதியது. எத்தனை முறை பதில் சொல்வது? மறு வீட்டுக்குப் போய் வந்த மறுநாள் இரவு தன் கைகளைப் பற்றி நடுங்கிக் கொண்டு சொன் னது மட்டும் நெஞ்சில் கழித்தது.

பெண் பார்க்க, ராஜேந்திரனோடு அந்த பைனான்ஸ்காரனும் வந்திருந்தான். தன் னைப் பார்த்ததும் புன்னகைத்த மாப்

ஒரு துளி துயரம்

■ சு. வேணுகோபால்

பிள்ளைகளில் ஊனத்தைக் கண்டதும் திரும்பப் புன்னகைத்தவர்கள் எத்தனை பேர்? ராஜேந்திரன் மட்டுந்தானே! இவ்வளவு கத்திக் கொண்டு வரும் அப்பா, பின் ஏன் சம்மதிக்கணும்? நல்ல இடம் என்று அவர்தானே சொன்னார்? எது எப்படி நடக்கும் என்று தெரிந்து விட்டால் வாழ்க்கை ஏது? நகரும் வாழ்க்கையை மேலும் செம்மையாக நகர்த்துவதை யோசிப்பதைத் தவிர வேறு என்ன முன்கூட்டி கைவசம் இருக்கிறது?

மணவறையில் யார் யாரையோ அறிமுகம் செய்து வைத்தான் ராஜேந்திரன். அவனோடு படித்தவர்கள், பால்ய கால நண்பர்கள், சொந்தங்கள் என்று... தனக்கே எவ்வளவு தாழ்வுமனப்பான்மை? ஊனம் தெரியக்கூடாது என்பதற்காக நிமிர்ந்து ஒத்தக் காலில் நிற்க முயற்சித்துத் தோற்றுப் போனேன். கூட்டத்தைப் பார்த்ததும் ஏன் இப்படி ஒரு அற்ப ஆசை தோன்றியது? கவரில் வைத்துத் தந்த பணம்... கலர் காகிதத்தில் பதுங்கியிருக்கும் பரிசுப் பொருட்கள்... யாரும் இதை ஏன் நிராகரிப்பதில்லை? அல்லது ஏன் தருகிறார்கள்?

மொய்ப்பணம் எழுத கிருஷ்ணா பைனான்ஸ்காரனைத்தான் ராஜேந்திரன் உட்கார வைத்து விட்டு வந்தான். அவனுக்கு நம்பிக்கையான ஆள். இருவரும் நெடுநாள் நண்பர்கள்.

அந்தி மயங்கும் மாலையில் வீட்டின் முன் நின்ற பந்தலடியில் நெருங்கிய சுற்றம் மட்டும் சுவாரசியமாகப் பேசிக் கொண்டிருந்தார்கள். ராஜேந்திரன் கை பனியனில் கிருஷ்ணாவிடம் சிரித்து சிரித்துப் பேசிக் கொண்டிருந்தான்.

"கணக்கெல்லாம் நாளைக்குப் பார்க்கலாம். காலையில வெள்ளன வா. சமையல்காரனுக்குப் பாக்கித் தரணும். மறுவீட்டுக்கு வேன் பேசணும்..."

அடுத்த காரியத்திற்கான முன் திட்டங்களை கூறிவிட்டு தாழ்வாரத்திற்கு வந்தான்.

"மொய்ப்பணம் எவ்வளவு வந்துச்சோ! என்ன ஏதுன்னு கணக்கு சொன்னா தானே...!" பந்தலடியில் சின்னாத்தாவோடு ராஜேந்திரனின் அம்மா பேசிக் கொண்டிருந்தது கேட்டது.

நம்பிக்கைக்குப் பாத்திரமான அந்த முதல் இரவு. தனக்கிருக்கும் சொத்து. இருக்கும் இரு தங்கைகளை நல்லபடியாகக் கடத்துவதில் தனக்கிருக்கும் பங்கு! குரோதம் ததும்பும் தன் தாயார்; பரமாத்மான தன் அப்பா. தனக்குள் இருக்கும் முன் கோபித்தனம்; நடக்குமோ நடக்காதோ, சந்தோஷமாக வைத்திருப்பதாக அவன் தந்த உறுதி; தனக்கு டீச்சர் ட்ரெயினிங் சீட் கிடைத்தது மார்க் அடிப்படையில் அல்ல... என்று திக்கித் திணறிச் சொல்லியது. நிச்சயதார்த்த நாளன்று சாமி ரூமில் சந்தித்து 'சாந்தம் ததும்பும் உன் முகம் எனக்கு மிகவும் பிடித்திருக்கிறது' என்று அவன் சொன்னதையே சொல்லி நினைவூட்டியது. 'கட்டிங் தெரியும்' என்றது; வேலை கிடைப்பதில் தனக்கு முன்னுரிமை இருக்கும் என்பதைச் சொல்ல முயற்சித்து விழுங்கிக் கொண்டது. அந்த அறையில் எதிலும் பனி மூடவில்லை. முதல் முறையாக கன்னத்தில் இட்ட முத்தம்...

நொறுங்கிக் கிடந்த வளையல் துண்டுகளைக் காலையில் பொறுக்கியபோது மறுபடி தொட்ட ஸ்பரிசம்... அவனுக்குள் இருக்கும் முழு உணர்வும் கொந்தளித்ததோ?

எட்டு மணி இருக்குமா? ஜம்புவை அனுப்பி கிருஷ்ணனிடம் பணம் வாங்கி வரச் சொன்னான். திரும்பி வந்த ஜம்பு ஒரு சீட்டையும் மொய் நோட்டையும் கொண்டு வந்தான்.

"நா பேசிக்கிறேன் நீ போன்னார். சரின்னு வந்திட்டேன்."

எழுபதாயிரம் மொய்ப்பணம் வந்திருப்பதாகக் கூட்டல் காட்டியது. முன்னதாக

வாங்கிய கடன் என்பதை மேலே போட்டு எழுபதைக் கீழே போட்டு, 'இன்னும் தர வேண்டியது பத்தாயிரம்' கழித்த கணக்கு காட்டியது.

பதறிப் போய் சமையல்காரனுக்கும், வேன்காரனுக்கும் எங்கோ கைமாத்து வாங்கி வந்து கொடுத்தான். இரவு மணப் பெண்ணிடம் இரண்டு பவுனில் தொங்கு சங்கிலியும், ஒரு சின்ன கைக் கடிகாரமும் எடுத்துத் தருவதாக சொன்னது நிழலாடியது.

சட்டையை மாட்டிக் கொண்டு கிளம்பினான்.

"என்ன கிருஷ்ணா, நீ வருவேன்னு உக்காந்திருந்தேன்."

"......................"

"கிருஷ்ணா, டோட்டல் போட்டு கழிச்சிருக்க!"

"ஆமா."

"நாந் தரமாட்டேனா? அப்படி நெனச்சிருந்தா மொய்யெழுத உங்கிட்ட ஒப்படச்சிருப்பேனா?"

"இப்ப வாங்காம நா எப்ப கலெக்‌ஷன் பண்ண முடியும்? ரெண்டு மாசம் வட்டி சரியா வரலை."

"தரலன்னேனா?"

"வாயில சொன்னா? தந்தாதானே. எம்பதாயிரம் ஒராளுகிட்ட லாக் ஆயிடுச்சின்னா எந்தொழில் என்னாகும்? சரி, பழகிட்டோமேன்னு ஒனக்கு மாச வட்டிக்குத் தந்தேன். மத்தாளுகளுக்கெல்லாம் கந்துதான்."

"பாதி வெள்ளாமயில தர்றேன்."

"ஒவ்வொருவாட்டியும் வெள்ளாமயில தர்றேன்னுதான் சொல்றே! எனக்கு இதவிட்டா கை சேராது."

"கல்யாணத்துக்கு கைமாத்து வாங்குனவங்கிட்ட நல்ல பேர் வாங்க வேணாமா?"

"தோதுபடாது ராஜேந்திரா."

அன்று பகலெல்லாம் மாடியில் படுத்திருந்தான். இரவு மெத்தையில் வந்து பேசாமல் சாய்ந்தான். அருகில் விமலா வந்தமர்ந்தாள். அவன் முகத்தில் மகிழ்ச்சிக் களை இல்லை. ஏதாவது பேச்சுக் கொடுக்க வேண்டும் போல் இருந்தது அவளுக்கு. தலையைத் தூக்காமல் பேசினாள்.

"உடம்புக்கு என்ன?"

"ஒண்ணுமில்லை."

"பின்னென்ன இந்தப் பக்கமே காணோம்."

> "உங்க நாவலை என்னால் ஜீரணிக்கவே முடியலைங்க..."
> "படிச்சுட்டு வைக்க வேண்டியது தானே? உங்களை யாரு திங்கச் சொன்னது!"
> – தாரை. மா. மகேஷ்ப்ரியன்

"சும்மாதான்."

"......................"

நீண்ட நேரம் பேசாதிருந்தவன் எழுந்து உட்கார்ந்தான்.

"மொய்ப் பணத்தையெல்லாம் வச்சுக்கிட்டு தரலங்கிறான்!"

"யாரு?"

"கிருஷ்ணா."

"எதுக்கு?"

"கொஞ்சம் கடன்."

"எவ்வளவு?"

"எம்பதாயிரம். எழுபதாயிரம் மொய் வந்திருக்கு. இன்னும் பத்தாயிரத்து சொச்சம் தரணும்."

"......................"

விமலாவின் கையைப் பற்றினான். "பள்ளிக்கூடத்துக்குப் போகும்போது டிராக்டரில் ஏறுகிறேன் என்று ஏறி, தவறி விழுந்து கால் முறிஞ்சிடுச்சு. செக்காலை முக்கிலிருந்து நான் ஒத்தாளாக அவனை உப்புக் குதிரை ஏற்றி வந்திருக்கேன் விமலா. அவனுக்குப் பணத்தை தரலன்னு சொன்னேனா. முப்பதாயிரம் ஒரு அர்ஜண்ட் கடன் இருக்கு. மொய்ப் பணத்தில உறுதியா கொடுக்கிறதா சொல்லியிருந்தேன்" ராஜேந்திரன் கண்கள் கலங்கி விட்டன.

"எதுக்கு என்ன நம்பலை? அவன் என் பால்ய காலத்திலிருந்து நண்பன். எனக்கு பலம் போச்சு."

"அப்படியெல்லாம் பேசாதீங்க. இவ்வளவு கடன் எப்படி வந்திச்சு?"

"அறுபதாயிரம் கெணறு வெட்டி பாறையாயிடுச்சு. வெள்ளாமயும் ரெண்டு வருசம் ஒட்டல. பலன் தர்ற சமயத்தில பூச்சியடிச்சிருது."

"ஊருக்குப் போய் எங்க அப்பாகிட்ட சொல்லலாமா?"

"வேணாம் விமலா. மாசா மாசம் கொஞ்சம் முன்னபின்ன ஆனா கூட வட்டிய கட்டியிருக்கேன். இதுவரைக்கும் வட்டி மட்டும் நாப்பதாயிரம் கட்டியிருப்பேன். நான் கொஞ்சம் லேட்டா கல்யாணம் பண்ணியிருக்கலாம். கடன்கப்ப கட்டிட்டு செஞ்சிருக்கலாம். எங்க சிரம காலத்தில நீ வந்து மாட்டிக்கிட்டயோன்னு தோணுது."



"ஐயையோ! நான் அப்பிடி நினைக்கலை."

"ஒரு வாத்த அவன் என்னைய கேட்டிட்டு வச்சிருக்கக் கூடாதா?"

பிடித்திருந்த விமலாவின் கைகளில் கண்ணீர்த் துளி சொட்டியது. பலப்பல சமாதானங்கள் சொல்லிப் படுத்தார்கள்.

அதிகாலையில் அலறல் கேட்டு விமலா முழித்தாள். கட்டிலில் ராஜேந்திரன் இல்லை. சேலையைச் சரிசெய்து கொண்டு லவக் லவக்கென்று குறுகி நிமிர்ந்து ஓடி வரும்போது, ராஜேந்திரன் உடலைத் தூக்கிக் கொண்டு வராந்தாவுக்கு ஓடினார்கள். உப்போடு சோப்பையும் நீரில் கரைத்து வாயில் ஊற்றினார்கள். வாந்தி வரவில்லை. அவர்கள் கையிலிருந்து நழுவி உடல் விழுந்தது.

"எமனா வந்திருக்கானே, நொண்டி அவுசாரி..." முதல் தாக்குதலோடு அழுகை ஆரம்பித்ததுதான். சடங்கு முடிந்து கிளம்பும் வரை நிற்கவில்லை.

'பாரு புருஷனை முழுங்கிட்டு திரு திருன்னு உக்காந்திருக்கிறத'

'எவங்கூட படுத்தாளோ. ரோசக்கார பையன் கேள்விப்படாமயா இப்பிடி முடிவெடுப்பான்'

'மொண்டிக்கி மூன்னூறு சூகம்புன்னு சும்மாவா சொல்றாங்க. கடன நெனச்சு உசிர் விடுவானா பின்ன மத்த? மானஸ்தங் காட்டி கண்ணை மூடிட்டான்.'

'பாவம் இந்த பிள்ளைக்கி என்ன கெட்ட நேரமோ?'

'இந்த பிள்ளைய நெனச்சுப் பாக்க வேணாம்?'

'ஒத்தக் கொலையாட்டம் உக்காந்திருக்கிறத பாக்குறப்போ கும்பி கொதிக்கிதே!'

இருவேறு குரல்கள் உதிர்ந்தன. உண்மையில் விமலா திகைதப்பி நின்றது அன்று தான்.

அவனை எது பாதித்தது? 'என்னடா போயும் போயும் ஒரு நொண்டிய கட்டிட்டு வந்திருக்க' என்று கிண்டலடித்திருப்பார்களோ? ரோசமா? தன்மானமா? கோழைத்தனமா? எல்லாமும்தானா? அவன் அனிச்சையாகத் தன் கால்களைப் பார்த்தான். சேலைக்கு வெளியில் வலது கால் பாதம் தெரிந்தது. இடதுகால் சேலைக்குள் தொங்கிக் கொண்டிருந்தது.

'நான்கு அங்குலம் வளர்ந்திருந்தால்...' எத்தனையோ முறை நினைத்ததை இப்போதும் நினைத்தாள். ஐந்தாம் வகுப்பு படிக்கும் வரை அவளுக்கு ஊனமாகத் தோன்றியதே இல்லை. உயர்நிலைப் பள்ளிக்குப் போன பின்புதான் வதைபண்ணும் இந்த எண்ணம் தோன்றியது. கதவைப் பூட்டிக் கொண்டு இடதுகாலை இழுத்து நீவி விட்டு பாவாடையைத் தூக்கி நிலைக்கண்ணாடியில் கால் நீண்டிருக்கிறதா என்று பார்த்திருக்கிறாள். காரியம் கைகூடியதாக இல்லை.

இடதுகாலில் ஊசி போட்டால் வளர்ந்து விடுமா என்று கற்பனை எட்டாம் வகுப்பு படிக்கும்போது தோன்றியது. பி.டி. மாஸ்டர் ஃபுல்லப்ஸ் எடுத்தால் வளர்ச்சி உண்டு என்று மாணவர்களிடம் பேசினார். அன்று இரவு இடதுகாலில் மண் பொட்டலத்தைக் கட்டி நிலைப்படியில் தொங்கி புல்லப்ஸ் எடுத்துப் பார்த்தாள். இதை அம்மா கவனித்ததைப் பார்த்த பின் மனம் விம்மி விட்டது. இந்த அவமானமே இன்றளவும் ஆறாத ரணமாக இருக்கிறது. அதன்பின் இந்த முயற்சியில் விமலா ஈடுபட்டதில்லை. ராஜேந்திரன் எல்லாம் கேள்விப்பட்டு 'விமலா பிடிச்சிருக்கு' என்று சொல்லிப் போன அன்று யாருக்கும் தெரியாமல் நூல் கயிற்றில் காலை கட்டி மறு முனையைக் கட்டில் காலில் பிணைத்து, உட்கார்ந்தவாக்கில் இழுத்து இழுத்துப் பார்த்தாள். யாருக்கும் தெரியாமல் அழுத இரவு அது!

சிலுக்கார்பட்டி வந்து சேர்ந்ததும் அப்பாவும் அவளும் காப்பி சாப்பிட்டார்கள். உடல் குப்பென்று வியர்த்தது.

விமலாவின் அப்பா அவளிடமிருந்து பையை வாங்கிக் கொண்டு நடந்தார். லவக் லவக் நடை பின்தொடர்ந்தது. முருகன் தியேட்டர் அடுத்து அருணா ஹோட்டல். அடுத்து மருந்துக் கடை. மாடியில் கிருஷ்ணா பைனான்ஸ் என்ற போர்டு இருந்தது.

மேலேறிப் போகும் போது கிருஷ்ணன் உட்காந்தவாக்கில் முகம் கருத்து கூனி நிற்கும் கிழவனைப் பார்த்துச் சத்தம் போட்டுக் கொண்டிருந்தான். இவர்களைப் பார்த்ததும் ஆச்சரியம். அவன் எதிர்பார்த்திருக்க

மாட்டான். சேரில் உக்காரச் சொல்லி விட்டு. "நாளைக்கு மூப்பது ரூவா டாண்ணு வல்ல அவ்வளவுதான். போ"

"சரிங்க சாமி"

அவன் கீழிறங்கிப் போனான். எட்டு மாதத்திற்குப் பின் இவர்கள் இங்கு வருவார்கள் என்று யாராவது கனவில் கூட நினைக்க முடியுமா? கன்னம் சதைபோட்டு பருத்திருந்தான்.

"காப்பி?"

"ஒண்ணும் வேணாம்பா!"

விமலா கூடையில் சுருட்டி வைத்திருந்த மஞ்சள் பையை எடுத்தாள். பிரிக்காத ஐம்பது ரூபாய்க் கட்டை நீட்டினாள். அவன் பேசாமல் பார்த்தான்.

"அவர் பாக்கித் தராமலே செத்திட்டாரில்ல? அதுக்குத்தான்."

நோட்டுக்கட்டை ஸ்டீல் டேபிளில் வைத்துவிட்டு குனிந்து கைக்கூடையில் பையை வைத்தாள். அவன் நோட்டுக் கட்டை பார்த்தவண்ணம் இருந்தான்.

"என் ஏழாம் நாள் ராத்திரியில என் கையப் பிடிச்சு கதறினார் அதுக்கு..."

"கடன வாங்கிட்டு இழுத்தடிச்சா முடியுமா?"

"அப்ப கடன வசூல் பண்ணத்தான் இந்தக் கல்யாணத்தில அக்கறை காட்டுறது மாதிரி பாவலா பண்ணுனிங்களா?"

"அள்ளி எறைக்க நானென்ன தர்மகர்த்தாவா?"

"நீங்க உலகத்தில அந்த மனுஷன்கிட்ட யாவது முழு நம்பிக்கை வைக்கலை யேன்னுதான் கொண்டு வந்தேன்."

"வச்சுப் பொறுக்க முடியலை யன்னா..." ஏதோ சொல்ல வந்தவன்,

"இதென்ன வம்பாப் போச்சு. வாங்குனவன் நாலு பேரு ஓடிப் போயிட்டா என்னாகுறது? பாவ புண்ணியம் பாத்தா நா போண்டியாக வேண்டியதுதான்."

அதற்கு மேல் விமலா உக்காரவில்லை. கூடையைக் கையில் பற்றிக் கொண்டு, "ஏன் நீங்க கேட்காம எடுத்துக்கிட்டீங்க. அது எத்தன பேருடைய அன்பளிப்பு!"

அவன் பதில் பேசாமல் பேனாவைச் சுற்றிக் கொண்டிருந்தான்.

படியை எதிர்பார்க்காமல் சுவரைப் பிடித்து, படியிறங்கினாள். கையில் பிராந்தி புட்டியைக் கொண்டு மேலேறி வந்த இளைஞன் இவர்களைப் பார்த்ததும் சற்று ஒளித்து விலகினான்.

வெளியில் வெயில் தாழ்ந்திருந்தது. பஜார் வழியாக நடந்தார்கள். இருபுறமும் வெவ்வேறு பெயர்களில் பைனான்ஸ் கடைகள் அடிக்கடி தென்பட்டன. முன்னால் சைக்கிளோ, ஹீரோஹோண்டாவோ நின்றிருந்தன. கடைகளில் அமர்ந்திருந்தவர்கள் திடகாத்திரமான இளந்தாரிகள்.

அப்பாவை ஏறிட்டுப் பார்க்கவே வெட்கமாக இருந்தது. நடுரோட்டில் வைத்து சுருக்கென்று பேசி விடுவாரோ என்று மனம் தவித்தது. எதுவும் பேசி விடாதீர்கள். அப்பா என்று மடித்து மடித்து வேண்டினாள். அவரின் நுனி மூக்கில் கோபம் கசிந்தது.

"என்ன மனத்திருப்தி கெடச்சது?" ஏளனமாகக் கேட்டார்.

எதற்கு இப்படி ஒரு திட்ட வெறியை கற்பனை செய்தோம் என்றிருந்தது. உள்ளத்தில் ஊறிய கற்பனை தரிசனத்தை, எதிர்கொண்டபோது வெறும் வெற்றிடமாகத் திறந்தது. நான் நினைத்த மனிதனாக அவன் எப்படி உருமாற முடியும்? தனக்குள் குழந்தைமனம் ஏன் முகிழ்த்தது? மிகவும் துன்புறுத்தியது இப்பயணம்.

கிளம்பும் போது அண்ணன் சொன்னான். "சினிமா சென்டிமெண்ட் பிடிச்சுக் கிட்டு தொங்குற. உன் வீம்பு கேனத்தனமா இருக்கு. என்னமும் செஞ்சிட்டுப் போ. வயசு அப்படி. உனக்கு என்ன சொன்னாலும் இப்ப ஏறாது."

தன் வயதைக் காரணம் காட்டி அவன் சொல்லும்போது வைராக்கியம் கூடியதே தவிர, குறையவில்லை. பெரிய நாணயஸ்தியாகக் காட்டிக் கொள்ளத் தூண்டியது எது?

"உண்மையா என்னை உங்களுக்குப் பிடிச்சிருக்கா?" என்று முதலிரவில் கேட்டபோது, "உன்னை மட்டுமில்ல; உன் குழந்தைக் காலும் பிடிச்சிருக்கு" என்று சலவையாகத் தொங்கும் பாதத்தில் இட்டாரே ஒரு முத்தம். அதுதானா இவ்வளவுக்கும் காரணம்? பின் ஏதோ ஒன்று பிரவாகமாக இறங்கி உராய்ந்து உருகிய அபூர்வகணம்...

போனதும் கிருஷ்ணன் மன்னிப்புக் கேட்டு கண்ணீர் சிந்துவான் என்பதை வித விதமாகக் கற்பனை பண்ணிக் கொண்டு வந்ததை நினைக்க வெட்கமாக இருந்தது.

விமலாவின் அப்பா கடுகடுத்துக் கொண்டு வந்தார்.

ஜங்ஷன் நெருங்கி விட்டிருந்தது. அவரின் பேச்சு "செத்துத் தொலை" என்ற வார்த்தையில் போய் நின்றது.

"எதுக்குப்பா என்ன அடிக்கடி சாகச் சொல்றீங்க? மனசுக்கு ரொம்ப கஷ்டமா இருக்குப்பா" என்றாள் விமலா. ○



பொன்னியின் செல்வன்

நாற்பத்து நான்காம் அத்தியாயம்

"எல்லாம் அவள் வேலை!"

அமரர் கல்கி நூற்றாண்டு
1899-1999
100

கல்கி கலெக்ஷன்

மாமல்லபுரத்து மகா சிற்பிகளின் பரம்பரையில் தோன்றிய சிற்பக் கலைஞர் ஒருவர் இப்போது முன் வந்தார். புதிய முறையில் கருங்கற்றளி அமைப்பதற்கு அவருடைய மனோதர்ம கற்பனைப்படி சிறிய பொம்மைக் கோயில் ஒன்று அவர் செய்து கொண்டு வந்திருந்தார். அதை இப்போது மகாராணியிடம் காட்டினார்.

அதைப் பார்த்து மகாராணி மிகவும் வியந்தார். ஆழ்வார்க்கடியானுக்கு அருகில் நின்றவரைப் பார்த்து, "பட்டரே! இந்த ஆலய அமைப்பு எவ்வளவு சிறப்பாயிருக்கிறது, பார்த்தீர்களா? தமிழகத்திலுள்ள முக்கியமான சிவஸ்தலங்களிலெல்லாம் இம்மாதிரி புது முறையில் ஆலயம் எடுப்பிக்க வேண்டும் என்று என்னுடைய உள்ளத்தில் ஆவல் பொங்குகிறது!" என்று சொன்னார்.

"தாயே! தங்கள் விருப்பம் நிறைவேறுவதில் தடை என்ன இருக்கிறது? தேவாரப் பதிகப் பாடல் பெற்ற சிவ ஸ்தலங்களில் இம்மாதிரி கற்றளிகள் எடுப்பிக்கலாம். இந்த ஆலய அமைப்பைப் பார்த்தவுடனே இது 'பாடல் பெற்ற ஸ்தலம்' என்பதை ஜனங்கள் உணர்ந்து கொள்வார்கள்!" என்று சொன்னார் ஈசான சிவபட்டர்.

"ஆம், ஆம்! அப்பர் பெருமானும் ஞான சம்பந்தரும் சுந்தரமூர்த்தியும் பாடிய பதிகங்களையெல்லாம் சேகரிக்க வேண்டும். அவர்களுடைய பாதங்கள் பட்டுப் புனிதமாகி, அவர்களுடைய பாடல்களினால் தெய்வீகமடைந்த

அமரர் கல்கி

ஸ்தலங்களில் எல்லாம் இம்மாதிரி வானளாவிய விமான கோபுரங்களுடன் கற்றளிகளை எடுக்க வேண்டும். இந்த இரண்டுந்தான் என் மனோரதங்கள். இவை நிறைவேறுமா என்று அடிக்கடி ஐயம் உண்டாகிறது. என்னுடைய நாயகர் மட்டும் மேற்குத் திசை சென்று அகாலத்தில் இறைவன் திருவடிகளைச் சேராதிருந்தால், - இன்னும் சில காலம் ஜீவித்திருந்தால்,- என் மனோரதங்கள் எல்லாம் நிறைவேறியிருக்கும்...."

"இப்போது மட்டும் என்ன குறைவு, தாயே! தாங்கள் நினைத்ததை நினைத்தபடி நிறைவேற்றித் தர வேண்டும் என்று சக்கரவர்த்தி கட்டளை பிறப்பித்திருக்கிறார் அல்லவா? அவருடைய புதல்வர்கள் இருவரும் தங்கள் மனத்தில் நினைப்பதற்கு முன்னாலேயே தங்களுக்கு இது விருப்பமாயிருக்கும் என்று ஊகித்தறிந்து, அதை நிறைவேற்றச் சித்தமாயிருக்கிறார்கள். அப்படியிருக்கும்போது..."

"இருந்தாலும் என் மனத்தில் இப்போது அவ்வளவு உற்சாகம் இல்லை. ஏதேதோ கேள்விப்படுகிறேன். நான் செய்யும் கோவில் திருப்பணியினால் அரசாங்கப் பொக்கிஷம் காலியாகி விடுகிறதென்று சிலர் குறைபடுகிறார்களாம். 'சிவனுக்கு இவ்வளவு ஆலயங்கள் என்னத்திற்கு?' என்று கேட்கிறார்களாம். மற்றவர்கள் கேட்பதைப் பற்றி எனக்குக் கவலையில்லை. காஞ்சியில் உள்ள இளவரசர் கூட...."

இவ்விதம் பெரிய பிராட்டியார் சொல்லியபோது, ஆழ்வார்க்கடியான் ஓர் அடி முன்னால் வந்து நின்று, "தாயே! அந்த மாதிரி கேட்பவர்களில் அடியேனும் ஒருவன்!" என்றான்.

மகாராணி அவனைச் சற்று வியப்புடன் பார்த்தார். மற்றவர்கள், 'இது என்ன விபரீதம்?' என்ற முகபாவத்துடன் ஆழ்வார்க்கடியானை உற்று நோக்கினார்கள்.

ஆழ்வார்க்கடியான் மேலும் தொடர்ந்து ஆத்திரம் ததும்பிய குரலில், "அன்னையே! என் வயிறு கொதிக்கிறதே! இந்த மாதிரி அநியாயம் உண்டா? தர்ம தேவதையின் அவதாரமாக விளங்கும் தாங்கள் இந்த அநீதிக்கு இடம் கொடுக்கலாமா?" என்று அலறினான்.

திருமலையப்பனுக்குப் பக்கத்தில் நின்ற ஈசான சிவ பட்டர், "மகாராணி! என் சகோதரன் இப்படித்தான் ஏதாவது உளறுவான். திடீரென்று அவனுக்கு வெறி வந்துவிடும். தயவு செய்து மன்னித்து அருள வேண்டும்!" என்றார்.

அக்காலத்தில் சைவர்களும் வைஷ்ணவர்களும் தனித் தனி சாதியாகப் பிரிந்திருக்கவில்லை. ஒரே குடும்பத்தில் சைவப் பற்றுள்ளவர்களும் வீர வைஷ்ணவர்களும் இருப்பார்கள். ஒரே பட்டர் சிவன் கோவிலிலும் திருமால் கோவிலிலும் பூஜா கைங்கரியம் செய்வார். ஈசான சிவ பட்டர் அத்தகைய பரந்த நோக்கம் கொண்டவர். திருமலையப்பன் அவருடைய ஒன்றுவிட்ட சகோதரன். இருவரும் பரஸ்பரம் மிக்க அன்பு கொண்டவர்கள். ஆகவே தம்பியின் பதற்றமான பேச்சுக்காக ஈசான சிவ பட்டர் மகாராணியிடம் மன்னிப்புக் கோரினார்.

தேவி புன்னகை புரிந்து, "திருமலை! சற்று அமைதியாகப் பேசு! இப்போது என்ன அநியாயம் நடந்து விட்டது!" என்று கேட்டார்.

"அம்மா! பேயாண்டியும் கையில் கபாலம் ஏந்திப் பிக்ஷை எடுத்துப் பிழைப்பவனுமாகிய சிவனுக்கு எத்தனை ஆலயங்கள்? எத்தனை மாடக் கோயில்கள்? எத்தனை கற்றளிகள்? உலகத்தையெல்லாம் காத்து ரக்ஷிக்கும் விஷ்ணு மூர்த்திக்கு ஒரு திருக்கோயில் கூடக் கிடையாதா? ஒரு பழைய கோயிலைத் திருப்பணியாவது செய்யக் கூடாதா?" என்று திருமலையப்பன் ஓலமிட்டான்.

"அம்மா! அகில புவனமும் உய்ய ஆனந்த நடனமாடும் பெருமானுக்கு அரங்கமும் அம்பலமும் சிற்சபையும் பொற் சபையும் மாடக் கோயிலும் மதில் சூழ்ந்த மாளிகையும் வேண்டும். ஓயாமல் தூங்குகிற திருமாலுக்கு ஒரு சிறிய இடம் போதாதா? தீபம் இல்லாத இருட்டறை தானே அவருக்கு வேண்டும்? மாடக் கோயில்களும் கற்றளிகளும் என்னத்

திற்கு?" என்றார் ஈசான சிவ பட்டர்.

"அண்ணா! ஓயாமல் தூங்கும் பெருமான்தான் உலகளந்த பெருமான்! மகாபலியைப் பாதாளத்தில் அழுத்திய பெருமான்!" என்றான் ஆழ்வார்க்கடியான்.

"அப்படிப்பட்ட உலகளந்த பெருமான் எங்கள் சிவபெருமானுடைய பாதாரவிந்தங்களைத் தரிசிப்பதற்குத் தோண்டித் தோண்டிப் பாதாளம் வரையில் சென்றும் எம்பெருமான் பாதங்களைக் கண்டு பிடிக்க முடியவில்லை!" என்றார் ஈசான சிவ பட்டர்.

"உங்கள் சிவன் அவ்வளவு பெரியவராயிருந்தால், அவருக்குக் கோயில் எதற்கு என்றுதான் கேட்கிறேன். கோயிலுக்குள் வரும்போது அவர் தலை இடித்துக் கோயில் இடிந்து விழுந்து விடுமே!" என்று சொன்னான் ஆழ்வார்க்கடியான்.

மூவலரையர் திருமகள் இதைக் கேட்டுச் சிரித்துக் கொண்டே, "உங்கள் சண்டையைக் கொஞ்சம் நிறுத்துங்கள். திருமலை! நீ சொல்லுவது என்ன? பெருமாளுக்குக் கோயில் கட்டக் கூடாது என்று யார் சொன்னது! எந்த ஊர் விண்ணகரத்தைப் புதுப்பிக்க வேண்டும் என்கிறாய்? அதை நல்ல முறையில் சொல்லுவதுதானே?" என்றார்.

"அம்மணி! தங்களுடைய மாமனார், மூன்று உலகும் கீர்த்தி பெற்ற பராந்தக சக்கரவர்த்தி. அவருடைய பட்டப் பெயரால் விளங்கும் வீரநாராயணபுரத்துக்குப் போயிருந்தேன். அங்கே வீரநாராயணப் பெருமான் அல்லும் பகலும் தூங்காமல், கண் மூடாமல், மாகடல் போன்ற வீர நாராயண ஏரியைக் காத்து அருள் புரிந்து வருகிறார். அத்தகைய பெருமானுடைய கோயிலில் செங்கல் சுவர்கள் இடிந்து விழுந்து வருகின்றன. கோயில் இடிந்தால் ஏரிக் கரையும் இடிந்து நூறு நூறு ஊர்கள் பாழாகிவிடும். வீரநாராயணப் பெருமாளின் கோயிலைக் கற்றளியாக்கித் திருப்பணி செய்ய வேண்டும்!" என்றான்.

"ஆகட்டும், செய்வோம்! அதைப் பற்றி விவரமாக என்னிடம் சொல்! இவர்கள் எல்லாரும் இப்போது போகட்டும்!" என்று சோழகுல மூதாட்டி கூறினார்.


அந்தக் குறிப்பை உணர்ந்து ஈசான சிவ பட்டர் உள்பட அனைவரும் வெளியேறிச் சென்றார்கள்.

உடனே, செம்பியன் மாதேவி குரலைத் தாழ்த்திக் கொண்டு, "திருமலை! யாத்திரையில் எங்கெங்கே போயிருந்தாய்? என்னென்ன பார்த்தாய்! என்னென்ன கேள்விப் பட்டாய்? விவரமாய்ச் சொல்லு! ஏதோ முக்கியமான விஷயம் கொண்டு வந்திருக்கிறாய். அதனால் தான் அப்படிக் குறுக்கிட்டுப் பேசினாய், இல்லையா?" என்று சொன்னார்.

"ஆம், தாயே! முக்கியமான விஷயம் பல கொண்டு வந்திருக்கிறேன். ஆயினும் தங்கள் திருவுள்ளத்தை நோக்கிக் காத்திருப்பேன். ஆனால் காஞ்சியில் உள்ள இளவரசரைப் பற்றி ஏதோ சொல்லத் தொடங்கினீர்கள். அதற்காகவே தடை செய்தேன். சற்று முன் இங்கே இருந்தவர்களில் உண்மையானவர் யார், ஒற்றர் யார் என்று யாருக்குத் தெரியும்? நாட்டில் எத்தனையோ விபரீதங்கள் நிகழ்ந்து வருகின்றன. எப்போது யாரால் என்ன துரோகம் நடக்கும் என்று சொல்வதற்கில்லை!" என்றான் திருமலையப்பன்.

பெரிய பிராட்டி பெருமூச்சு எறிந்தார். "ஒரு குடும்பத்தைச் சேர்ந்தவர்கள், இரத்த பாசம் உள்ளவர்கள், - ஒருவரையொருவர் சந்தேகிக்கும் படி ஆகிவிட்டது. ஆதித்த கரிகாலன் ஒருகாலத்தில் என்னிடம் எவ்வளவு விசுவாசம் வைத்திருந்தான்? சொந்தத் தாயைக் காட்டிலும் நூறு மடங்கு அன்பும் மரியாதையும் கொண்டிருந்தானே? அவன் கூடவல்லவா என் பேரில் ஐயுறும்படி ஆகிவிட்டது! திருமலை! என் நாயகருடன் நானும் இந்த மண்ணுலகை விட்டுப் போயிருந்தால் எவ்வளவு நன்றாயிருக்கும்! என்னை வரக் கூடாதென்று தடுத்து விட்டாரே? இங்கே செய்ய வேண்டிய பணிகளையும் கொடுத்து விட்டல்லவா போய் விட்டார்? என்ன துர்ப்பாக்கியசாலி நான்?" என்றார்.

"அம்மா! தங்கள் பதி முக்காலமும் உணர்ந்த மகான். கலியுகத்தில் ஜனக மகாராஜாவைப் போல் இந்தச்



சோழ சிம்மாசனத்தில் வீற்றிருந்தார். தங்களை இருக்கும்படி அவர் சொல்லிப் போனது இந்த நாடு செய்த பாக்கியம். நூறு ஆண்டாகப் பல்கிப் பெருகிவரும் இந்தச் சோழப் பேரரசு சகோதரச் சண்டையினால் நசித்து நாசமாகாமல் காப்பாற்றும் பொறுப்பு தங்களைச் சார்ந்தது. தங்களாலே தான் அது முடியக் கூடியது!"

"எனக்குத் தோன்றவில்லை. என் சொந்த மகன் நான் சொல்வதைக் கேட்கவில்லை என்று ஏற்பட்ட பிறகு மற்றவர்களை நான் எப்படிக் கட்டுப்படுத்த முடியும்? இருக்கட்டும், ஒற்றர்களைப் பற்றிச் சொன்னாயே? இங்கே யார் ஒற்றர்களை அனுப்பியிருக்க முடியும்? இளவரசன் ஆதித்த கரிகாலன் அனுப்பியிருப்பான் என்று நினைக்கிறாயா? என் பேரில் அவனுக்கு அவ்வளவு அவநம்பிக்கை வந்து விட்டதா?" என்றார் சிவ பக்த சிரோமணியான மாதரசி.

"என்னுடைய இரு காதினாலும் கேட்டேன், தாயே! இல்லாவிட்டால் இளவரசர் கரிகாலர் தங்கள் பேரில் ஐயப்படுவார் என்பதை நான் ஒரு நாளும் நம்பியிருக்க மாட்டேன்..."

"என்ன கேட்டாய், திருமலை! உன் காதினால் என்ன கேட்டாய்?"

"மாமல்லபுரத்துக் கற்கோயில் ஒன்றின் அருகில் உட்கார்ந்து அவர்கள் பேசிக் கொண்டிருந்ததைக் கேட்டேன்..."

"அவர்கள் என்றால் யார்?"

"இளவரசர் ஆதித்த கரிகாலர் ஒன்று. திருக்கோவலூர் மலையமான் இரண்டு. பல்லவப் பார்த்திபேந்திரன் மூன்று. - இவர்கள் மூவரும் பேசிக் கொண்டிருந்தார்கள். இருளடைந்த கற்கோயிலுக்குள் நான் மறைந்திருந்து கேட்டேன். மலையமானும் பார்த்திபேந்திரனும் வெகு ஆத்திரமாகப் பேசினார்கள். இரண்டு பழுவேட்டரையர்களும் தங்கள் குமாரர் மதுராந்தகத் தேவரும் சேர்ந்து சதி செய்து சக்கரவர்த்தியைச் சிறைப் படுத்தி வைத்திருக்கிறார்களாம்.

அதில் தங்களுக்கும் சம்பந்தம் இருக் கத்தான் வேண்டும் என்று மலையமான் கூறினான். அதை மற்றவர்கள் ஆமோதித்தார்கள். தஞ்சாவூர் மீது படையெடுத்துச் சென்று சக்கரவர்த்தியை விடுவித்துக் கொண்டு வர வேண்டும் என்று பார்த்திபேந்திரன் சொன்னான். அதையும் மற்ற இருவரும் ஆமோதித்தார்கள். ஆனால் சக்கரவர்த்தியைச் சண்டையின்றிக் காஞ்சிபுரத்துக்குக் கொண்டு வர இன்னும் ஒரு முயற்சி செய்து பார்க்க வேண்டும் என்று இளவரசர் கூறினார். அதன் பேரில் சக்கரவர்த்திக்கு ஓலை எழுதி ஒரு தூதனிடம் கொடுத்து அனுப்பத் தீர்மானித்தார்கள். அந்தத் தூதன் யார் என்பதையும் நான் கண்டு கொண்டேன். அவன் சாதாரணத் தூதன் அல்ல. மகா சாமர்த்தியசாலி; வீர பராக்கிரமசாலி. தூதன் வேலையோடு ஒற்றன் வேலையையும் செய்யக்கூடியவன். அவனுடன் நான் பேச்சுக் கொடுத்துப் பார்த்தேன். நான் தட்டியில் நுழைந்தால் அவன் கோலத்துக்குள் நுழையப் பார்த்தான். அவன் ஒன்றுமே தெரியப்படுத்தாமல் என்னிடமிருந்து பல விஷயங்களைக் கிரஹிக்கப்பார்த்தான். குடந்தை ஜோதிடர் அவனிடம் தமது கைவரிசையைக் காட்டினார். அதுவும் பலிக்கவில்லை. பிறகு அவன் தஞ்சாவூருக்குச் சென்று சக்கரவர்த்தியிடம் ஓலையைக் கொடுத்துவிட்டான் என்று கேள்விப் படுகிறேன்..."

"அப்புறம் என்ன நடந்தது? அதற்குச் சக்கரவர்த்தி என்ன மறுமொழி சொன்னாராம்?"

"மறு நாளைக்கு விடை எழுதித் தருவதாகச் சொன்னாராம். அதற்குள் அவன் பேரில் பழுவேட்டரையர்களுக்கு ஏதோ சந்தேகம் வந்து விட்டது. அவர்களுடைய கட்டுக் காவல்களையெல்லாம் மீறிக் கொண்டு அவன் எப்படியோ தப்பித்துச் சென்று விட்டானாம்!"

"அப்படியானால் அவன் மிகச்



சாமர்த்தியசாலிதான்; சந்தேகமில்லை. அப்புறம் நீ என்ன செய்தாய்? காஞ்சி புரத்திலிருந்து கிளம்பிய பின்?''

''நேரே இங்கு வருவதற்காகவே புறப்பட்டேன். வழியில் வீரநாராயண புரத்தில் பெருமாளைத் தரிசிக்கத் தங்கினேன். தங்கிய இடத்தில் பெருமாள் அருளினால் ஒரு பெரிய இரகசியத்தை அறியும்படி நேர்ந்தது...''

''அது என்ன? இன்னும் ஒரு இரகசியமா?''

''ஆம், தாயே! கடம்பூர் சம்புவரையர் மாளிகையில் அன்று இரவு ஒரு பெரிய விருந்து என்று தெரிந்தது. அந்த விருந்துக்குப் பெரிய பழுவேட்டரையர் வந்தார். அவருடன் இளையராணியின் பல்லக்கும் வந்தது!''

''திருமலை! எல்லாம் அவளுடைய செயல்தான்! இந்தச் சோழநாட்டுக்கு இப்போது நேர்ந்திருக்கும் ஆபத்து அந்தப் பெண்ணால் ஏற்பட்டதுதான்! அவளை நீ சந்தித்துப் பேச முடிந்ததா?''

''முடியவில்லை, அம்மா! முடியவில்லை! தங்கள் கட்டளையின் பேரில் அந்தப் பெண் பாம்பை என் சகோதரியாகப் பாவித்து எத்தனை வருஷம் வளர்த்தேன்! எங்கெல்லாம் தேடி அலைந்து பிரபந்த பாசுரங்களைக் கற்றுக் கொண்டு வந்து அவளுக்குக் கற்பித்தேன்! அதையெல்லாம் நினைத்துப் பார்த்தால் என் நெஞ்சம் கொதிக்கிறது! பெரிய பழுவேட்டரையரின் ராணியான பிறகு அவள் என்னைப் பார்க்கக் கூட மறுக்கிறாள்...!''

''அதற்காக வருத்தப்பட்டு என்ன பயன்? இந்த உலகத்து மனிதர்களின் காரியங்கள் இப்படித்தான். நினைப்பது ஒன்றும், நடப்பது ஒன்றுமாக முடிகிறது.... அப்புறம் கடம்பூரில் நடந்தது என்ன?''

''பல்லக்கிலே வந்தவள் நந்தினிதான் என்று எண்ணிக் கொண்டு எப்படியாவது அவளைச் சந்திப்பது அல்லது ஓலை எழுதி அனுப்பியாவது எச்சரிக்கை செய்வது என்ற உத்தேசத்துடன் கடம்பூருக்குச் சென்றேன். பெரும் அபாயத்துக்குத் துணிந்து கடம்பூர் மாளிகையின் வெளிச் சுவர் ஏறிக் குதித்தேன். அப்போது தான் அந்த அதிசயமான மர்ம இரகசியம் தெரிய வந்தது...''

''திருமலை! உன் வழக்கமே இப்படித்தான். மேலும் மேலும் ஆவலைக் கிளப்புவாயே தவிர, செய்தியைச் சொல்ல மாட்டாய். அது என்ன அப்படிப்பட்ட அதிசயமான மர்ம இரகசியம்...?''

''மன்னிக்க வேண்டும், தாயே! அதைச் சொல்லுவதற்கே தயக்கமாயிருக்கிறது. மூடு பல்லக்கில் இருந்தது பழுவூர் இளையராணி அல்ல. பழுவேட்டரையர் தாம் போகுமிடமெல்லாம் இளைய ராணியை அழைத்துக் கொண்டு போகிறார் என்று நாம் எல்லாரும் எண்ணிக் கொண்டிருந்தோமே, அது பெரிய தவறு...''

''பழுவேட்டரையர் பின் யாரை மூடு பல்லக்கில் வைத்து அழைத்துப் போகிறார்? அந்தக் கிழவரின் பெண் சபலத்துக்கு அளவேயில்லையா?''

''மூடு பல்லக்கில் இருந்தது ஸ்திரீ அல்ல, தாயே!''

''ஸ்திரீ இல்லை என்றால்? எந்த ஆண் மகன் அப்படி மூடு பல்லக்கில் மறைந்து கொண்டு வருவான்?''

''மன்னிக்க வேண்டும், அம்மா! மூடு பல்லக்கில் மறைந்து வந்தது தங்களுடைய திருக்குமாரர் மதுராந்தகத் தேவர்தான்!''

செம்பியன் மாதேவி சிறிது நேரம் திகைத்து நின்று விட்டார்.

''கடவுளே! நான் செய்த குற்றத்துக்கு இவ்வளவு பெரிய தண்டனையா?'' என்று தமது வாய்க்குள்ளே சொல்லிக் கொண்டார்.

பிறகு, ஆழ்வார்க்கடியான் சம்புவரையர் மாளிகையில் அர்த்த ராத்திரியில் நடந்த சதிக் கூட்டத்தைப் பற்றிச் சொன்னான்.

அதைக் கேட்டு அம்மாதரசி அடைந்த மனத்துயரைச் சொல்லி முடியாது. ''ஐயோ! என் மகனே! உன்னைச் சிவ ஞானச் செல்வனாக வளர்க்க முயன்றேனே? அதன் பயனா இது? சோழர் பெருங்குலத்துக்கு உன்னால் இத்தகைய

அபகீர்த்தியா நேர வேண்டும்? சோழப் பேரரசுக்கு இத்தகைய பெருந் தீங்கு உன்னாலேயா ஏற்பட வேண்டும்?" என்று புலம்பினார்.

பின்னர், "திருமலை! மறுபடியும் என்னைப் பார்த்துவிட்டுப் போ! அதற்குள் குந்தவையிடம் பேசி இந்தப் பெரும் விபத்தை எப்படித் தடுக்கலாம் என்று யோசித்துச் சொல்லுகிறேன்!" என்றார்.

"தாயே! இளவரசியிடம் கூடத் தாங்கள் இதைப் பற்றிப் பேசாமல் இருப்பது நல்லது."

"ஏன்? அவளைப் பற்றிக் கூட ஐயப்படுகிறாயா என்ன?"

"அது இயற்கைதானே அம்மா? ஆதித்த கரிகாலரின் அருமைச் சகோதரி தானே அவர்?"

"அதனால் என்ன...? திருமலை! சூரியன் மேற்கில் உதயமாகிக் கிழக்கே அஸ்தமித்தது என்று நீ சொன்னாலும் நம்புவேன். சிவபெருமானைக் காட்டிலும் திருமால் பெரிய தெய்வம் என்று நீ சாதிப்பதை நம்பினாலும் நம்புவேன். ஆனால் குந்தவையின் பேரில் குற்றம் சொன்னால் நம்ப மாட்டேன். அவள் பிறந்த அன்றைக்கு அரண்மனை மருத்துவச்சி எடுத்து வந்து குழந்தையை என் இரு கரங்களிலும் கொடுத்தாள். அன்று முதல் நானே அவளை வளர்த்து வந்தேன். என் வயிற்றில் பிறந்த மகளைக் காட்டிலும் அருமையாக வளர்த்து வந்தேன். அவளும் என்னையே பெற்ற தாயாகவும், தகப்பனாகவும் எண்ணி இன்றுவரை அன்பும் மரியாதையும் செலுத்தி வருகிறாள்...."

"அம்மா! ஒன்று கேட்கிறேன். குந்தவை தேவி குடந்தை சோதிடரிடம் சென்று வந்ததைப் பற்றித் தங்களிடம் சொன்னாரா?"

"இல்லை; அதனால் என்ன?"

"ஜோசியர் வீட்டில் வாணர்குலத்து வாலிபன் ஒருவனைப் பார்த்தது பற்றியும் மறுபடி அவனை அரிசிலாற்றங்கரையில் சந்தித்தது பற்றியும் சொன்னாரா?"

"இல்லை; இதெல்லாம் என்ன கேள்வி? இப்படிக் கேட்பதில் உன் கருத்து என்ன?"

"தங்களிடம் சொல்லக் கூடாத இரகசியம் ஒன்று இளவரசி வைத்திருக்கிறார் என்பதுதான். நான் குறிப்பிட்ட அந்த வாலிபன்தான் ஆதித்த கரிகாலரின் தூதன்; ஒற்றன் என்று சொன்னாலும் தவறாகாது."

"திருமலை! அதெல்லாம் எப்படியாவது இருக்கட்டும். என்னிடம் குந்தவை ஏதேனும் ஒன்றைச் சொல்லவில்லையென்றால், அதற்குத் தக்க காரணம் இருக்கும். அவளிடம் சந்தேகப்படுவதைக் காட்டிலும் என் பிராணனையே விட்டு விடுவேன்!" என்றார் சிவஞான கண்டராதித்தரின் பட்டமகிஷி.

"ஐயையோ! அப்படி ஒன்றும் நேர வேண்டாம். தங்களுடைய நம்பிக்கையே மெய்யாகட்டும். இளவரசி என்னிடம் ஏதோ கேட்பதற்காக வரச் சொல்லியிருக்கிறார். தாங்கள் பார்க்க விரும்புவதாக நானே தெரிவித்து விடுகிறேன்" என்றான் ஆழ்வார்க்கடியான்.

நாற்பத்து ஐந்தாம் அத்தியாயம்

குற்றம் செய்த ஒற்றன்

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு கரிகால் பெருவளத்தான் என்னும் சோழ மன்னன் காவேரி நதிக்கு இரு புறமும் கரை எடுத்தான். வெகு காலம் அந்தக் கரைகள் நல்ல நிலைமையில் இருந்து காவேரி ஆற்றைக் கட்டுக்குள் வைத்திருந்தன. பின்னர், சோழ குலத்தின் வலி குறைந்தது. பாண்டியர்களும் பல்லவர்களும் களப்பாளரும் வாணரும் தலையெடுத்தார்கள். இந்தக் காலத்தில் காவலன் இல்லாத காவேரி நதி அடிக்கடி கட்டு மீறிக் கரையை உடைத்துக் கொண்டது. இவ்விதம் பெரிய அளவில் கரை உடைந்த சில சந்தர்ப்பங்களில் நதியின் போக்கே மேலும் கீழுமாக

மாறுவதுண்டு. பழங்காவேரி புதுக் காவேரியாகும்; அடியோடு நதியின் கதி மாறிப் போய்விட்டால், பழைய நதிப் படுகை சில சமயம் நன்செய் நிலமாக மாறும்; வேறு சில சமயங்களில் தண்ணீர் தேங்கி நிற்கும் ஓடைகளாகிக் கடல் போல் அலைமோதிக் கொண்டிருக்கும்.

பழையாறு நகரின் சோழ மாளிகைகளையொட்டித் தென்புறத்தில் அத்தகைய ஓடை ஒன்று இருந்தது.

காவேரியின் கதி மாறியதால் ஏற்பட்ட இந்த ஓடையைச் சோழ மன்னர்கள் வேண்டுமென்றே ஆழமாக்கி, விசாலப் படுத்தி, எப்போதும் தண்ணீர் ததும்பி நிற்கும்படிச் செய்திருந்தார்கள். அரண்மனைகளுக்கும், முக்கியமாக அந்தப்புரங்களுக்கும் இந்த விசாலமான நீர் ஓடை ஒரு நல்ல பாதுகாப்பாக இருந்தது. அந்த வழியில் யாரும் எளிதில் வந்து விட முடியாது. அரண்





மனையோடு நெருங்கிய தொடர்புள்ளவர்கள்தான் படகில் ஏறி வரலாம்.

அரண்மனை அந்தப்புரங்களின் அழகிய உத்தியான வனங்கள் இந்த நீரோடையை ஒட்டி அமைந்திருந்தன. அரண்மனை மாதர்கள் நிர்ப்பயமாக அந்த உத்தியான வனங்களில் எந்த நேரமும் உலாவுவார்கள். கூடிக் குலாவுவார்கள். மயில்களாகி ஆடுவார்கள்; குயில்களாகிப் பாடுவார்கள். சில சமயம் ஓடையில் இறங்கி நீராடுவார்கள். ஓடையில் ஓடம் ஓட்டியும் விளையாடுவார்கள்.

சோழர் குலத்தில் ஓர் அரசர் காலமாகி இன்னொருவர் பட்டத்துக்கு வரும்போது புதிய அரண்மனை கட்டிக் கொள்வதுண்டு. பழைய அரண்மனையில் காலமான மன்னரின் ராணிகளும் மற்றப் பிள்ளைகளும் வசிப்பார்கள்.

பழையாறு அரண்மனைகளில் செம்பியன் மாதேவியின் அரண்மனைக்கு அடுத்தபடியாகக் குந்தவைப் பிராட்டியின் மாளிகை அழகிலும் கம்பீரத்திலும் சிறந்து விளங்கியது. அது சுந்தர சோழர் வசித்த அரண்மனை அல்லவா? அவர் தஞ்சை சென்ற பிறகு, குந்தவை அந்த அரண்மனையின் எஜமானியாக விளங்கினாள்.

அம்மாளிகையின் பின்புறத்து உத்தியானவனம் மிகச் சோபிதமாக விளங்கியது. அதில் வானளாவிய ஆலமரங்களும் இருந்தன; சின்னஞ்சிறு பூஞ்செடிகளும் இருந்தன. வளைந்து நெளிந்து மரங்களைத் தழுவிக் கொண்டிருந்த பூங்கொடிகளும், பூங்கொடிகளாலான கொடி வீடுகளும் இருந்தன.

குந்தவையும் அவளுடைய தோழிமார்களும் மாலை நேரங்களைப் பெரும்பாலும் அந்த உத்தியானவனத்திலேயே கழிப்பது வழக்கம்.

சில சமயம் எல்லாரும் சேர்ந்து ஓரிடத்தில் உட்கார்ந்து கொண்டு கதைகள் பேசிக் கொட்டமடிப்பார்கள்.

இன்னும் சில சமயம் இரண்டு பேராகவும், மூன்று பேராகவும் பிரிந்து சென்று அந்தரங்கம் பேசுவார்கள்.

சில நாளாகக் குந்தவையும் வானதியும் தனியே பிரிந்து சென்று பேசுவது வழக்கமாய்ப் போயிருந்தது.

அன்றைக்கு ஒரு பெரிய ஆலமரக் கிளையில் கட்டித் தொங்கவிட்டிருந்த கொடி ஊஞ்சலில் குந்தவையும் வானதியும் அமர்ந்து ஆடிக் கொண்டும் பேசிக் கொண்டுமிருந்தார்கள்.

பறவைகளின் கலகலத் தொனியுடன் போட்டியிட்டுக் கொண்டு பெண்மணிகளின் குதுகலச் சிரிப்பொலியும் அவ்வப்போது அந்த உத்தியான வனத்தில் கேட்டுக் கொண்டிருந்தது.

ஆனால் குந்தவையும் வானதியும் மட்டும் சிரிக்கவில்லை. மற்றவர்களின் சிரிப்பு அவர்களுக்கு அவ்வளவாய்ப் பிடிக்கவும் இல்லை. பேச்சுத்தான் அவர்கள் அதிகமாகப் பேசினார்களோ என்றால் அதுவும் அவ்வளவாக இல்லை.

கொடி வீடு ஒன்றிலிருந்து ஒரு பெண் கீதம் ஒன்று பாடினாள். அது கண்ணன் பிறந்த நாள் அல்லவா? அவள் பாடியதும் கண்ணனைப் பற்றிய பாடல்தான்.

வெண்ணிலாவில் வேணுகானம் கேட்கிறது. அது கண்ணனிடம் காதல் கொண்ட ஒரு பெண்ணை வேதனை செய்கிறது: அவள் தன் வேதனையை வாய் திறந்து வெளியிடுகிறாள். மரக்கிளையிலிருந்து ஒரு கிளி அவளுக்கு ஆறுதல் சொல்லுகிறது.

பெண்:-

வேதனை செய்திடும் வெண்ணிலவில்-
இங்கு
வீணன் எவன் குழல் ஊதுகின்றான்?
நாதன் இலா இந்தப் பேதை தன்னை
நலிந்திடுதல் என்ன புண்ணியமோ?

கிளி:-

வானமும் வையமும் இன்புறவே-
ஐயன்
வாய்மடுத்தூதும் குழலிசைதான்
மானே உந்தனை வருத்திடுமோ-இந்த
மானிலம், காணாப் புதுமை அம்மா!

பெண்:-

பூவையே! உந்தனைப்
போற்றிடுவேன்-நல்ல
புன்னைமலர் கொய்து

சூட்டிடுவேன்-எந்தன்
ஆவி குலைந்திடும் வேளையிலே-ஒரு
ஆறுதல் கூற நீ வந்தனையோ?

கிளி:-
கட்டழகி! உந்தன் காதலினால்-
எங்கள்
கண்ணன் படுந்துயர் சொல்ல
வந்தேன்- உன்னை
விட்டுப் பிரிந்த நாள் முதலாய்- நல்ல
வெண்ணெயும் வேம்பாய்க் கசந்த
தென்பான்!

பாடலின் பின் பகுதியைக் கவனமாகக் கேட்டு வந்த குந்தவை, பாடல் முடிந்ததும், "நல்ல கண்ணன் இந்தச் செந்தமிழ் நாட்டுக்குத் தெய்வமாக வந்து வாய்த்தான்! வெண்ணெய் உண்டு வேய்ங்குழல் ஊதிப் பெண்களுடன் காலங் கழித்துக் கொண்டிருந்தால் மற்ற காரியங்களெல்லாம் என்ன ஆவது?" என்றாள்.

மறுமொழி சொல்லாமலிருந்த வானதியைப் பார்த்து, "என்னடி மௌனம் சாதிக்கிறாய்? நீயும் கண்ணன் குழலில் மயங்கிவிட்டாயா, என்ன?" என்று கேட்டாள்.

"அக்கா! என்ன கேட்டீர்கள்?" என்றாள் வானதி.

"என்ன கேட்டேனா? உன் கவனம் எங்கே சென்றிருந்தது?"

"எங்கும் போகவில்லையே? உங்களிடந்தான் இருந்தது."

"அடி கள்ளி! ஏனடி பொய் சொல்லுகிறாய்? உண்மையில் உன்மனம் இவ்விடத்தில் இல்லவே இல்லை! எங்கே இருக்கிறது என்று நான் சொல்லட்டுமா?"

"தெரிந்தால் சொல்லுங்களேன்!"

"நன்றாகத் தெரியும், ஈழநாட்டுப் போர்க்களத்துக்குப் போயிருக்கிறது. அங்கே என் தம்பி, ஒரு கபடற்ற பிள்ளை இருக்கிறானே, அவனை இன்னும் என்ன பொடி போட்டு மயக்கலாம் என்று உன் மனம் யோசித்துக் கொண்டிருக்கிறது!"

"நீங்கள் கூறியதில் ஒரு பாதி உண்மைதான், அக்கா! என் மனம் ஈழ நாட்டுக்குத்தான் அடிக்கடி போய் விடுகிறது. ஆனால் அவரைப் பொடி போட்டு மயக்குவதைப் பற்றி யோசிக்கவில்லை. அவர் போர்க்களத்தில் எப்படியெல்லாம் கஷ்டப்படுகிறாரோ, அவருடைய திருமேனியில் எத்தனை காயம் பட்டிருக்கிறதோ, அவர் எங்கே படுத்துக் கொள்கிறாரோ, என்ன உணவு சாப்பிடுகிறாரோ-என்றெல்லாம் எண்ணமிடுகிறது. அவர் அப்படியெல்லாம் அங்கே கஷ்டப்பட்டுக் கொண்டிருக்க, இங்கே நான் சுகமாக உண்டு உடுத்துப் பஞ்சணை மெத்தையில் படுத்துத் தூங்குவதை நினைக்கும் போது வேதனையாயிருக்கிறது. எனக்கு மட்டும் இறகுகள் இருந்தால், இந்த நிமிஷமே இலங்கைக்குப் பறந்து போய் விடுவேன்...!"

"பறந்து போய் என்ன செய்வாய்? அவனுக்கு மேலும் உபத்திரவந்தானே செய்வாய்?"

"ஒரு நாளும் இல்லை. அர்ச்சுனனுக்குச் சுபத்திரையும் கிருஷ்ணனுக்குச் சத்திய பாமாவும் ரதம் ஓட்டியது போல் நானும் ஓட்டுவேன். அவர் பேரில் எய்யும் அம்புகளை என் மார்பில் நான் தாங்கிக் கொள்வேன்."

"நீ தாங்கிக் கொண்டால் அதை அவன் பார்த்துக் கொண்டிருப்பானா?"

"அது அவருக்கு இஷ்டமில்லாவிட்டால் பாசறையில் காத்திருப்பேன். போர்க்களத்திலிருந்து அவர் திரும்பி வந்ததும் காயங்களுக்கு மருந்து போட்டுக் கட்டுவேன். மலர்ப் படுக்கை விரித்து வைத்திருப்பேன். அறுசுவை உண்டி சமைத்து வைத்திருந்து அளிப்பேன். உடல் வலியை மறப்பதற்கு வீணை மீட்டிப் பாட்டுப் பாடித் தூங்கப் பண்ணுவேன்..."


"இதெல்லாம் நடவாத காரியங்கள், வானதி! சோழ குலத்து வீரர்கள் போர்க்களங்களுக்குப் பெண்களை அழைத்துப் போவதில்லை..."

"ஏன் அக்கா, அப்படி?"

"அவர்களுக்குப் புண்களைப் பற்றிப் பயமில்லை. அதைக் காட்டிலும் பெண்களைப் பற்றித்தான் அதிக பயம்!"

"அது ஏன்? பெண்கள் அவர்களை என்ன செய்து விடுவார்கள்?"

"அவர்களை ஒன்றும் செய்ய மாட்டார்கள். ஆனால் உன்னைப் போன்ற பெண்கள் போர்க்களத்துக்குப் போனால் எதிரிப் படை வீரர்கள் உங்களுடைய



அழகைக் கண்டு மயங்கி வந்து சரணாகதி அடைந்து விட்டால் என்ன செய்கிறது! அப்போது நம் சோழ நாட்டு வீரர்கள் தங்களுடைய வீரத்தைக் காட்ட முடியாதல்லவா? பெண்களைக் கொண்டு வெற்றியடைந்தார்கள் என்ற புகழைச் சோழ குலத்தார் விரும்புவதில்லை."

"அப்படிக் கூட உண்டா? எதிரி வீரர்கள் அவ்வளவு மூடர்களாயிருந்து விடுவார்களா? பெண்களின் அழகைக் கண்டு மயங்கி விடுவதற்கு?"

"ஏன் மாட்டார்கள்? அடியே, வானதி! குடந்தை ஜோதிடர் வீட்டிலும் அரிசிலாற்றங்கரையிலும் நாம் ஒரு வாலிப வீரனைப் பார்த்தோமே, ஞாபகம் இருக்கிறதா?"

"இருக்கிறது. அதற்கு என்ன?"

"நம்மையெல்லாம் கண்டதும் அவன் எப்படிப் போதை கொண்டவன் போல் மயங்கி நின்றான் என்பது ஞாபகம் இருக்கிறதா?"

"அதுவும் ஞாபகம் இருக்கிறது. ஆனால் நம்மையெல்லாம் பார்த்து விட்டு என்று தாங்கள் சொல்லுவதுதான் தவறு. அவன் தங்களைப் பார்த்து விட்டுத்தான் அப்படி மயங்கி நின்றான். பக்கத்தில் நின்றவர்களை அவன் கண்ணெடுத்தும் பார்க்கவில்லை, அக்கா!"

"வானதி! நல்ல பொய் சொல்கிறாய்! பரிகாசம் செய்கிறாயா என்ன?"

"இல்லவே இல்லை! நான் ஒன்று கேட்கிறேன்; அதற்கு உண்மையாக விடை சொல்கிறீர்களா?"

"கேட்டுப் பாரேன்!"

"அந்த வாலிப வீரனுடைய ஞாபகம் உங்களுக்கு இப்போது ஏன் வந்தது?"

"நல்ல வாயாடியாகப் போய்விட்டாய் நீ! அவனுடைய ஞாபகம் வந்ததில் என்ன தவறு?"

"தவறு என்று யார் சொன்னது? நான் சொல்லவில்லையே? அது மிகவும் இயற்கைதான்! எனக்குக் கூட, அந்த வாலிபனுடைய கதி அப்புறம் என்னவாயிற்றோ என்று கவலைதான்."

"உனக்கு ஏன் அதைப் பற்றிக் கவலை உண்டாக வேண்டும்?"

"ஏன் கவலைப்படக் கூடாது? ஒருவரை நாம் பார்த்திருந்தால், அவரைப்



பற்றிய ஞாபகம் நமக்கு அடிக்கடி வந்தால், அவர் என்ன ஆனார் என்று தெரிந்து கொள்ள விரும்புவது இயற்கை அல்லவா!"

"நல்ல இயற்கை! அப்படியெல்லாம் மனம் சிதறுவதற்கு நாம் இடம் கொடுத்து விடக் கூடாது. மனத்தைக் கட்டுப்படுத்தி வைக்க வேண்டும்... அதோ கேளடி, வானதி! அது என்ன பறைச் சத்தம்? அந்தக் குரல் என்ன சொல்லுகிறது? சற்றுக் கவனமாகக் கேள், பார்க்கலாம்!"

ஆம்; தூரத்தில் எங்கேயோ வீதியில் பறை கொட்டும் சப்தமும், நடு நடுவே மனிதக் குரல் கூச்சலிடும் சப்தமும் கேட்டது. காது கொடுத்துக் கவனமாகக் கேட்டபோது, மனிதக் குரல் கூறியது இது என்று தெரிந்தது:

"சத்துரு நாட்டிலிருந்து வந்த ஒற்றன் ஒருவன் தஞ்சாவூர்க்கோட்டையில் பொய் முத்திரையைக் காட்டிப் புகுந்து உளவு அறிந்து கொண்டு ஓடி விட்டான். இரண்டு பேரை மரண காயப்படுத்தி விட்டுத் தப்பிப் போய்விட்டான். வாலிபப் பிராயத்தினன். வாட்டசாட்டமான தேகம் உடையவன். இந்திரஜித்தைப் போன்ற மாய தந்திரக்காரன். பெயர் வல்லவரையன் வந்தியத்தேவன். அவனுக்கு அடைக்கலம் கொடுப்போருக்கு மரண தண்டனை விதிக்கப்படும். அவனைப் பிடித்துக் கொடுப்போருக்கு ஆயிரம் பொன் பரிசு அளிக்கப்படும். தஞ்சைக் கோட்டைத் தளபதி பழுவேட்டரையர் காலாந்தக கண்டரின் கண்டிப்பான கட்டளை!"

இவ்விதம் மனிதக் குரல் கூறி முடித்ததும் பறை, 'தம், தம், தடதடதம்' என்று முழங்கியது. குந்தவை தேவியின் திருமேனி ஏனோ நடுங்கியது.

அச்சமயம் தாதி ஒருத்தி வந்து, "தேவி! ஆழ்வார்க்கடியார் என்னும் வீர வைஷ்ணவர் தங்களைப் பார்க்க வந்திருக்கிறார். ஏதோ அவசர காரியமாம்!" என்றாள்.

"இதோ வந்துவிட்டேன்!" என்று சொல்லிவிட்டுக் குந்தவை, கொடி ஊஞ்சலிலிருந்து இறங்கிச் சென்றாள்.

(தொடரும்)



அச்சா! பஹுத் அச்சா! பலே சபாஷ்! ஸ்ப்லெண்டிட்! ஒண்டர்புல்! எந்த பாஷையில் எப்படியெல்லாம் சொன்னாலும் திருப்தி ஏற்படவில்லை. அப்படிப் போட்டார் ஒரு போடு நமது வைஸராய்ப் பிரபு. இந்திய அரசியல் விஷயத்தில் சர்ச்சிலும் அமெரியுமே எல்லாக் கியாதியையும் கொண்டு போகிறார்களே, வைஸராய் லின்லித்கோ காளை மாட்டின் கடைவாய்ப் பல்லை எண்ணிக் கொண்டு உட்கார்ந்திருக்கிறாரே என்று எவ்வளவோ கவலைப்பட்டுக் கொண்டிருந்தோமல்லவா? அந்தக் கவலையெல்லாம் ஒரேயடியில் திரும்படி காரியம் செய்து விட்டார்.

அது என்ன காரியம் என்று கேட்கிறீர்களா? கொஞ்சம் பொறுங்கள். அவ்வளவு மகத்தான காரியத்தைப் பற்றிச் கலபமாகச் சொல்லி விடலாமா? சொல்லுகிற முறையில் அல்லவா சொல்ல வேண்டும்?

ஒரு நாள் காலையில் கண்ணைக் கசக்கிக் கொண்டு சோம்பல் முறித்துக் கொண்டு எழுந்திருந்தார் வைஸராய் லின்லித்கோ. அசல் ஆங்கிலோ ஸாக்ஸன் சாதிக் காளை மாட்டின் முகத்தில் விழித்து விட்டுத் தமது தர்பார் மண்டபத்துக்கு வந்து சேர்ந்தார். ஆனை, அம்பேத்கார் முதலான மதி மந்திரிகளைப் பார்த்து, "மந்திரிகாள்! நமது இந்திய சாம்ராஜ்யம் சரிவர நடந்து வருகிறதா?" என்று கேட்டார்.

"ஆகா! எல்லாம் சரியாய் நடந்து வருகிறது. கடவுள் வானத்தில் இருக்கிறார். காந்தி சிறையில் இருக்கிறார். ஜின்னா உச்சாணிக் கிளையில் இருக்கிறார். ஜப்பானியர் பர்மாவில் இருக்கிறார்கள். நாங்கள் எங்கள் ஆசனங்களில் கம்பீரமாயமர்ந்திருக்கிறோம்" என்று பதில் வந்தது.

"ரொம்ப சந்தோஷம். எல்லாரும் அப்படியப்படியே இருப்பார்களாக!" என்று வைஸராய் சொல்லிக் கொண்டிருக்கும் போதே, உச்சிக் குடுமியும் பச்சைக் கண்ணாடியும் கதர் ஜிப்பா அங்க வஸ்திரமுமாக ஒருவர் உள்ளே வந்தார்.

"இவர் யார் இந்த மனுஷர்? இருக்க வேண்டிய இடத்தில் இல்லாமல் வந்தவர் மாதிரி தோன்றுகிறதே?" என்று வைஸ்ராய் ஏற இறங்கப் பார்த்து விட்டு, "யாரையா நீர்?" என்று கேட்டார்.

அமரர் கல்கி

"நான்தான் ஸி. ராஜகோபாலாச்சாரி."

"ஓஹோ! சமரசம் என்றும், தேசிய சர்க்கார் என்றும் ஓயாமல் பேசிக் கொண்டிருப்பவர் நீர்தானே?"

"நான்தான்."

"அப்படியானால் இங்கு எதற்காக வந்தீர்?"

"அதைப் பற்றிப் பேசுவதற்குத்தான் வந்தேன். எனக்கென்னமோ ஒரு நம்பிக்கை. எப்படியாவது காங்கிரஸ் - லீக் சமரசம் ஏற்படுத்தி விடலாம், இந்தியாவில் தேசிய சர்க்கார் அமைத்து விடலாம் என்று."

"இப்போது இருக்கிற சர்க்காருக்கு என்னவாம்?"

"இது பொது ஜனங்களின் அபிமானத்தையும் நம்பிக்கையையும் பெற்ற சர்க்கார் அல்ல. இந்தியாவுக்கு யுத்தம் வந்தால் இந்த சர்க்காரினால் திறமையாக யுத்தம் நடத்த முடியாது."

"சரி, அப்புறம்?"

"காங்கிரஸுக்கும் லீக்குக்கும் சமரசம் ஏற்படாததுதான் தேசிய சர்க்கார் ஏற்படுவதற்கு முக்கியத் தடையாயிருக்கிறது."

"யார் சொன்னார்கள்?"

"நீங்களும் சொல்லியிருக்கிறீர்கள். எனக்கும் தெரியும்."

"சரி. பிறகு?"

"ஜின்னாவைப் பார்த்துப் பேசினேன். சமரசம் ஏற்படும் என்ற நம்பிக்கை எனக்குப் பலமாகியிருக்கிறது. ஆகையால், சிறையில் மகாத்மா காந்தியைப் பார்த்துப் பேச அனுமதி வேண்டும்."

"யார்? மகாத்மா காந்தியைப் பார்த்தா பேச வேண்டும்? மகாத்மா மன்னிப்புக் கேட்டுக் கொண்டு விட்டாரா?"

"எதற்கு மன்னிப்பு? அவரை நீங்கள் ஜெயிலில் போட்டதற்காகவா?"

"உம்முடைய சமரசத் திட்டத்தை ஒப்புக் கொள்வதாகக் கையெழுத்துப் போட்டுக் கொடுத்து விட்டாரா?"

"அந்த சம்மதம் பெறுவதற்காகத் தான் அவரைப் பார்ப்பதற்கு அனுமதி கேட்கிறேன்."

"அதெல்லாம் முடியாது. அவர் முதலில் வருத்தப்பட்டு மன்னிப்புக் கேட்கவேணும். உம்முடைய சமரசத் திட்டத்தை ஒப்புக் கொள்வதாகச் சொல்ல வேணும்."

"நடக்காத காரியம்."

"அவரை நீங்கள் பார்ப்பதும் நடக்காத காரியம். போய் வரலாம்."

இவ்விதமாக லின்லித்கோ பிரபு ராஜாஜிக்கு மகாத்மாவைப் பார்ப்பதற்கு அனுமதி மறுத்துப் பெயரும் புகழும் அடைந்த கட்டமானது முடிவுற்றது. ஆனால், விஷயம் என்னமோ முடிவடையவில்லையென்று ராஜாஜி சொல்கிறார். தமக்கு அனுமதி கொடுத்தேயாக வேண்டுமென்றும் கொடுக்கப்படுமென்ற நம்பிக்கையும் தமக்கு இருப்பதாகவும் தெரிவித்திருக்கிறார். அவருக்குள்ள நம்பிக்கை நமக்கும் ஓரளவு இருக்கிறதென்பதை ஒத்துக் கொள்கிறோம். ஏனெனில், இப்போது பிரிட்டிஷ் கட்சிக்குக் கொஞ்சம் நல்ல காலம் பிறந்திருப்பதாகத் தோன்றுகிறது. ஜய காலம் ஆரம்பித்து விட்டதாய்க் காணப்படுகிறது. இந்த யுத்தம் ஆரம்பமானதிலிருந்து அடையாத ஜயத்தை வட ஆப்பிரிக்காவில் பிரிட்டிஷ் படைகள் அடைந்து வருகின்றன. நல்ல காலம் பிறக்கும்போது புத்தியும் தெளிவடையும் என்பதை உலக அனுபவத்தில் கண்டிருக்கிறோம். இந்தியா விஷயத்திலும் அவ்வாறு பிரிட்டிஷாருக்கு நல்ல புத்தி உதயமாகலாமல்லவா?

இந்தியா விஷயத்தில் பிரிட்டிஷாருக்கு நல்ல புத்தி உதயமாகி விட்டதென்றால், அதற்கு அறிகுறியான முதல் காரியம் என்ன தெரியுமா? லின்லித்கோ பிரபுவைப் பார்த்துப் "போதும் ஐயா நீர் பட்ட சிரமம். வீட்டுக்குப் போய் நிம்மதியாய்த் தூங்கும்" என்று சொல்லிவிட்டு, கொஞ்

போட்டார் ஒரு போடு!

சம் மன விசாலமுள்ளவராய் ஒருவரை அந்தப் பதவிக்கு அனுப்ப வேண்டியது தான். லின்லித்கோ பிரபு இந்த நாட்டில் ரொம்ப நாள் இருந்து விட்டார். நிர்வாக சபை அங்கத்தினருடனும், காளை மாடுகளுடனும் அதிகமாய்ப் பழகி அவர் கறுடு தட்டிப் போய் விட்டார். தீர்க்க புத்தியை இழந்து விட்டார். அவரிடம் இனிமேலும் இந்திய இராஜப் பிரதிநிதி பதவியை விட்டிருப்பது ரொம்பவும் அபாயமாகும்.

பாருங்கள், அவர் இராஜப் பிரதிநிதி பதவியை வகிக்கும் அழகை! சிமையில் மாட்சிமை தங்கிய மன்னர் சென்ற வாரத்தில் செய்த பிரசங்கத்தின்போது இந்தியாவைப் பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார். "யுத்தம் முடிந்ததும் இந்தியாவுக்கு விடுதலையும் சுதந்தரமும் அளிப்பதாகத் தீர்மானித்து விட்டோம். இதற்கிடையில் யுத்த முயற்சியில் ஒத்துழைப்பதற்காகச் சர்க்காரில் சேரும்படி தேசத் தலைவர்களை அழைத்தோம். ஆனால் தேசத் தலைவர்களுக்குள்ளே ஒற்றுமை ஏற்படாதபடியால் அது இன்னும் சாத்தியமாகவில்லை. சீக்கிரத்தில் அத்தகைய ஒற்றுமை ஏற்படுமென்று நம்புகிறோம்" என்று வாயாரச் சொல்லியிருக்கிறார்.

அதே சமயத்தில், ஏறக்குறைய அதே தினத்தில் இராஜப் பிரதிநிதி இங்கே என்ன செய்திருக்கிறார்? அரசரின் விருப்பத்தை நிறைவேற்றக் கூடியதான முயற்சிக்கு முட்டுக்கட்டை போட்டிருக்கிறார்! தேசத் தலைவர்களுக்குள் ஒற்றுமை ஏற்படுத்தி அவர்களை யுத்த முயற்சியில் ஈடுபடச் செய்வதற்காக முன்வந்தவருக்கு மகாத்மாவைப் பார்த்துப் பேசுவதற்கே அனுமதி மறுத்திருக்கிறார். அதற்கு அழகான காரணங்களைச் சொல்லி ஒரு அறிக்கையும் வெளியாகியிருக்கிறது.

ராஜாஜி எந்தக் கட்சிக்கும் பிரதிநிதி இல்லையாம்! யாருடைய சார்பாகவும் அவர் பேசுவதற்கில்லையாம்! அப்படியானால், வைஸ்ராயும் அவருடைய நிர்வாக சபை அங்கத்தினரும் இந்த நாட்டில் யாருக்குப் பிரதிநிதிகளாம்?

காங்கிரஸ்-லீக் ஒற்றுமைக்காகவும், ஜனங்கள்-சர்க்கார் ஒற்றுமைக்காகவும் ராஜாஜி செய்து வரும் முயற்சி பிரசித்தமானவை. அவருடைய முயற்சிக்கு நாட்டில் ஏராளமான ஆதரவு இருக்கிறது என்பதும் தெரிந்த விஷயம். ஜனாப் ஜின்னாவுடன் அவர் சம்பாஷணை நடத்தி விட்டு மகாத்மா காந்தியைப் பார்க்க அனுமதி கேட்கிறார். சமரசத்துக்கு இடமிருக்கிறதென்று அவர் நம்பாவிட்டால் மேற்படி அனுமதியைக் கேட்டிருக்கவே மாட்டார்; கேட்டுத் தம்மை நகைப்புக்குள்ளாக்கிக் கொண்டிருக்க மாட்டார்.- கொஞ்சமாவது சிந்தனா சக்தியுள்ளவர்கள் இதையெல்லாம் நிச்சயமாய் உணர்ந்திருப்பார்கள்.


நியாயாநியாயங்கள் ஒருபுறமிருக்க, ராஜாஜிக்கு அனுமதி கொடுத்திருந்தால் என்ன மோசம் போய்விடும்? என்ன காரியம் கெட்டுவிடும்? அவர் ஒன்று தமது சமரச முயற்சியில் வெற்றி பெறுவார், அல்லது தோல்வியடைந்து திரும்புவார். வெற்றி பெற்றால் ரொம்ப நல்லது. ஏனெனில் அரசர் பெருமான் முதற்கொண்டு அதைத்தான் விரும்புகிறார்கள் அல்லவா? அவர் தோல்வியடைந்தால், இப்போதுள்ள நிலைமையை விட இன்னும் ஒன்றும் கெட்டுப் போகப் போவதில்லை. பிரிட்டிஷார் மீது எவ்விதப் பழியும் சொல்ல இடமில்லாமல் போகும்.

ஆனால், மகாத்மாவைப் பார்க்க ராஜாஜிக்கு அனுமதி மறுத்ததினால் என்ன ஏற்பட்டது?

"பிரிட்டிஷ் அதிகார வர்க்கத்தின் பிரித்தாளும் முறைதான் இந்தியாவில் ஹிந்து-முஸ்லிம் சண்டைக்கெல்லாம் காரணம்; ஆகையால் பிரிட்டிஷார் போனால்தான் ஹிந்து முஸ்லிம் ஒற்றுமை உண்டாகும்" என்ற கொள்கையுடையவர்கள் பலர் இந்நாட்டில் உண்டு. அந்தக் கொள்கைக்குத்தான் வைஸ்ராயின் மறுப்பு பலமளிக்கிறது. "அரசியல் கட்சிகளும் தேசத் தலைவர்களும் ஒற்றுமைப்படாததுதான் இந்தியா சுதந்தரம் பெறுவதற்குக் குறுக்கே நிற்கிறது" என்று பிரிட்டிஷ் ராஜதந்திரிகள் சொல்வதெல்

லாம் வெறும் பாசாங்கு என்று சொல்லக் காரணமாகிறது.

லிபியா பாலைவனத்தில் இப்போது ஏற்பட்டு வரும் வெற்றிகளைப் பற்றிப் படிக்கும்போது ஒரு விஷயத்தை ஞாபகப் படுத்திக் கொள்ள வேண்டும். மாண்ட் கோமரிக்கும் அலெக்ஸாண்டருக்கும் முன்னால் பல படைத் தலைவர்கள் அங்கே பதவியிலிருந்து நீக்கப்பட்டார்கள். தாட்சண்யமில்லாமல் அவர்களைப் போகச் சொன்னதினால்தான், இப்போது ஜயத்துக்கு மேல் ஜயம் ஏற்பட்டு வருகிறது. அது போலவே இந்திய அரசியல்



''அந்த டாக்டர் போலியா இல்லை ஒரிஜினலானு தெரியலை! ஒரே குழப்பமாயிருக்கு!''

''ஏன்?''

''அவர் ஆபரேஷன் பண்ணினா சக்ஸஸ் ஆகுது! ஊசி போட்டா பேஷண்ட் சாகறார்!''

– அம்பை தேவா

சிக்கல் விஷயத்திலும் வெற்றியடைய வேண்டுமானால், வைஸராய்ப் பதவியில் மாறுதல் ஏற்படுத்துவது அவசியம்.

வெற்றியினால் சில சமயம் கெடுதலும் விளைவதுண்டு. பிரான்ஸில் சுலபமாக அடைந்த வெற்றியின் காரணமாக ஹிட்லர் புத்தி மாறாட்டமடைந்து ருஷியாவில் படை எடுத்தார். அதன் பலனை இன்று அனுபவிக்கிறார்.

லிபியா வெற்றி காரணமாக அத்தகைய பிசகுகளை பிரிட்டிஷார் செய்யக் கூடாது. லிபியா வெற்றியினால் யுத்தத்திலேயே வெற்றியடைந்து விடவில்லை. ஐரோப்பாவில் ஜெர்மனியை ஜயித்தாக வேண்டும். அதை விட முக்கியமாக, சிறிதும் பலங் குன்றாமலிருக்கும் ஜப்பானை ஜயித்தாக வேண்டும். இதற்கெல்லாம் இந்திய மக்களின் பூரண உற்சாகமும், உலகத்தின் நல்ல அபிப்பிராயமும் அத்தியாவசியமாகும். இந்த இரண்டையும் பெற வேண்டுமானால், வைஸராய் லின்லித்கோ வீட்டுக்குப் போக வேண்டும்.

ராஜாஜியின் முயற்சியைப் பரிகசித்து, "பார்த்தாயா? ஒன்றும் நடக்காது என்றுதான் அப்போதே சொன்னேனே?" என்று கூறி மகிழும் மகா பிரஹஸ்பதிகள் சிலர் நம் நாட்டில் இருக்கிறார்கள். இவர்களுடைய அபிப்பிராயத்தின்படி காரியங்கள் நடந்தால், காந்திஜி முதலிய காங்கிரஸ் தலைவர்கள் சிறையிலேயே கிடப்பார்கள். பிரிட்டிஷ் யதேச்சாதிகாரம் நிலயமாக நடந்து கொண்டிருக்கும். யுத்தம் முடிந்த பிறகு இந்திய மக்களின் நெற்றியில் பட்டை நாமத்தைக் குழைத்துப் போடுவார்கள். அப்போதும் இந்த சர்வ மூட சிகாமணிகள், "பார்த்தாயா! சுயராஜ்யம் வராதென்றுதான் அப்போதே சொன்னேனே?" என்று கூறி மகிழ்வார்கள்.

இந்த தேசத்தில் அரசியல் ஒற்றுமை ஏற்பட்டு, உண்மையான ஜனப் பிரதிநிதிகளின் சர்க்கார் ஏற்படவேண்டுமானால் அதற்கு இதை விடத் தகுதியான சமயம் இனி வரப் போவதில்லை. உண்மையில், இன்னும் முன்னாலேயே நடந்திருக்க வேண்டியது. நாளாக ஆக அந்த முயற்சியில் கஷ்டங்கள்தான் அதிகமாகும். யுத்தம் ஒரு வழியாக முடிந்தால், ஜெயித்தவர்கள் வைத்ததுதான் சட்டமாயிருக்கும்.

ஆகவே தேச க்ஷேமத்திலும் நாடு சுதந்தரமடைவதிலும் உண்மையான பற்றுடையவர்கள் எல்லாம் ராஜாஜியின் முயற்சி சீக்கிரம் வெற்றியடைய வேண்டுமென்றுதான் பிரார்த்திக்க வேண்டும். ○

(கல்கி, நவம்பர் 20, 1942)




ரிஷப ராசிக்காரரான மத்திய அமைச்சர் ஆர்.கே. குமார் இப்ப யாருக்கும் ஜாமீன் கையெழுத்து போடக் கூடாதாம்.

நடக்குமென்பார், நடக்கும்!




மேஷம் : *(அஸ்வினி, பரணி, கிருத்திகை முதல் பாதம் முடிய)*

உங்களுக்கு இந்த வாரம் அனுகூலமான பலன்கள்னு பார்த்தா ரொம்பக் கொறச்சல் தாங்க. சின்னச் சின்ன குழப்பம், குடும்பத்துல சலசலப்பு, காரியங்கள்ல தாமதம்னு எல்லாமே டல்லடிக்கும். ஆனாக் கூட பணப் பிரச்னையெல்லாம் வராது. வெளிநாட்டுச் செய்தியேதும் வந்து குஷிப்படுத்தும். குடும்பத்துல சுபகாரியங்களுக்கான அறிகுறிகள் தெரியும். சிலருக்கு புரமோஷன் கூடக் கிடைக்கும். ஸ்பெகுலேஷன் மட்டும் இந்த வாரம் வேண்டவே வேண்டாம்.



ரிஷபம் : *(கிருத்திகை 2-ம் பாதம் முதல் ரோகிணி, மிருகசீரிஷம் 2-ம் பாதம் வரை)*

வாழ்க்கை வசதிங்க எல்லாம் திருப்தியா இருக்குங்க. எடுத்த காரியம் ஜெயிக்கும். புதுப் புது பொருளெல்லாம் வந்து சேரும். எதிரிங்க ஓட்டம் பிடிப்பாங்க. குடும்பத்துல விருந்து - கேளிக்கைன்னு ஜமாய்ப்பீங்க. பணம் தாராளமாப் புரண்டாலும் செலவும் எக்கச்சக்கமா வந்து சேரும். ஸ்பெகுலேஷன், ஷேர் மாதிரி விஷயமெல்லாம் வேணாம். யாருக்காவது ஜாமீன் கையெழுத்து மாதிரி ஏதாவது போட வேண்டியிருந்தா ரொம்ப ரொம்ப யோசிச்சுப் போடுங்க. சிலருக்கு இஷ்டமில்லாத இடத்துக்கு டிரான்ஸ்ஃபர் கிடைச்சாலும் ஆச்சரியப்படறதுக்கில்லே.



மிதுனம் : *(மிருகசீரிஷம் 3-ம் பாதம் முதல் திருவாதிரை, புனர்பூசம் 3-ம் பாதம் வரை)*

ரியல் எஸ்டேட், வீடு, மனை, நிலம் மாதிரியான விஷயங்களில் ஆதாயம்தான் இந்த வாரம். பயணத்தால நல்ல பலன் கிடைக்கும். திருமணம், கிரஹப்பிரவேசம் மாதிரியான சுப காரியங்கள் நடக்கும். மேலதிகாரியோட பாராட்டு கிடைக்கும். ஏற்றுமதி, இறக்குமதி வியாபாரங்கள்ல இருக்கறவங்களுக்கு நல்ல வளர்ச்சி தெரியும். வெளிநாட்டுலேர்ந்து நல்ல சேதி வரும். இருந்தாலும் வீண் செலவு அதிகமா இருக்கும். பணத்தட்டுப்பாடும் அலைச்சலும் வரும். ஆனாலும் கவலைப்படாதீங்க. பிரண்ட்ஸுங்களும், சொந்தக்காரங்களும் நிச்சயம் ஹெல்ப் பண்ணுவாங்க.




கடகம் : *(புனர்பூசம் 4-ம் பாதம் முதல் பூசம், ஆயில்யம் முடிய)*

உங்க முன்னேற்றத்துக்கு இடைஞ்சலா ஏதாச்சும் எதிர்ப்பு இருந்துச்சா? இந்த வாரம் காணாம போயிடும். சாதனை நிகழ்ற வாரம் இது. குடும்பமே கலகலப்பா இருக்கும். பெண்கள் நினைச்சது நினைச்சபடி நடக்கும். வெறும் தோடு வாங்கணும்னு நெனைச்சிட்டிருக்கற சிலருக்கு வைரத்தோடே வாங்கற அதிர்ஷ்டமும் வரலாம்! கேஷுவல் பண்ற வேலைல இருக்கறவங்க உஷாராயிருக்கணும். புது ஆளுங்க கிட்ட ஜாக்கிரதையைாப் பழகணும். கொடுக்கல் வாங்கல் விஷயத்திலும் உஷாரா இருக்கணும். எல்லோருமே இந்த வாரம் உடல் நலத்துல ரொம்பவும் அக்கறை காட்டணும். பயணத்தின்போதும் கவனமா இருக்கணும்.



சிம்மம் : *(மகம், பூரம், உத்திரம் முதல் பாதம் முடிய)*

ஆசைகள் நிறைவேறும்; எல்லாக் காரியங்களிலும் வெற்றியே கைகூடும் அதிர்ஷ்டமான வாரம் இது. முதலாளிகள், தொழிலாளிகள்னு வித்தியாசமில்லாம ஆதாயம் அடைவாங்க. வேலை தேடிக்கிட்டிருக்கறவங்களுக்கு நல்ல சான்ஸ் கிடைக்கும். ஸ்பெகுலேஷன், ஷேர் போன்றவற்றிலும் ஆதாயமே கிடைக்கும். கல்யாணம் மாதிரியான சுப காரியங்களுக்குப் பிள்ளையார் சுழி போடப்படும். ஒரு முக்கியஸ்தரோட சந்திப்பு உங்களுக்கு உதவியா இருக்கும். பொதுவா இதுவொரு நல்ல வாரம்தான்னாலும் வியாபாரிங்க அகலக்கால் வைக்காம இருக்கறதுதான் நல்லது.




கன்னி : *(உத்திரம் 2-ம் பாதம் முதல் அஸ்தம், சித்திரை 2-ம் பாதம் வரை)*

இந்த வாரம் உங்களுக்கு சாதாரணப் பலன்கள்தாங்க. சிறு சிறு தொல்லைங்க, தடைங்க, தாமதங்களையெல்லாம் தவிர்க்க முடியாது. யாராலும் அதிக அனுகூலம்

கிடைக்காது. கொடுக்கல் வாங்கல், ஜாமீன் கையெழுத்திலெல்லாம் உஷாரா இல்லாட்டி சிக்கலாயிடும். ஸ்பெகுலேஷன், ஷேர், வீடு, மனை விஷயங்களுக்கெல்லாம் இந்த வாரம் குட்பை சொல்லிடறதுதான் நல்லது. பயணத்துல எச்சரிக்கையா இருங்க. இரவுப் பயணத்தைத் தவிர்த்திடுங்க. பொறுமையாவும் நிதானமாவும் செயல்பட்டீங்கன்னா எல்லாத்தையும் சுலபமாச் சமாளிச்சிடலாம். வொரி பண்ணிக்காதீங்க.

துலாம் : *(சித்திரை 3-ம் பாதம் முதல் சுவாதி, விசாகம் 3-ம் பாதம் வரை)*




இந்த வாரத்தைப் பொறுத்தவரைக்கும் பண விஷயத்துல உங்களுக்குப் பிரச்னையே இருக்காது. ஸ்பெகுலேஷன், ஷேர் இப்படி எதுவானாலும் உங்களுக்கு ஆதாயந்தான். சிலருக்குத் திடீர் லாபம் கூட வந்து அசத்தும். சுத்தியிருக்கறவங்களும் உங்களுக்குப் பக்கபலமா இருப்பாங்க. அப்புறமென்ன, குடும்பத்தில சந்தோஷத்துக்கு என்ன குறைச்சல்! வெளிநாடு போறதுக்கும் கல்யாணத்துக்கும் யாராவது எதிர்பார்த்துக் காத்திருந்தா இப்ப அது கைகூடி வரும். குடும்பத்துல சுப நிகழ்ச்சிகள், விருந்தினர் வருகைன்னு எல்லோருமே சந்தோஷமா இருப்பீங்க. ஆனாலும் மின்சாரம், நெருப்பு தொடர்பான வேலைகள்ல இருக்கறவங்க, ஜாக்கிரதையா இருக்கணும்.

விருச்சிகம் : *(விசாகம் 4 – ம் பாதம் முதல் அனுஷம், கேட்டை முடிய)*




உங்க ஆற்றல் வெளிப்படற வாரம் இதுங்க. எதிரிங்க இருந்தா ஜகா வாங்கிடுவாங்க. தொழில்ல வளர்ச்சி ஏற்படும். மனைவியால கணவனுக்கு ஆதாயம்னு சொன்னா ஆச்சரியப்படுவீங்க. பண விஷயம் சீரா இருக்கும்னாலும் அநாவசியச் செலவுங்க வேண்டாம். கூடப் பிறந்தவங்களால செலவு வர சான்ஸ் இருக்கு. வீண் செலவும் வரலாம். யாரோடு பழகினாலும் பேசினாலும் பக்குவமா நடந்துக்குங்க. இல்லேன்னா வீண் விவகாரங்கள் வந்து சேர்ந்துடும். தூரப் பயணத்தையும் இரவுப் பயணத்தையும் இந்த வாரம் தவிர்த்திடுங்களேன்.

தனுசு : *(மூலம், பூராடம், உத்திராடம் முதல் பாதம் வரை)*




உங்க பராக்கிரமமும் வெளிப்படும் வாரம் இது. உங்க நிர்வாகத் திறமையைப் பார்த்துப் பலரும் பாராட்டுவாங்க. இதுவரை ஏதாச்சும் பெண்டிங் விஷயங்கள் இருந்தாக்கூட இந்த வாரம் முடிஞ்சிடும். டூவீலரோ ஃபோர் வீலரோ ஏதாவதொரு வாகனம் வாங்கற சான்ஸும் இருக்கு. இல்லேன்னா மியூசிக் சிஸ்டம் மாதிரியான பொருளாவது வாங்குவீங்க. எதிலும் அவசரப்படாதீங்க. உடம்பையும் கவனமாப் பார்த்துக்குங்க.

மகரம் : *(உத்திராடம் 2-ம் பாதம் முதல், திருவோணம், அவிட்டம் 2-ம் பாதம் வரை)*




கல்யாணம், கிரஹப்பிரவேசம், வளைகாப்பு மாதிரியான சுப நிகழ்ச்சிக்கு இந்த வாரம் சான்ஸ் இருக்கு. உங்க புத்திசாலித்தனம் மத்தவங்களால பாராட்டுப் பெறுகிற வாரம் இது. பண விஷயத்திலும் பிரச்னை இருக்காது. இருந்தாலும் சின்னச் சின்னப் பிரச்னைகள் வரத்தான் செய்யும். நண்பர்கள் மத்தியில தர்மசங்கடமான நிலையும் உருவாகும். ஃபுட்போர்டு பிரயாணம், ஓடற பஸ்ஸிலேயோ ரயில்லயோ ஓடிப் போய் ஏறுகிற ஹீரோத்தனமெல்லாம் இந்த வாரம் வேண்டாங்க.

கும்பம் : *(அவிட்டம் 3-ம் பாதம் முதல், சதயம், பூரட்டாதி 3-ம் பாதம் வரை)*



நீங்க எப்படி நினைக்கறீங்களோ அப்படியே காரியங்கள் நடக்கற வாரங்க. பேச்சில் நிதானமும் இனிமையும் காட்டினா குடும்பத்துல சுப காரியங்களும் நடக்கும். வீடு, மனையால ஆதாயம் கிடைக்கும். சிலருக்குத் தடைகள், குறுக்கீடுகள் வரும்னாலும் அதையெல்லாம் சமாளிச்சு ஜெயிச்சுக் காட்டுவீங்க. நிர்வாகத் துறைல இருக்கறவங்க, பெரியவங்களோட அட்வைஸ் கேட்டு நடக்கறது நல்லது. சட்டம், காவல், தகவல் துறைகள்ல இருக்கறவங்களோட மாமூல் வாழ்க்கை பாதிக்காது. புது ஆளுங்க கிட்ட பழகும் போது உஷாரா இருங்க.

மீனம் : *(பூரட்டாதி 4-ம் பாதம் முதல், உத்திரட்டாதி, ரேவதி முடிய)*



மனகல துணிச்சலும் நம்பிக்கையும் கூடுதலா இருக்கற வாரம் இது. வழக்கு விவகாரம் ஏதும் இருந்தா ஜெயிச்சுடுவீங்க. கூடப் பிறந்தவங்க உதவுவாங்க. தொழிலாளர்களுக்குத் தொல்லைகள் சில வரும்னாலும் சமாளிக்கக் கூடிய அளவுலதான் இருக்கும். பண விஷயம் பலமாவே இருந்தாலும் செலவும் ஜாஸ் தியாத்தான் இருக்கும். பயணத்துால பலன் உள்ளதுன்னாலும் எச்சரிக்கையா பயணம் செய்யுங்க. எதிலும் அகலக்கால் வைக்காதீங்க. பேச்சுல நிதானம் காட்டுங்க. புது முயற்சி எதுவானாலும் கொஞ்சம் தள்ளிப் போடுங்க.

21

காதல் டைரிக் குறிப்பு :

என்னிடம் இருந்த எத்தனையோ கெட்ட விஷயங்கள் விலகி விட்டன – காதலிக்கத் துவங்கியதும். எனவே காதல் என்பது ஒரு மன சுத்திகரிப்பு நிலையம்!

நான் உன்னை சுவாசிக்கிறேன்

பட்டுக்கோட்டை பிரபாகர்

மாலை சந்திப்பதாக பிருந்தாவிடம் போனில் சொல்லிவிட்டு வைத்ததுமே மனக் குரங்கு தன் வேலையைத் துவக்கியது.

என்னோடு பழகிப் பார்த்த பிறகு என்னை நேசிப்பதா வேண்டாமா என்பதைத் தீர்மானிப்பதாகச் சொல்லி என் தன்மானத்தைத் தலைகுனியச் செய்தவளைச் சந்திக்க நான் ஏன் துடிக்க வேண்டும்?

நான் என்ன வித்தை காட்டும் குரங்கா? குட்டிக்கரணம் போடு என்றால் போடும். தலையில் தட்டை வைத்துக் கொண்டு இரண்டு கால்களில் நடந்து வா என்றால் நடந்து வரும்.

அந்த மாதிரி அவள் போன் செய்யுங்கள் என்றதும் நான் ஏன் சிலிர்த்துப் போய் செய்தேன்? எதற்காக சிரித்துப் பேசினேன்? எதற்காக ட்ரீட் கேட்டேன்? எதற்காக மாலையில் சந்திப்பதாகச் சொன்னேன்?

உன் பரிசோதனைக்கு நான் தயார் என்கிற அறிவிப்பு அல்லவா இது! நீ என்ன நிபந்தனை போட்டிருந்தாலும் நான் உன்னை நேசிப்பதில் எந்த மாற்றமும் இல்லை என்று அசடுவழியும் செயல்தானே இது!

ஆனால்... ஆனால்...

பிருந்தா என்னைத் தேடி இங்கே வந்தாள் என்கிற செய்தியே எனக்குள் சாமரம் வீசியதே, அது நிஜமான உணர்வு! அவள் கடிதத்தை ரசித்துப் படித்தேனே, அது நிஜமான சந்தோஷம்! ஓய்வு நேரத்தில் போன் செய்யுங்கள் என்று அவள் குறிப்பிட்டிருந்தாலும் உடனடியாகச் செய்ததற்குக் காரணம் அவளோடு பேச ஏற்பட்ட நிஜமான உந்துதல்! அவள் குரல் கேட்டதும் நரம்பெல்லாம் பரவிய சுகம் நிஜமான உணர்ச்சி! எந்தத் திட்டமிடலும் ஒத்திகையும் இல்லாமல் ஆசையாக பாசாங்கின்றிப் பேசினேனே, அது என் நிஜமான உள்ளத்தின் வெளிப்பாடு.

இதெல்லாம்தானே காதல்?

காதல் ஒரு உண்மையான உணர்ச்சி. அதற்கு நெளிவு, சுளிவு தெரியாது. பொய், புரட்டு புரியாது. மழை நீர் போல சுத்தமானது. அந்த நீர் மண்ணோடு சேரும் போதுதான் சகதியாகிறது.

கொஞ்சம் ஆசுவாசப்படுத்திக் கொண்டு புத்தி உள்ளே நுழைகிறது. கணக்குகள் போடுகிறது. தன்மானத்தையும், அகங்காரத்தையும் தட்டி எழுப்புகிறது. அதற்குச் சாதகமான சங்கதிகளை மறு ஒலி பரப்பு செய்கிறது மனதில். காயங்களைச் சுட்டிக்காட்டுகிறது.

அதனால் மனம் தவிக்கிறது. தடுமாறுகிறது.

அரவிந்த் ஒரு சிகரெட்டைப் பற்றவைத்தான்.


இப்போது நான் என்ன செய்வது?

அவளைச் சந்திக்கச் சொல்கிறது ஒரு மனசு. சந்தேகிக்கச் சொல்கிறது ஒரு மனசு. இரண்டையும் வேடிக்கைப் பார்த்துச் சிரிக்கிறது ஒரு மனசு.

சலூனில் எதிரெதிர் கண்ணாடிகள் உள்ளே உள்ளே என்று ஏராள பிம்பங்களைக் காட்டுவதைப் போல இந்த மனசுக்குள்ளே எத்தனை பிம்பங்கள்!

எந்தச் சூழ்நிலையில் எந்த மனசு சக்தி வாய்ந்ததாக இருக்கிறதோ, அது ஜெயிக்கிறது.

அரவிந்த் ஒரு பெருமூச்சை



வெளியேற்றினான். பிருந்தாவை எல்லாக் கேள்விகளையும் தாண்டி சந்திக்க வேண்டும், பேச வேண்டும் என்கிற துடிப்பை மட்டும் கட்டுப்படுத்த முடியாதென்பதை உணர்ந்தான்.

உதடுகளில் புன்னகை பூத்தது.

டிராஃபிக் ஜாம் காரணமாக காத்திருந்தபோது மணி பார்த்து மனம் பதறியது அரவிந்திற்கு. பிருந்தா காத்திருப்பாளே என்று பதைத்தது.

வாகனங்கள் விடாமல் ஹாரன் அடித்து துடித்தன. சிலர் என்ஜினை அணைத்து விட்டுக் காத்திருந்தனர்.

இவனைக் கடந்து சென்ற நபரிடம், "என்ன சார் ப்ராப்ளம்?" என்றான்.

"ஆக்ஸிடெண்ட் சார். வேனும் ஆட்டோவும் மோதிடுச்சி. நல்லவேளை, உசுருக்கு ஆபத்தில்லை. கிளியர் பண்ணிட்டிருக்காங்க. கொஞ்ச நேரம் ஆவும் சார்."

எரிச்சலுடன் தன் பைக்கை அணைத்தான் அரவிந்த்.

பிளாட்பாரத்தில் பூக்காரியைப் பார்த்தான். பிருந்தாவுக்கு பூ வாங்கிச் செல்லலாமா? இல்லை, வேண்டாம். ஐஸ் வைப்பதாக, அவளை இம்ப்ரஸ் செய்வதற்காகக் கொடுப்பதாக அவள் நினைக்கலாம்.

மனம் நினைத்துக் கொண்டிருக்கும் போதே கால்கள் பைக்கிலிருந்து இறங்கி பூக்காரியை நோக்கி நடந்தன.

ஒரே ஒரு ரோஜாப் பூ வாங்கினான். தனது கூலிங்கிளாசின் கூடிற்குள் வைத்துக் கொண்டு திரும்பி வந்தான்.

தடை நீங்கியதும் ஸ்டார்ட் செய்து புறப்பட்டான்.

புத்தகக் கடையின் வாசலில் காத்திருந்த பிருந்தா புன்னகையுடன் கையசைத்தாள்.

பதிலுக்குக் கையசைத்து அவளருகில் நிறுத்தினான். அமர்ந்து கொண்டதும் புறப்பட்டான்.

லைட் வைலட் நிற சேலையில், கூந்தலில் மல்லிகைச் சரத்துடன் இருந்த பிருந்தாவைப் பார்த்ததுமே மனம் குதூகலித்தது.

"ஸாரி பிருந்தா. வழியில டிராஃபிக் ஜாம். அதான் லேட்."

"பரவால்லை."

"எங்க பேரிலாம்?"

"உங்கள் சாய்ஸ்"

"இந்த வேலை உங்களுக்குப் பிடிச்சிருக்கா?"

"பிடிச்சிருக்கு. பிடிக்கலை."

"இதென்ன ரெண்டும் சொல்றீங்க?"

"என்னோட உண்மையான மனநிலை அதுதான் அரவிந்த். இந்த வேலை டீசண்ட்டானது. டீசண்ட்டான ஜனங்க மட்டுமே இங்க வர்றாங்க. சின்ன வயசிலேர்ந்தே ஐ லவ் புக்ஸ். இப்போ என்னைச் சுத்தி புத்தக சமுத்திரம். படிக்க வேணாம், சும்மா பார்த்தாலே போதும். யப்பா, இத்தனை பேர் சிந்திக்கிறாங்களான்னு ஒரு பிரமிப்பு வரும். உள்ளே ஒட்டிக்கிட்டிருக்கிற அகங்காரம் கரைய ஆரம்பிக்கும். இதனால இந்த வேலை பிடிச்சிருக்குன்னு சொன்னேன்."

"அப்புறம்?"

"இந்த வேலைல உழைப்பு இல்லை. திறமைக்கான சவால் இல்லை. ஒரே மாதிரியான வேலை. ஒரு பிரச்னைக்கு நானே தீர்வு காணற சந்தோஷம் இந்த வேலைல இல்லை. முதல்ல இருந்த வேலைல பத்துப் பேருக்கு நான் தலைவி. இங்கே அந்த பத்துப் பேர்ல நான் ஒருத்தி. இதனால இந்த வேலை பிடிக்கலை."

"ஆனா வேலையை நீங்க விட்டுடலை. அதனால பிடிக்காததை விட பிடிச்சது அதிகம். கரெக்ட்டா?"

"அப்படியும் சொல்லலாம். கட்டாயம்னும் சொல்லலாம்."

"என்ன கட்டாயம்?"

"ஊர்ல இருக்கற அம்மாவுக்கு பணம் அனுப்பணும் அரவிந்த். தங்கியிருக்கிற வீட்டுக்கு வாடகை கொடுக்கணும். அப்புறம் சாப்பாடு, சோப்பு சீப்புன்னு அடிப்படையான செலவுகள் இருக்கே. அதனால வருமானம் ஒரு கட்டாயம் இல்லையா?"

"ஆனா மனசுக்குப் பிடிக்கலைன்றீங்களே..."

"மனசுக்குப் பிடிச்ச வேற வேலை அமையற வரைக்கும் இந்த வேலையில தொடரலாம்னு இருக்கேன் அரவிந்த்" என்றாள் பிருந்தா.


அந்த ஹோட்டலின் மொட்டை மாடித் தோட்டத்திற்கு வந்தார்கள். காற்று அவர்களின் கூந்தலைக் கலைத்தது. பிரம்பாலான மேஜைகள், நாற்காலிகள் நிறைய இடம் விட்டு அமைக்கப்பட்டிருந்தன.

ஒரு மேஜை தேர்வு செய்து எதிரெதிராக அமர்ந்து கொண்டார்கள்.

மெனு கார்ட் வர...

"எந்த ஹோட்டல்னு நான் செலக்ட் செஞ்சேன். என்ன சாப்பிடறதுன்னு நீங்க செலக்ட் பண்ணுங்க" என்று கைகளைக் கட்டிக் கொண்டு மெனு கார்டில் அவள் விழிகளையே பார்த்தான் அரவிந்த்.

சர்வரை விலக்கிவிட்டு நிமிர்ந்த அவள், "பிரஸ் ஓபனிங்குக்கு உண்டான எல்லா வேலைகளும் முடிஞ்சிடுச்சா அரவிந்த்?" என்றாள்.



"ம்."

"உங்கப்பாவைப் போய்ப் பார்த்தீங்களா?"

"போனேன். பேசினேன். அவர் கோபம் மாறாம இருக்கார். அம்மாகிட்டே சொல்லிட்டு வந்திருக்கேன். அவரைச் சமாதானப்படுத்தி கூட்டிக்கிட்டு வரலாம். வராமயும் போகலாம். அதே மாதிரி என் அக்காவை நேர்ல போய்க் கூப்புட்டேன். அண்ணனை போன்ல கூப்புட்டேன். எங்கப்பா அவங்களுக்கு போன் செஞ்சி இதுல கலந்துக்கக் கூடாதுன்னு சொல்லிட்டாராம். அதனால அவங்களும் வர மாட்டாங்க."

"வருத்தமா இருக்கா?"

"கொஞ்சம். என் வாழ்க்கையில சொந்தமா ஆரம்பிக்கிற ஒரு பெரிய தொழில்! ஃபைனான்ஷியல் சப்போர்ட்தான் இல்லைன்னா மாரல் சப்போர்ட்டும் இல்லைன்னு ஆயிடுச்சி. அதனால என்ன? ரெண்டே வருஷத்தில நான் ஓகோன்னு முன்னேறிக் காட்டறேன். அப்ப எல்லா

ருக்கும் நான் முக்கியமாப் படுவேன்."

"எல்லாருக்கும்ன்னா?"

"உங்களையும் சேர்த்துத்தான் சொல்றேன்."

"ஏய்! இதென்ன இப்படிப் பேசறீங்க? நீங்க முன்னேறினாத்தான் உங்களை நான் முக்கியமா நினைப்பேனா?"

"அதான் உலக உண்மை. பணத்துக்கு உள்ள மரியாதை குணத்துக்கு இல்லை."

"நோ. என்னை அப்படிப் பொதுவான கும்பல்ல சேர்க்காதீங்க. எனக்குப் பணம் என்னைக்குமே முக்கியமில்லை. வாழுற வாழ்க்கைக்கு ஒரு அர்த்தம் இருக்கணும்னு நினைக்கிறவ நான். மனுஷங்களைத்தான் நான் மதிப்பேனே ஒழிய மணிபர்ஸை இல்லை!"

அரவிந்த தண்ணீர் எடுத்துக் குடித்தான்.

"ஆனா ஒரு சின்சியரான மனசை மதிக்க மாட்டீங்க. பிருந்தா, என் மனசில இருக்கற போராட்டத்தை வெளிப்படையாச் சொல்றேன். எந்த நிபந்தனையும் இல்லாம, எந்த கணக்குகளும் இல்லாம, நீங்க என் வாழ்க்கைக்கு ஒத்து வருவீங்களான்னு யோசனை செய்யாம எனக்கு உங்க மேல காதல் ஏற்பட்டது. இட் ஜஸ்ட் ஹேப்பன்ட். ரொம்ப தயங்கி, பல சந்திப்புகளுக்கு அப்புறம் அதை நான் வெளிப்படுத்தினேன். எனக்கு ஒரு உறுதியான பதில் கிடைச்சிருந்தா எனக்குள்ளே குழப்பம் இருக்காது. 'ஸாரி, நான் உங்களை நேசிக்கலை'ன்னு சொல்லியிருந்தா அது ஏமாற்றம்தான். ஆனா ஒரு தெளிவு இருக்கு அதில. 'யெஸ், நானும் உங்களை நேசிக்கிறேன்'னு சொல்லியிருந்தா அதிலயும் குழப்பமே இல்லை. 'பிடிச்சிருக்கு. ஆனா இப்ப காதலிக்கலை, பழகறேன். அப்புறம் காதல் வரலாம். இல்லை வராமயும் போகலாம்'னு நீங்க சொன்ன பதில் என்னை வாட்டி எடுக்குது பிருந்தா."

> **"செலவு செய்ய வேண்டியதுதான். அதுக்காக கூட்டணி கட்சி தலைவர்களை 'சமாளிக்க' ஆன செலவுன்னு கணக்கு எழுதறது நல்லாயில்லை."**
> **சென்னிமலை சி.பி. செந்தில்குமார்**

பிருந்தா அமைதியாக தலைகுனிந்திருந்தாள்.

"இப்ப எனக்குள்ளே உள்ள போராட்டத்தை உங்களால புரிஞ்சுக்க முடியாது பிருந்தா. உங்களை நினைச்சாலே எனக்கு சுகமா இருக்கு. இது காதல். நீங்க சொன்னதை நினைச்சா எரிச்சல் இருக்கு. இது தன்மானம். ரெண்டும் ஒரே மனசுல இருக்கே. இனிமே உங்ககிட்ட எப்படிப் பேசறதுன்னு எனக்குப் புரியலை. என் மேலே நல்ல அபிப்ராயம் ஏற்படற மாதிரி யோசிச்சி யோசிச்சி ஜாக்கிரதையா நாடகமாடணுமா நான்? ஒண்ணுமில்லை. வழில உங்களுக்காக ஒரு ரோஜாப் பூ வாங்கினேன். அதைக் கொடுத்தா உங்க மனசில என்ன நினைப்பீங்கன்னு குழப்பத்தில கொடுக்காம இருக்கேன். கடை வாசல்ல வயலட் கலர் சேலைல தலை நிறைய பூவோட நீங்க நின்னுட்டிருந்ததைப் பார்த்ததும் மனசுல ஜில்லுன்னு ஒரு ஃபீலிங். 'பிருந்தா, யு லுக் வெரி பியூட்டிஃபுல்'ன்னு என் உண்மையான உணர்வை உடனே சொல்லணும்னு ஒரு ஆசை. ஆனா மனசுல கணக்குகள் வந்து தடுக்குது. இந்த அவஸ்தையை என்னால தாங்க முடியலை பிருந்தா."

"நான் ஏன் அப்படிச் சொன்னேன்னு..."

"தெரியும். எனக்கு நல்லாத் தெரியும்."

"என்ன தெரியும்?"

"உங்களுக்குப் பயம்!"

"என்ன பயம்?"

"வாழ்க்கை பத்தின பயம். நானோ வீட்டை உதறிட்டு வந்தவன். பத்து லட்சம் கடன் வாங்கி தொழில் ஆரம்பிக்கிறவன். இன்னிக்குச் சூழ்நிலைல நம்பிக்கையைத் தவிர வேற சொத்தில்லை. இவரைக் கல்யாணம் செய்துகிட்டா நம்மை ஒழுங்கா காப்பாத்த முடியுமாங்கற பயம்! இதான் உங்க பிரச்னை!"

கண்கள் கலங்க அவனைப் பார்த்தாள்.

"என்னை எவ்வளவு கேவலமா எடை போட்டு வெச்சிருக்கீங்க அரவிந்த். நான் ஏன் அப்படிச் சொன்னேன்னு நான் இப்போ எந்த விளக்கம் சொன்னாலும் நீங்க ஒத்துக்கப் போறதில்லை. ஆனா... என்னை ரொம்ப மட்டமா நினைச்சிட்டீங்களா... கூகதுங்க அரவிந்த். நான்... ஐ'ம் ஸாரி... நான் வர்றேன்."

பிருந்தா சட்டென்று எழுந்து வேகமாக நடந்தாள்.

(தொடரும்)

வட்டமேஜை

'இரு பக்கமும் இடி வாங்கும் பிரதமர்' சரியான வழி முறைகளையும், உதாரணத்தோடு எடுத்துக் கூறிய தலையங்கம் சரியான நேரத்தில் எழுதப்பட்ட ஒன்று. கல்கியின் கருத்துக்கள் வாஜ்பேயின் காதுகளுக்கு எட்டினால் நிச்சயமாகச் சிந்திப்பார்.
தக்கோலம், அ. முஸ்தபா.

29.3.98 இதழில் (வாஜ்பேயி அட்டைப்படம்!) நீங்கள் கேட்டவை-தராக பகுதியில் எனது கேள்விக்குப் பரிசு கிடைத்தது. அது அணு ஆயுதம் (இந்தியா) தயாரிப்பு பற்றிய கேள்வி. அதில் யதார்த்தமாக "புத்தம் சரணம் கச்சாமி" என்ற ஒருவரி வந்திருக்கும். என்ன ஆச்சரியம்! இந்தியா ஒரு புத்த பூர்ணிமாவில் மூன்று அணுகுண்டுகளை வெற்றிகரமாக வெடித்துச் சோதித்துள்ளது!
சிதம்பரம், ராஜசிம்மன்.

சவால் விடும் கள்ளச்சாராயம், எப்படி இயங்குகின்றன கோலை செக்போஸ்ட்கள், போலி டாக்டர்களைப் பற்றிய கட்டுரை- இவை 'கல்கி' சமுதாயப் பார்வையிலும் தன் கண்ணோட்டத்தை மேலும் கூர்மையாக்கி வருவதைக் காட்டுகிறது- தொடரட்டும்!
தலைஞாயிறு, எஸ். ராஜகணேஷ்.

"அகர்கரை மனம்திறந்து பாராட்டிய ஸ்ரீநாத் வித்தியாசமான மனிதர்தான். அவரின் பேட்டி அவரின் பந்து வீச்சைப் போலவே படு சுறுசுறுப்பு. அசத்தி விட்டார் எங்களை!
கல்லுக்குழி, ஜெ. சந்திரசேகரன்.

'வித்தியாசமான ஆட்டோகிராப்' செய்தியும் படமும் மீண்டும் ஒருமுறை டயானாவின் இழப்பை நினைத்து மனம் கசிய வைத்தது.
கோவை-11, ஏ.எஸ். இராமசாமி.

யாருக்கும் எங்கள் கட்சி பல்லக்குத் தூக்காது என்றார் மூப்பனார்! இப்போது பல்லக்கு தூக்க வைத்து விட்டீரே! கார்ட்டூன் ஜோர்!
சென்னை - 4, வே. முருகேசன்.

லோக்கல் சினி ஸ்டாரை பெரிசாப் போட்டு, அணுகுண்டு சோதனை மூலம் உலக அளவில் பேசப்படும் பிரதமரை ஸ்டாம்ப் சைஸில் வெளியிட்ட உம்மைக் கோடை வெயிலில் நான் முழுக்க நிற்க வைக்கணுமய்யா!
தூத்துக்குடி - 1, எஸ். ராமசுப்பிரமணியன்.

நம்முடைய தகுதிக்கேற்ற மருமகளைத் தேர்ந்தெடுக்க ஒரு புடைவையின் மூலம் உணர்த்தியது, கிருஷ்ணாவின் "ஆயிரம் ரூபாய்ப் புடைவை". பாராட்டுகள்.
கோயமுத்தூர் - 10, பாக்யலட்சுமி சுகவனம்.

"ஆட்டத்திற்குப் பிறகுதான் அறுவை சிகிச்சை"- படித்ததும் கண்ணீர் விட்டேன். நானும் ஒரு இதய நோயாளிதான். ராமகாந்தும் என்னைப் போலவே 'சச்சினின்' கிரிக்கெட் மீது பைத்தியமாகவே வாழ்ந்திருக்கிறார். தமக்கு ஏற்பட உள்ள மரணத்தைப் பணயம் வைத்து சச்சினின் ஆட்டத்தைப் பார்த்து ரசித்திருக்கிறார் என்றால் அவர் உண்மையிலேயே கிரேட். அவர் ஆன்மா சாந்தியடைய வேண்டுகிறேன்.
திருச்சி -3, வி.பி. புண்ணியமூர்த்தி.

"விடுமுறை மகிழ்ச்சியை அள்ளித் தரும் வகையில், 'சுற்றுலா மலராக'

30 ரூபாய் வீணில்லை!

மலர்ந்த 'கல்கி விடுமுறை மலர் 98' அற்புதம். அவசியம் பாதுகாக்கப்பட வேண்டிய ஒன்று. முப்பது ரூபாய்ச் செலவு வீண் போகவில்லை. மலர் சிறப்புடன் அமைந்திடப் பாடுபட்ட அத்தனை கலைஞர்களுக்கும் வாசகர்களான எங்களின் உள்ளப் பாராட்டுக்கள்!
மடிப்பாக்கம், யமுனா ரெங்கநாதன்.

கல்கி விடுமுறை மலர் படித்தேன். மொத்தமாக ஐந்து பிரதிகளை வாங்கி வெளிநாட்டில் உள்ள எனது நண்பர்களுக்கு அனுப்பி வைத்தேன். அற்புதமான கட்டுரைகள், அருமையான கதைகள். மொத்தத்தில் இவ் வருட விடுமுறை மலர் மிகச் சிறப்பாக அமைந்திருந்தது.
சென்னை - 78, பி. காந்தகுமார்.

இருந்த இடத்திலிருந்தே நாலு தென் மாநிலங்களின் பல சுற்றுலாத் தலங்களின் சிறப்பை அறிந்து கொள்ளப் பெரிதும் உதவியாக இருந்தது மலர்.
தோட்டக்குறிச்சி, இரா. வளையாபதி.



• உயரும் சுருதி!

ஜெ.சுருதி குறைந்துள்ளதா?

● கே. பெருமாள், கூனி யூர்.

? வீரப்பன் மீண்டும் மீண்டும் கேசட் அனுப்புவது ஏன்..?

! அவனுக்கும் பொழுது போக வேண்டாமா?

● கே.எம். சுப்ரமணியன், திருவெள்ளரை.

? தமிழகத்தில் போலி டாக்டர்கள் அதிகம் இருப்பதற்கு என்ன காரணம்?

! போலி பேஷண்டுகளையும் நாம் போன ஆட்சியில் பார்த்திருக்கிறோமே! பேஷண்டுகள் இருக்கும் போது டாக்டர்களும் இருக்கத்தானே செய்வார்கள்.

● ப. மூர்த்தி, பெங்களூர் - 21.

? தாங்கள் பிரதமரின் அரசியல் ஆலோசகராகத் தற்போது இருந்தால் அவருக்கு என்ன ஆலோசனை சொல்வீர்கள்?

! அடக்கி வாசிக்கவும்!

● ஆர்.பி. ஜெயச்சந்திரன், பூனாம்பாளையம்.

? அணுகுண்டு சோதனைகள் பா.ஜ. அரசின் சாதனையா? முற்றிலும் இந்திய விஞ்ஞானிகளின் சாதனையா?

! அணுகுண்டு வெடித்தது விஞ்ஞானிகளின் சாதனை; அதற்கு அனுமதி அளித்தது பாரதிய ஜனதா அரசின் சா(வே)தனை!

● ஜி. ராமதாஸ், கணபதி அக்ரஹாரம்.

? இருபதாம் நூற்றாண்டு இறுதியில் உலகமே உன்னிப்பாக கவனிக்கும் நிகழ்ச்சி ஒன்று...?

! இந்தோனேஷிய சுஹார்டோ அரசுக்கு வந்துள்ள சோதனை. You cannot fool all the people all the time என்பதற்கேற்ப, 32 ஆண்டுக்கால ஆட்சியில் சர்வாதிகாரமும் ஊழலும் வேரூன்ற வழி செய்தவரை எதிர்த்து இன்று இளைய சமுதாயம் போராடக் கிளம்பியிருக்கிறது!

● தி. சுபாகரன், சென்னை - 78.

? அமெரிக்காவைக் கண்டு பயப்படாத பிரதமர் வாஜ்பாய், 'அம்மா'வைக் கண்டு பயப்படுகிறாரே, ஏன்?

! அமெரிக்காவைப் பகைத்துக் கொண்டால் இந்தியப் பொருளாதாரத்துக்குத்தான் ஆபத்து. அம்மாவைப் பகைத்துக் கொண்டால் பா.ஜ. ஆட்சிக்கே ஆபத்து. யோசிக்க மாட்டாரா?

● செந்தில் முருகன், நெய்வேலி.

? தீவிரவாதத்தை ஒடுக்க, போலீஸ் துறையைப் புதுமையாக மாற்ற வேண்டும் என்கிறாரே பாலகிருஷ்ணன்?

! நவீனப்படுத்த வேண்டியது அவசியம்தான் என்றாலும் தீவிரவாதம் ஒழிய அது நிரந்தரத் தீர்வாகாது. இலங்கை, யாழ் மேயர் வஞ்சித்துக் கொல்லப்பட்ட நிகழ்ச்சி இதையே காட்டுகிறது. எப்படிப்பட்ட ஏமாற்றுக்கும் சுயமைக்கும் துணியும் கோழைத்தனமே தீவிரவாதம்.. அதை மதி நுட்பத்தால் தான் எதிர்கொள்ள வேண்டும்.

● வி. சின்ராஜ், சிதம்பரம் - 1.

? 'நான் கலந்து கொண்ட அமைச்சரவைக் கூட்டங்களில் இந்த அவசர சட்டம் வந்ததா என்று எனக்கு நினைவில்லை...' என மத்திய சட்ட அமைச்சர் தம்பிதுரை கூறியுள்ளாரே – ஒரு பொறுப்புள்ள அமைச்சர் கூறும் பதிலா இது?

• 100/100 பொருத்தம்!



• உலகின் பார்வையில்...



• 'துயர' நாள்!



நீங்கள் கேட்டவை — தராசு

! 'அம்மா என்ன சொல்லியிருக்காங்களோ அதுவே சரி' என்று 'பொறுப்புடன்' சொல்லிட்டாரே... அப்புறமென்ன!?

● பா. கிருஷ்ணகுமார், கோவில்பட்டி.

? தற்போது இந்தியா இருக்கும் நிலையில் அணுகுண்டு சோதனைகள் எல்லாம் தேவைதானா?

! 'இல்லை' என்று வாதாடவும் இங்கே பலர் இருக்கிறார்கள். தலைநகரில் எதிர்ப்பு ஊர்வலமே நடந்துள்ளது. 'இடுப்புக்குத் துணியில்லாதவன் ஜரிகை டர்பன் அணிந்த கதை இது' என்று ஒரு பொதுஜனம் கோபப்பட்டதை டீவியில் காண நன்றாயிருந்தது. விழிப்புணர்வு அடியோடு இல்லாது போகவில்லை!

● மேலை பழ நாகப்பன், சென்னை - 41.

? படித்து மகிழ்ந்திட ஒரு வித்தியாசமான புத்தகம் குறித்து?

! இலங்கை, தற்மோதையம் வெளியிட்டுள்ள வண்ணமிகு சிறு ஆங்கில 'நூல்; Honey Drops. அழகான படங்களுக்கிடையே சத்ய சாயி பாபாவின் பொன்மொழிகள். உதாரணம்: Politics without principles, education without characters, science without humanity and commerce without morality are not only useless but also seriously dangerous. இன்றைய சூழலுக்கு 100/100 பொருத்தம்!

● ஆர். ஜெயசீலன், களப்பாள்.

? 'பாபர் மசூதி இடிக்கப்பட்ட டிசம்பர் ஆறாம் நாள் என் வாழ்க்கையில் துயரமான நாள்' என்று அத்வானி கூறியுள்ளாரே?

! இருக்காதா பின்னே? பி.ஜே.பியின் பெயர் அடியோடு ரிப்பேர் ஆன நாளாயிற்றே!

● கே.கே. வெங்கடேசன், சென்னை - 18.

? மத்திய அரசு ஊழியர்களின் ஓய்வு பெறும் வயது அறுபதாக உயர்த்தப்பட்டுள்ளதால் இளைஞர்களின் வேலை வாய்ப்பு பாதிக்கப்படுமில்லையா?

! அப்படிச் சொல்லித்தான் தமிழக முதல்வர் அத்திட்டத்தைத் தமிழகத்தில் அமுல்படுத்த மறுத்து விட்டார். ஆனால் வேலை வாய்ப்புகளை அரசுத் துறையில் மேலும் மேலும் அதிகரித்துக் கொண்டு போவது தலைவலியையே தரும். தனியார் துறையில் தொழிலகங்கள் நிறைய உருவாகி வேலை வாய்ப்புகள் பெருகுவதே ஆரோக்கியமான பொருளாதார வளர்ச்சியாக இருக்கும்.

● தி. ரங்கசாமி, மதுரை - 16 ❑

? குடியைக் கெடுக்கும் மது விற்பனையை அனுமதிக்கிற அரசு, கடல் உப்பு விற்பனையைத் தடை செய்வது எந்த வகையில் நியாயம்?

! அயோடின் சேராத உப்பு விற்பனையை அனுமதிக்க முடியாது என்று சொல்வது சிறிய உப்பு தயாரிப்பாளர்கள், வியாபாரிகளின் பொருளாதாரத்தைப் பாதிப்பது ஒருபுறமிருக்க, செயற்கையாக அயோடின் சேர்ப்பது நல்லதல்ல; மருத்துவ ரீதியாகத் தேவைப்படுகிறவர்களுக்கு மட்டுமே கிடைக்கச் செய்ய வேண்டும்' என்ற கருத்தும் நிலவுகிறது.

● கே.என். பாலகிருஷ்ணன், கும்பகோணம்.

? ஜெ கருதி அடங்கியுள்ளதா?


! எங்கே அடங்கிச்சு? நாளைக்கு ஓர் அபத்த அறிக்கையும் பொழுதுக்கு ஒரு கோயபல் பிரசாரமுமாகத் தொடரத்தான் செய்யுது... லேட்டஸ்டாக, தமிழகத்தில் தொழில் வளர்ச்சி பற்றி உளறிக் கொட்டி, வாங்கிக் கட்டிக்கிட்டு இருக்கார். ⭘



• பொழுது போக்கு!



யோசித்தெடுத்த முடிவு...



• மறந்தே போச்சு!

❑ ரூ. 50 பரிசு பெறுபவர்:
தி. ரங்கசாமி,
16, கோகுலம் வீதி, டோக் நகர்,
கோச்சடை, மதுரை - 625 016.

இது ஐடியா வாரம்!

கருத்து : ஜூலி

சன் டீ.வியில் ஒவ்வொரு வாரமும், சிவாஜி வாரம், விட்டலாச்சார்யா வாரம், இரட்டையர் வாரம், காதல் வாரம் என்று ஒரே சப்ஜெக்ட் சினிமாக்களை ஒளிபரப்பு கிறார்கள். இதோ இன்னும் சில ஐடியாக்கள்:




தாத்தா-பேத்தி வாரம்

தாத்தா வயசு நடிகர்கள், பேத்தி வயது இளம் நட்சத்திரங்களுடன் ஜோடியாய் நடித்த படங்களைப் போடலாம்.



மரம் சுத்தும் வாரம்

ஹீரோ, ஹீரோயின்கள் மரத்தைச் சுற்றி வந்து டூயட் பாடும் பாடல்கள் நிறைந்த படங்களை ஒளிபரப்பலாம்.



வேப்பிலை வாரம்

மஞ்சளாடை அணிந்து கும்பலாய் வேப்பிலை, தீச்சட்டி சகிதம் சாமியாடும் காட்சிகள் கொண்ட படங்கள் இந்த வார ஸ்பெஷல்!



உல்டா வாரம்
பல்வேறு ஆங்கிலப் படக் கேஸட்களையும் பார்த்து, கதையை உல்டா பண்ணி எடுக்கப்பட்ட தமிழ்ப் படங்களை ஒளிபரப்பலாம்! ஒரே படத்தை உல்டா பண்ணி எடுத்த படங்களை, கொஞ்சம் 'டூமச்' ஆனாலும் ஒளிபரப்பலாம், தப்பில்லை!
அர்ச்சனை வாரம்
கவுண்ட மணி, செந்தமிழ்ச் சொற்களால், செந்திலை அர்ச்சிக்கும் காட்சிகள் கொண்ட படங்கள்.
பூ சுத்தும் வாரம்
நம்ப முடியாத காட்சிகள் மூலம் முழமாய் ரசிகர் காதில் பூசுத்தும் முழம் கொண்ட படங்கள் இந்த வாரம்.
வண்டலூர் வாரம்
பாம்பு, யானை, குரங்கு இன்ன பிற ஜீவராசிகள் நடிக்கிற படங்களை இந்த வாரம் ஒளிபரப்பி, குழந்தைகளை மகிழ்ச்சிப்படுத்தலாம்.

பூக்களினால்
நாம் அடையும் நன்மைகள்



பூக்கள் மனிதனுக்கு நல்ல மனத்தெளிவும், அழகும், நறுமணமும், ஒளியும், ஒளி நிறங்களும், உள்ளத்திற்கு உற்சாகமும், அன்பு, இரக்கம் போன்ற உணர்ச்சிகளும், உடலுக்கு உறுதியும், தைரியமும், இன்னும் தியானசக்தியும், ஆன்மீக உணர்வும், மலர்ச்சியும், தீய குணங்களை மாற்றும் சக்தியும் இவற்றையெல்லாம் நமக்கு அளித்து உதவும்.

பூக்களின் பெயர்கள்	பலன்கள்
1. மல்லிகையும், முல்லையும்	புனிதத்தன்மை தந்து சம நிலையும் அளிக்கும் நறுமணத்தை முகர்வது அவசியம். இதனால் பூமியில் மறைந்து உள்ள அதன் சாரம் இரகசிய உண்மை நாம் கிரகித்துக் கொள்ள முடிகிறது.
2. நாட்டு ரோஜாப்பூ	சரணாகதி பாவனை தந்து ஆண்டவர்பால் இனிய எண்ணமும் தந்து தியானம் வளர்க்கும்.
3. ரோஸ்கலந்த சிவப்பு ரோஜா	ஆண்டவரின் பேரன்பையே வெளிப்படுத்தும்.
4. துளசி - பூவும் இலையும்	பக்தி தரும்.
5. அரளிப்பூ	மன அமைதியும் சரணாகதியும் ஆண்டவர்பால் இனிய எண்ணமும் தந்து தியானம் வளர்க்கும்.
6. கருஞ்சிவப்பு (கிரிம்சன்) அரளிப்பூ	தவறான போக்கினைத் தடுத்து நல்வழிக்கு மாற்றிச் செலுத்தும்.
7. அல்லிப்பூ	இலட்சுமியின் பொருள்வளம் தரும்.
8. வெள்ளைத் தாமரைப்பூ	தெய்வீகப் பேருணர்வை சைத்திய சக்தியைத் தரும்.
9. மணமுள்ள கதிர் பச்சை அல்லது திருநீற்றுப் பச்சை என்னும் பூவும்	ஆண்டவருடன் இணைந்து இன்பம் தரும்.
10. சண்பகப்பூ	மனோ உள்ளப்பாடுகளை சீர்ப்படுத்தி அமைக்கும்.
11. மணமுள்ள மருவு இலை	ஆண்டவரின் சாந்நித்யத்தையும் உணர்வையும் தரும். வைகறை ஸ்ரீ அரவிந்த ஆசிரமம் 1986-4
12. நாகலிங்கப்பூ	அன்றாடம் கடவுளுக்கு அர்ப்பணித்தால் பொருள் பற்றாக் குறையை நீக்கிச் செல்வத்தை கொடுக்கக்கூடிய ஒரு ஆற்றல் உண்டு.






13. மருக்கொழுந்து	வேண்டாதவற்றை விட்டுவிட்டு வேண்டியவற்றை பெற்றுக் கொள்ளலாம். இது புதிய வாழ்வை அளிக்கவல்லது.
14. விருட்சிப்பூ	வெண்மை நிறமுள்ள பூ குளுமை நிறைந்த அமைதியை உடலில் உள்ள அணுக்களில் பாய்ச்சுகின்றச் சக்திப் படைத்தது. அந்த அமைதி நோய்களை குணப்படுத்துகின்ற வல்லமை வாய்ந்தது.
15. எருக்கம்பூ	பயத்தை ஒழித்து தைரியத்தை வளர்த்துக் கொள்ளலாம்.
16. மகிழம்பூ	பொறுமையைக் கொடுக்கும்.
17. பவளமல்லி	சிறந்த விருப்பங்களை வளர்க்கலாம் சிவபுராணம் கூறுதல்.

பெருஞ்செல்வம் விரும்புவோர்: தாமரை மலர், வில்வம், சதபத்திரம், லங்கபஷ்பம் ஆகியவற்றால் பூஜித்தால் சந்தேகமில்லாமல் பெருஞ்செல்வம் கிடைக்கும்.

அக்கினிப் புராணம் கூறுதல்: மலர்களில் மிகச் சிறந்ததாக சொல்லப்படுவது மாலதி புஷ்மாகி

புஷ்பத்தின் பெயர்	பலன்
1. மருக்கொழுந்தினால் அர்ச்சனை செய்தால்	ஆனந்தகரமான வாழ்வை அடைவர்
2. மல்லிகைப் பூவினால் அர்ச்சனை செய்தால்	எல்லா பாவங்களிலிருந்து விடுபடுவான்
3. ஜாதி புஷ்பத்தால் அர்ச்சித்தால்	வைகுந்தப் பதவி
4. அவரிமுட் செவ்வந்தி மலர்களால் அர்ச்சித்தால்	தெய்வப்பக்தி நிறைந்தவனாய் விளங்கி வைகுண்டத்தை அடைவர்.



மலர்களை மாலைகளாக தொடுத்து பகவானுக்கு அர்ப்பணம் செய்வது மலர்களால் அர்ச்சிப்பதைவிட எண்ணற்றமடங்கு பலன் தரும். ஒருவன் தன் சொந்த தோட்டத்திலிருந்து மலர்களைச் சேகரித்து வந்து பகவானுக்கு அர்ப்பணித்தால் அடையும் பலன்களைவிட மும்மடங்கு பலனைக் காட்டும். பிரதேசத்தில் மலரும் மலர்களை பறித்துவந்து அர்ச்சிப்பதால் அடையலாம்.

காதில் விழுந்தவை:



●● அப்பாடி! ராஜ்ய சபை தேர்தலுக்கான அறிவிப்பைத் தேர்தல் கமிஷன் வெளியிட்டு விட்டதால், தி.மு.க.வினரின் முகத்தில் மகிழ்ச்சிக்களை வந்திருக்கிறது. "ஜூன் 18-ம் தேதி தேர்தல். அதுவரைக்கும் ஒன்றும் செய்ய முடியாது. அது தவிர இப்போது துவங்கியுள்ள பூராராளுமன்றக் கூட்டம் இரண்டு மாதங்களாவது நடக்கும். அந்தச் சமயத்தில் ஆட்சிக் கலைப்பு என்ற பிரச்னையெல்லாம் வைத்துக் கொள்ள மாட்டார்கள். காரணம் மெஜாரிட்டிக்கே தொங்கலில் இருக்கும் பா.ஜ.க. அரசு, ஒவ்வொரு மசோதா நிறைவேற்றுவதற்கும் அனைத்துக் கட்சிகளின் ஆதரவையும் கோர வேண்டும். சின்னக் கட்சிகளைக் கூட அலட்சியம் செய்ய முடியாது" என்று சொன்னார் தி.மு.க.வின் முன்னாள் எம்.பி. ஒருவர். "தலைவரின் பவள விழா தொடக்க விழாவை ஜாம் ஜாமென்று நடத்தி அசத்திடுவோம்" என்றார் மற்றொரு பிரமுகர். "தேர்தல் கமிஷன் தேர்தல் நடத்த அறிவிப்பு கொடுத்திருக்கிறதே தவிர, முறையான அறிவிப்பு - அதாவது, மனுதாக்கல் தேதி - வாபஸ் தேதி போன்றவற்றைக் குறிப்பிட்டு - வெளியிடும் பொறுப்பு மாநிலத் தேர்தல துறையைச் சார்ந்தது. அந்த அறிவிப்பு இன்னமும் வெளியிடப்படவில்லை. "தனது முயற்சியை இன்னமும் ஜெ. கைவிடவில்லை. ஆறு எம்.பி. ஸீட்டுக்கள் தி.மு.க. - த.மா.காவுக்குப் போகும் என்பது தெரிந்தும், ஆட்சியைக் கலைக்காமல் தேர்தலுக்கு வழி செய்திருப்பதைப் பார்த்தால் சின்ன சலுகை கொடுத்துவிட்டு 'ஆட்சிக் கவிழ்ப்பு' என்ற பெரிய விவகாரத்தை ஜூலை மாதம் முடிவில் செயல்படுத்துவார்களோ என்ற சந்தேகம் இருக்கிறது" என்கிறார் மூத்த கழக உறுப்பினர் ஒருவர்.

இதற்கிடையில் இந்தத் தேர்தலின் மூலம் ஐந்து ராஜ்ய சபை உறுப்பினர்களைப் பெறும் வாய்ப்பு உள்ள தி.மு.க.வில் முட்டல் - மோதல் துவங்கிவிட்டது. கட்சியில் ஸீனியாரிட்டி, தியாக உணர்வு, பொது வாழ்க்கையில் ஈடுபாடு, சுத்தமான வரலாறு என்று தகுதிகள் பார்ப்பதைத் தவிர முதல்வரின் குடும்பத்தினரின் மூலமாகவும் சிபாரிசுகள் வருமாம். தலைமை நிலையத்தில் உட்கார்ந்திருக்கும் மிசா கணேசனும், விடுதலை விரும்பியும் ஏற்கெனவே மாநிலங்களவை உறுப்பினர்களாக இருந்தவர்கள். அவர்களுக்கு மீண்டும் கொடுப்பது சரியா? என்று கேள்வி எழுப்புகிறார்கள் தென் மாவட்டக் கட்சிக்காரர்கள். "அவர்கள் வேறு எந்த வேலையும் செய்யாமல் கட்சி வேலையை முழு நேரமாகச் செய்து கொண்டிருக்கிறார்களே, அதற்காக இந்தச் சலுகைக் கூடக் கொடுக்கக் கூடாதா?" - எதிர்க் கேள்வி கேட்கிறார்கள் சென்னைப் பிரமுகர்கள். சா.கணேசன், ப.உ.சண்முகம், திருச்சி சிவா, முகமது சகி, நிர்மலா சுரேஷ், பொன். முத்துராமலிங்கம், தங்கவேலு ஆகியோரது பெயர்களும் அடிபட்டுக் கொண்டிருக்கின்றன. ஸ்டாலினின் இளைஞர் அணியும் பங்கு கேட்கிறது. மதுரைப் பக்கமிருந்து வரும் சிபாரிசுகளையும் கவனிக்க வேண்டும். பவள விழா நாயகருக்குப் பிரச்னைதான்!

●● அமைச்சர் ஆர்.கே.குமார் ராஜினாமா விவகாரம் மசாலா படங்களுக்குரிய பல திருப்பங்களுடன் அமைந்து விட்டதாகச் சொல்கிறார்கள். தில்லிச் சூழ்நிலையில் நம்மால் முடிந்த அளவு அம்மாவின் விருப்பங்களை நிறைவேற்றி வந்த குமாரின் பணி திருப்தியாக இல்லை என்று காரணங்கள் சொல்லப்பட்டாலும் சசிகலா கூட்டத்தாரின் அந்நியச் செலாவணி வழக்கு விவகாரங்களை முடக்குவதற்கான எந்த நடவடிக்கையும் எடுக்காததுதான் முக்கியக் காரணமாம். குறிப்பாக, சென்னையில் அமலாக்கப் பிரிவுக்காக ஆஜராகும் வழக்கறிஞர் குமார் (அவரும் குமார்தான்) தூக்கப்பட வேண்டும் என்பது அம்மாவின் விருப்பம். ஆனால் அமலாக்கப் பிரிவு இயக்குனரகம் 'நோ' சொல்லி விட்டது. அதே போல் சசி கூட்டத்தின் பல்வேறு வழக்குகளை விரைவு படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டன. சென்னையில் உள்ள சில அமலாக்கப் பிரிவு அதிகாரிகளை மாற்றவும் அமலாக்கப் பிரிவு இயக்குனர் ஒப்புக் கொள்ளவில்லையாம். "வருமான வரி அதிகாரிகளை மாற்றியது போல்

சசிக்கு வந்த கோபம்!

அமலாக்கப் பிரிவில் ஏன் செய்ய முடிய வில்லை?" என்று அம்மா ஆத்திரப்பட்டாராம். ஆஸ்பத்திரியில் தம்மைச் சந்தித்த ஜெ.விடம், "கொஞ்சம் கால அவகாசம் கொடுங்கள்; சரிப் படுத்தி விடலாம்" என்று சொல்லியிருக்கிறார் குமார். ஆனால் சசியின் வற்புறுத்தல் காரண மாக குமாரை கழற்றி விடுவதென்று தீர்மானிக் கப்பட்டுவிட்டதாம். மும்பை தொழிலதிபர் ஒருவரிடம் 'நெருங்கிய' தொடர்பு ஏற்படுத்திக் கொண்டதாக குற்றச்சாட்டு போடப்பட்டது. ஏற் கெனவே எல்லா அமைச்சர்களிடமிருந்தும் ராஜினாமா கடிதம் வாங்கி வைக்கப்பட்டிருப்ப தால், தேதியைப் போட்டு அதை பிரதமருக்கு அனுப்புவது மிகச் சுலபமாகப் போய்விட்டது ஜெ.வுக்கு. பிரதமரைச் சேடப்பட்டி சந்தித்த போது சீல் செய்யப்பட்ட அந்த ராஜினாமா கடிதத்தையும் கொடுத்தாராம். அதன் பிறகுதான் சென்னையில் குமாரைச் சந்தித்து 'தாம் அவரை விடுவிக்கப்' போவதாகச் சொல்லியிருக்கிறார் ஜெ.

●● தி.மு.க.வினரின் சொத்துப் பட்டியலை ஜெ. தயாரித்து இருக்கிறார். வருமான வரித் துறை மூலம் நடவடிக்கை வர இருக்கிறது என்று பேச்சுக்கள் அடிபடும் நிலையில் தமிழக உணவுத் துறை சப்த மில்லாமல் ஒரு பணியைச் செய்து முடித்திருக்கிறது. 1996-ம் ஆண்டு தேர்தலில் போட்டியிட்டு வென்ற தி.மு.க. சட்ட மன்ற உறுப்பினர்களின் சொத்துக் கணக்கை எடுத்திருக்கிறதாம். பெரும்பாலோர் வீடு, வாசல், டாட்டா சுமோ என்று வசதியைத் தேடிக் கொண்டிருக்கிறார்களாம். சாலை போடும் ஒப்பந்தக்காரர்களிடமிருந்து ஷூராக சதவீதக் கணக்கில் வாங்கியிருக்கிறார்களாம். இந்த நிலையில் ஆட்சிக் கலைப்பு என்ற பேச் சுக்குக் கொஞ்சம் இடைவெளி கிடைத்திருப்ப தாலும், பட்ஜெட் கூட்டத் தொடர் முடிந்து விட்டதாலும் முதல்வர் சொன்னபடி அமைச் சரவை மாற்றங்கள் வந்தே விடும் என்று தி.மு.க. வட்டாரத்தில் சொல்லப்படுகிறது. இதன் கார ணமாக பல அமைச்சர்கள் கூட்டத் தொடர் முடிந்தவுடன் ஊருக்குப் போவதைக் கூட தள்ளிப் போட்டு இருக்கிறார்களாம்.

●● த.மா.கா.விற்கு இன்னும் பிரச்னைகள் முடிந்தபாடில்லை. அரசியல் விவகாரக் குழு, நிர் வாகக் குழு என்று அமைத்து விட்டாலும், மாவட்டத் தலைவர்கள் நியமனம் இன்னமும் முடியவில்லை. ஒவ்வொரு மாவட்டத் தலை வரையும் தேர்ந்தெடுக்க, ஒரு நான்கைந்து பேர் கொண்ட லிஸ்ட் கொடுக்கும்படி அரசியல் விவ காரக் குழு உறுப்பினர்களிடம் மூப்பனார் கேட் டுக் கொண்டுள்ளார். இப்போது அந்த லிஸ்டுக் குள் தங்கள் பெயரைக் கொண்டு வர அரசியல் குழு உறுப்பினர்களை பிரமுகர்கள் கூட்டம் துரத்திக் கொண்டிருக்கிறது. காங்கிரஸுடன் இணைந்து செயல்படுவது என்று மூப்பனார் முடிவெடுத்திருந்தாலும், பாராளு மன்றத்தில் சில சமயங்களில் சுயமாகவும் செயல்பட வேண்டி யிருக்கும் என்று சிதம்பரம் கருதுகிறாராம்.

●● பா.ஜ.க.வுக்கும் கலைஞருக்கும் உறவு எப்படி இருக்கிறது? மத்திய பா.ஜ.க. உறவு பற்றி மாறன் பார்த்துக் கொள்ள, தமிழ்நாட்டு பா.ஜ.க.வை குளிர்விக்கும் பொறுப்பை ஏற்றுள்ளார் கலைஞர். பா.ஜ.க. சட்டமன்ற உறுப்பினர் ராதா கிருஷ்ணனை ஆஸ்பத்திரியில் சென்று பார்த்தது, ராம. கோபாலனைச் சந்தித்தது, மாநில செயலாளர் இல. கணே சனின் வீட்டுத் திருமணத்துக்கு மனைவி யுடன் சென்றது ஆகியவற்றைச் சுட்டிக் காட்டுகிறார்கள் லோக்கல் பா.ஜ.க. வினர். "வெடிகுண்டு விவகாரத்தில் அரசை விமர்சிக்கும் எங்கள் போக்கில் எந்த மாறுதலும் இருக்காது. ஆனால் ஆட்சிக் கலைப்பு என்று வரும்போது, அ.தி.மு.க.வுக்கும் எங்களுக்கும் கருத்து வேறுபாடு உள்ளது. இப்போதிருக்கும் சூழ்நிலையில் ஐந்து வருடம் ஆட்சி செய்த கட்சி மீண்டும் பதவிக்கு வருவதை மக்கள் விரும்பு வதில்லை. மாற்றத்தை விரும்புகிறார்கள். இந்த நிலையில் இடையில் கலைத்தால், அனுதாபத் தில் மீண்டும் வர வாய்ப்பு இருக்கிறது. அந்த நிலைமை ஏன் உருவாக வேண்டும்" என்று கேட்கிறார் மூத்த பா.ஜ.க. பிரமுகர் ஒருவர். இதற்கிடையில், கட்சி வளர்ச்சி, அரசியல் நடவடிக்கைகள் ஆகியவற்றில் மிகத் தீவிர மாக, 'தனித்து' ஈடுபடும்படி புதிய தலைவர் குஷாபாவ் தாக்கரே செய்தி அனுப்பியிருக்கிறா ராம். ●

— தில்லப்பா

நேரில் போய்...



பிரசவ ஆஸ்பத்திரி பில்லை செட்டில் செய்து விட்டு வெளியே வந்தேன். என் மனைவி கமலா, பெண் சுதா நின்று கொண்டிருந்தார்கள். கமலாவின் கையில் சுதாவுக்கு மூன்று நாட்களுக்கு முன் பிறந்த பெண் குழந்தை.

ஆட்டோ பிடித்து வீடு வந்து சேர்ந்தோம். ஹாலில்தான் எல்லாம். ஓரத்தில் சுதாவுக்கு கட்டில், குழந்தையின் அழுகை, பத்திய சமையல் - புது அனுபவமாக இருந்தாலும் என் மனத்தில் ஒரு பாரம் அழுத்திக் கொண்டே இருந்தது.

போன வருடம் சுதாவுக்குக் கல்யாணம். மாப்பிள்ளைக்கு நல்லவேலை. ஆனால் சம்பந்தி கொஞ்சம் கறார் பேர்வழி. சம்பிரதாயம், வழக்கம் அது இதுன்னு கல்யாணத்தின் போது ஏக கெடுபிடி.

கல்யாணத்திற்கு வாங்கிய கடனை மாதா மாதம் செலுத்தி, இப்போதுதான் ஒரு வழியாக முடிந்தது. அதற்குள் சீமந்தம், வளைகாப்பு, பிரசவம் - மறுபடியும் கடன்.

"பதினோராம் நாள் குழந்தைக்குக் காப்பு போட்டு பேர் வைக்கணும்... விசேஷம் வருது... ஞாபகம் இருக்கில்லே...?" - என் மனைவி கமலாவின் குரல் என்னை வெளியுலகத்திற்குக் கொண்டு வந்தது.

"ஆமாம்... வாத்தியாரை பார்க்கணும், குழந்தைக்கு, சுதாவுக்கு புது டிரெஸ்... யார் யாரை பங்ஷனுக்குக் கூப்பிடறது...?"

அவன் பட்டியல் போட்டான்.

"சமையலுக்கு ஆள் போட வேண்டாம். கைக்குழந்தை, பிள்ளை பெத்தவள் இவங்களை வச்சுட்டு எனக்கு அலைய முடியாது. பேசாம கேடரிங்கில் சொல்லிடுங்க..."- கமலா என் முகத்தைப் பார்க்காமல் பேசினாள்.

"கேட்டரிங்னா இலைக்கு அம்பது ரூபா கேட்பானே..." - என் மனம் கணக்கு போட ஆரம்பித்தது.

"அம்பதோ, நூறோ அது எனக்குத் தெரியாது... மெனுவை சொன்னா 'டாண்ணு' கொண்டு வந்து சர்வ் பண்ணிட்டுப் போயிடுவான். அடுக்களை ஊட்டி என்றால் முடியாது..." திட்டவட்டமாகக் கூறி விட்டாள் கமலா.

அவளைப் பார்க்கவும் பரிதாபமாக இருந்தது.

"அவங்க 'சைடில்' எவ்வளவு பேரு வருவாங்க?"

"சின்ன பங்ஷன்தானே... ஊரையா கூப்பிடுவாங்க?"

எங்கள் வாக்குவாதம் தொடர்ந்தது.

போஸ்ட் ஆபீஸுக்குப் போய் கார்டு வாங்கி வந்தேன். வேண்டியவர்களுக்கு விபரத்தை எழுதினேன். போஸ்ட் செய்து விட்டு வரும் வழியில் கேட்டரிங் ஆளைப் பார்த்து சாப்பாட்டிற்கு மெனு கொடுத்து ஆர்டர், அட்வான்ஸ்...



"மெனு என்ன...?" கமலா கேட்டாள்.

"அதுவா முக்கியம்...? யாரிடம் கடன் வாங்கலாம் – அதை யோசி..."- எரிந்து விழுந்தேன்.

"அது உங்க டிபார்ட்மெண்ட்... நான் தலையிட மாட்டேன். நாளைக்குக் காலைல சம்பந்தியை நேரில் போய்க் கூப்பிட்டு விட்டு வரணும்..." – கமலா ஞாபகப்படுத்தினாள்.

சம்பந்தியை நினைக்கும்போது அடி வயிற்றைப் பிடித்தது. மனுஷன் என்ன கேக்கப் போறானோ...?

மறுநாள் காலையில் சீக்கிரம் எழுந்து குளித்து, பூஜையை முடித்தேன். வெற்றிலை, பாக்கு, பூ, தேங்காய் இவற்றை அழகாகப் பையில் வைத்து என்னிடம் தந்தாள் கமலா.

"சுதா... உன் மாமனார் வீட்டுக்கு அழைக்கப் போறேன்... ஏதாவது சொல்லணுமா...?" – கேட்டேன்.

"ஒண்ணுமில்லை..."- சுதா விரக்தியில் சொன்னாளா? இல்லை நிஜமாகவே ஒண்ணுமில்லையா...?

புறப்பட்டேன்.

பாண்டிபஜாருக்கு பஸ். அங்கிருந்து பஸ் மாறி மேற்கு மாம்பலம் போக வேண்டும்.

சம்பந்தி வீட்டை அடையும்போது வெயில் ஏறி விட்டது. மூணாவது மாடியில் ஜாகை. படிகளில் ஏறி காலிங் பெல்லை அழுத்தினேன்.

சம்பந்தி மாமாதான் கதவைத் திறந்தார். "வாங்கோ... பேத்தி பிறந்திருக்கா... சந்தோஷம்..."- உள்ளே நுழைந்தேன்.

ஒரு தட்டில் கொண்டு போன சாமான்களை அடுக்கினேன்.

"வெள்ளிக்கிழமை குழந்தைக்குப் பேர் வைக்கிறோம்... நீங்க வந்து ஆசீர்வாதம் பண்ணணும்..." – சம்பிரதாய அழைப்பு.

சம்பந்தி வாங்கிக் கொண்டார்.

"எல்லோருக்கும் விஷயத்தை தெரியப் படுத்தியாச்சா...?" – சம்பந்தி மாமியின் கேள்வி.

"நேத்தே கார்ட் வாங்கி எழுதி போஸ்ட் பண்ணிட்டேன் மாமி..."

கொஞ்ச நேரம் மௌனத்திற்குப் பிறகு மாமி பேசினாள்...

"எங்க வீட்டு மாப்பிள்ளையையும், பெண்ணையும் மட்டும் நேரா போய் விசேஷத்துக்கு அழைச்சுட்டு வந்துடுங்கோ... வெறும் கார்ட் மட்டும் போட்டா போதாது..."

எனக்கு துணுக்கென்றது.


'அவர்களுக்கு ஒரு பெண். நல்ல, பெரிய இடத்தில் கல்யாணம் செய்து கொடுத்திருந்தார்கள். அதுக்காக இந்த சின்ன விசேஷத்துக்குக்கூட நேரா போய்க் கூப்பிடணுமா...?' – மனத்திற்குள் ஆயிரம் எண்ணங்கள். ஆனால் வெளிக் காட்டவில்லை.

"சரி மாமி..." – சின்னதாய் ஒப்புக் கொண்டேன்.

வீட்டிற்கு வந்ததும் விஷயத்தைச் சொன்னேன். கமலாவுக்கும், சுதாவிற்கும் கோபம் பிய்த்துக் கொண்டு வந்தது.

"இந்த வெயில்லே யாரு போறது...? அவாளுக்கு பொண்ணு ஒசத்தின்னா அவ

சிவாஜி



"இருபத்தி ஐந்து கேடிகளைப் பிடிச்சு முட்டிக்கு முட்டி தட்டி ஜெயில்ல போட்டுட்டோம் சார்"

"அப்படியா, சபாஷ்! என்ன பண்ணாங்க அவங்கெல்லாம்?"

"ரெண்டு மாசமா மாமூல் பாக்கி தராம டிமிக்கி கொடுத்துட்டாங்க சார்!"

— பா. ஜெயக்குமார்

போய் சொல்லட்டும்... ஏதுடா மனுஷன் இந்த வெயில்லே எப்படிப் போவான்னுகூட நினைக்க மாட்டாங்க..." - இது கமலா.

"அப்பா நீ ஒண்ணும் போக வேணாம். போன் போட்டுச் சொல்லிடு... அதான் கார்டு போட்டாச்சில்லே. அது போதும்..." - இது சுதா.

பேசாமல் கேட்டுக் கொண்டேன். அப்புறம் ஏதாவது வில்லங்கம் வந்தால்...? மனத்திற்குள் ஒரு பயம்.

"இல்லேம்மா... ஒரு நடை போயிட்டு வந்துடறேன்..." - கமலா தந்த காப்பியைக் குடித்து விட்டுப் புறப்பட்டேன்.

மறுபடியும் வெற்றிலை, பாக்கு, தேங்காய் இத்யாதிகள்.

பஸ் பிடித்து மாம்பலம், அங்கிருந்து பஸ் மாறி வேளச்சேரி வழியாக தாம்பரம்.

சுதாவின் நாத்தனார் வீடு பெரியதாக இருந்தது. பணக்காரர்கள். காம்பவுண்டைத் தாண்டி வாசற்படியை அடைந்தேன். நாய் குலைத்தது...

'அல்க்... கிப் கொய்ட்... யாரு...?" - குரலோடு சுதாவின் நாத்தனார் வெளியே வந்தாள். என்னைப் பார்த்ததும், "வாங்கோ மாமா..." - உள்ளே கூப்பிட்டாள்.

பெரிய ஹால்... சோபா... ஷோகேஸ்... - நோட்டம் விட்டபடி உட்கார்ந்தேன். அவள் மாமனாரும் வந்தார்.

"வாங்க சார்..."வரவேற்றார்.

வந்த விஷயத்தைச் சொல்லி வெற்றிலை, பாக்கு முதலியவைகளை நீட்டினேன். வாங்கிக் கொண்டார்கள்.

"பெரியவாளா நீங்க வந்து நடத்திக் கொடுக்கணும்..." ஏற்கெனவே எப்படி வார்த்தைகளை விட வேண்டும் என்று 'பிளான்' செய்திருந்தேன்.

"கண்டிப்பா வரோம்..."

விடை பெற்றுக் கொண்டேன். மறுபடியும் பஸ்கள் மாறி வீடு.

விசேஷம் வந்தது. அவர்கள் பக்க கூட்டம் அதிகம். தாம்பரம் 'சைட்' ஆட்களே ஐந்து. ஒவ்வொருவராக வரும்போதும் மனதிற்குள் 'இன்டு ஐம்பது ரூபாய்' - என்ற கணக்கு வேறு.

சாப்பாட்டுக் கடை முடிந்து ஒவ்வொருவராக விடை பெற்றுக் கொண்டு போனார்கள். கேடரிங் ஆளுக்கு 'செட்டில்' செய்து விட்டு உள்ளே நுழைந்தேன்.

உம்... இன்னும் இரண்டு மாதத்தில் சுதாவைப் புகுந்த வீட்டிற்குக் கொண்டு போய் விட வேண்டும். பேத்தி வேறு... சின்னதாய் ஒரு பவுனில் செயின் செய்யவில்லை என்றால் சம்பந்தி சண்டைக்கு வந்து விடுவார்!

மனத்திற்குள் "எட்டு கிராம் இன்ட்டு..." - கணக்கு போட்டபடி ஹாலுக்கு வந்தேன்.

சுதாவின் நாத்தனாரும், அவள் மாமனாரும் சுதாவிடம் பேசிக் கொண்டிருந்தார்கள்.

"உன் அப்பா விசேஷத்தை ஜமாய்ச்சுட்டார் சுதா... அதுவும் எங்களுக்கு மரியாதை வச்சு வீட்டிற்கு வந்து வெத்திலை, பாக்கு வச்சு கூப்பிட்டாரே, அதுவே ஒசத்தி... அவனவன் நாலணா கார்டில் வேலையை முடிச்சுடுவான்... யுவர் டாட் ஈஸ் கிரேட்... இந்தா இதை குழந்தை கழுத்தில் போடு..." என்றபடி கையிலிருந்த தங்கச் சங்கிலியை சுதாவிடம் நீட்டினார் தாம்பரம் சம்பந்தி.

சங்கிலி இரண்டு பவுனுக்கு மேல் இருக்கும்.

ஒரு நிமிடம் திகைத்து நின்றேன்.

"அப்போ உத்தரவு வாங்கிக்கறேன்..." - அவர் புறப்பட்டார்.

"இருங்க சார்... வாசல் வரைக்கும் வரேன்..." - மேலே என்ன பேசுவது என்பதைக் கற்பனை செய்யாமல் அவர்களுடன் நடந்தேன். ●

அரிச்சந்திரா



மீனா கனவு காண்பது உடுப்பி மாப்பிள்ளையை. கார்த்திக்கோ முனியாண்டி விலாஸ்! புகை வெறுத்து, மது விலக்கியவரே மீனாவின் சாய்ஸ். கார்த்திக்குக்கு தம்மடித்து, தண்ணி போடுவது பெரு விருப்பம்.

பெயர் அரிச்சந்திரா என்றாலும் உண்மையில் சந்திரஹரியாக இருக்கும் கார்த்திக், மீனாவை மணக்க சகட்டுமேனிக்கு அளக்கிறார். சாயம் வெளுத்ததும் "மாறி விட்டேன்" என்று சத்தியம் செய்கிறார். ஆனால் செய்யாத குற்றத்துக்காக மாட்டிக் கொள்கிறார் – "ஓநாய் வருது" கதை போல.

கார்த்திக் சீராக நடிப்பதுடன், தம் செயற்கையான வசன உச்சரிப்பையும் குறைத்துக் கொண்டிருக்கிறார். மீனாவின் 'மேக்கப் பங்கு' பளிச்சென்று தெரிகிறது. என்றாலும் வழக்கமான 'ஜில்'லிப்புக்குக் குறைவில்லை.

ஹீரோவுக்கு மூன்று நகைச்சுவை நண்பர்கள் (இந்த மாதிரி நால்வர் அணியை நாலாயிரம் படங்களில் பார்த்தாயிற்று Bore!) – விவேக், சின்னி ஜெயந்த், வையாபுரி (அவ்வப்போது கொஞ்சமாக கிச்சுகிச்சு, அவ்வளவே.)

சந்தர்ப்பம் காரணமாக ப்ரியா ராமனைத் தம் வீட்டில் தங்கவைக்கிறார் கார்த்திக். மற்ற யாருக்கும் தெரியாத ப்ரியாவின் காதலர் டெல்லியில் இறக்க, அந்த அதிர்ச்சியில் (சினிமாக் கதாநாயகிகளுக்கு அனீமியாவை விட சகஜமாக ஏற்படும்) அம்னீஷியாவில் பாதிக்கப்பட, பழைய ஞாபகம் போச்! வயிற்றில் இரண்டு மாதக் குழந்தை. மீனா உட்பட அத்தனை பேரின் விரல்களும் கார்த்திக்கைக் குற்றவாளியாகச் சுட்டிக்காட்ட, 'அட' என்று நிமிர்ந்து உட்கார்ந்து, 'வித்தியாச' முடிவு வரும், இயக்குனர் செய்யாறு ரவியைப் பாராட்டலாமென்றால், தொபீல் என்று வழக்கமான லாஜிக்கில்லா சகதியில் விழுகிறது கதை.

'இறந்த' காதலர் டெல்லியிலிருந்து திரும்ப, அவர் கூப்பிட்ட கணமே ப்ரியாவின் அம்னீஷியா ஆவியாகி விட, படிக்கும் உங்களிடமே நறநறவென்றால், பார்த்த நமக்கு?

பாடலில் கொஞ்சம் வித்தியாசம் தெரிகிறதென்றாலும் பின்னணி இசை பயமுறுத்துகிறது.

கடைசிக் காட்சியின் நகைச்சுவையில் புன்னகை செய்ய முடிகிறது. ●

— ஜி.

கிளிண்டனுக்குக் குட்டித் தலைவர்களின் எச்சரிக்கை!

அணுகுண்டு சோதனைக்குப் பின் தமிழ்நாட்டு பாஜக தொண்டர்கள் படு குஷியில் இருக்கிறார்கள். மாதவரம் பால் பண்ணைக்கருகில் உள்ள மூலக்கடையில் பி.ஜே.பிகாரர்கள் அணுகுண்டு விஷயத்தை ஒரு வெற்றி விழாவாகக் கொண்டாடினர்.

புஜத்தில் காவிக் கொடியைக் கட்டிய இளைஞர்கள் சரவெடி போட்டு, கலர் தூவி மகிழ்ந்தனர். ஒவ்வொரு லோக்கல் தலைவர் பேசி முடித்த போதும் பின்னாலிருந்த ஒரு நடு வயதுக்காரர் ஷாட்களை கட் சொல்லாமல் ஓ.கே சொல்லி, இடைவிடாமல் டைரக்ட் செய்து கொண்டிருந்தார். (பக்கத்திலிருந்த முனீஸ்வரர் ஒயின்ஸ் அவரை மலை ஏற்றி விட்டது.)

"இந்த சீனாக்காரன் கைலாசத்தை ஆக்கிரமிப்பு செஞ்சிட்டான். கைலாஷ் பெயர் எங்கிருந்து வந்ததுன்னு கேட்டா சீனாவிலிருந்து வந்ததுன்னு சொல்றான், நம்ம ஊரு கம்யூனிஸ்ட்காரன். இதுதான் கம்யூனிஸ்டோட தேசபற்று. 62-ல சீனா போர் தொடுத்து 40,000 சதுர கிலோ மீட்டரைப் பிடிச்சப்போ முதல்ல கைத் தட்டுன ஆள் இந்த கம்யூனிஸ்ட்காரன்தான்! 46 தடவை அணுகுண்டு சோதனை நடத்தியிருக்கிற சீனாவைப் புகழுறான். ரெண்டு தடவை நடத்தியிருக்கிற இந்தியாவைத் திட்டறான். நாங் கேக்கிறேன், கம்யூனிஸ்ட்காரனுக்கு சோறு தண்ணி சீனாவிலிருந்தா வருது?"


மாவட்டத் துணைத் தலைவர் நாகேஸ்வர ராவ் பேசிக் கொண்டிருக்கும்போதே கூட்டம் உணர்ச்சி வசப்பட்டது. "பாரத் மாத்தாக்கி... ஜே" குரல் எல்லாரையும் புல்லரிக்க வைத்து விட்டது. "விசாகப் பட்டினம் கடற்கரையில மீன் அதிகமா வருதுன்னு கண்டுபிடிக்க சொன்ன அமெரிக்கா கண்ணுலயே மண்ணைத் தூவிட்டு செஞ்சிருக்கோம். எங்கள யாருன்னு நெனச்ச! 2×2=6ன்னு கம்ப்யூட்டர் சொன்னா அதுக்கும் நீ தலையாட்டுவே. டேய், உலகத்துக்கே கணக்கு சொல்லிக் கொடுத்த பூமிடா இது! கிறிஸ்து காலத்துக்கு முன்னாலேயே 'சரகுட'ன்னு மருத்துவமேதை பொறந்த நாடுடா! அஞ்சாயிரம் வருசத்துக்கு முன்னாடி பிரம்மாஸ்திரத்தக் கண்டுபிடிச்சவங்க. எங்ககிட்டயா டபாய்க்கிற?"

"அஸ்ட்ராலஜிய உலகத்துக்கே சொன்னது நாங்க! எங்களுக்குத் தெரியாதா கயித. உங் கண்ணுல எப்படி மண்ணைத் தூவுறதுன்னு? ஆற்காடு நவாப்பு மாதிரி இங்கிலீஸ்காரனுக்கு பயந்து பென்சன் வாங்கின சோமாறின்னு நெனச்சியா? கத்தியெடுத்து களத்திலே வெட்டி வீசின ஜான்சிராணி வம்சம்டா. இந்த கித்தாப்பு நம்மகிட்ட வேணாம், சொல்லிட்டேன்!. சதாம் உசேன் அமெரிக்காவுக்கு பயப்படலாம். அவதார புருஷன் எங்க அடல் பிஹாரி வாஜ்பாய் பயப்பட மாட்டாரு..."

வானம் நடுநடுங்க, பூமி கிடுகிடுங்க, குட்டித் தலைவர்கள் கிளிண்டனுக்கு அபாய எச்சரிக்கை விடுத்தனர்!

"இந்தியாவில இரண்டே இரண்டு ஆண் மகன்கள்தான் பிறந்திருக்காங்க. ஒண்ணு இந்திராகாந்தி, ரெண்டு, மண்ணின் மைந்தன் அடல் பிஹாரி வாஜ்பாய்! லால்சவுக்கில தேசியக் கொடிய ஏத்திட்டா பத்தாயிரம் பரிசு தர்றதா பாகிஸ்தான்காரன் சொன்னான். தலைவர் முரளி மனோகர் ஜோஷி ஏற்றிக் காட்டினார்..." என்று ஆரம்பித்த பொதுச்செயலாளர் ராஜா உள்நாட்டுக்குள்ளும் திரும்பினார்.

தாற்காலிக மாநில காங்கிரஸ் (த.மா.கா) தலைவர் மூப்பனார், வேலாயுதத்தை நலம் விசாரிக்கச்



• கண்ணம்மாபேட்டை சுடுகாடு: நந்தவனமானது!

சென்ற கலைஞர், ஓட்டுண்ணி சுப்ரமண்ய சாமி, காமாந்தகன் கிளிண்டன் என்று விளாச ஆரம்பித்தார். ஆனால் ஜெ கோஷ்டிகள், 'தங்கத் தலைவி உத்தரவின் பேரில் தான் வாஜ்பாய் அணுகுண்டு சோதனைக்குக் கையெழுத்திட்டதாக' ஊரெல்லாம் பீற்றிக் கொண்டு (சேடபட்டி முத்தையா) திரிவதைப் பார்த்துக் கடுப்படைந்த பலர் குமுறினர்.

பெரிய தலைவர்கள் மட்டும்தான் 'ஷோ' காட்ட முடியுமா என்ன...!

எழும்பூர் ஸ்டேஷனில் ஏக்கப் பெருமூச்சுகள்!

எப்போதும் ஜே ஜே வென்றிருந்த எக்மோர் ஸ்டேஷன் சமீபகாலமாக தூங்கி வழிகிறது. விடியற்காலையில் நாடகம் முடிந்து அனாதையாக நிற்கும் மேடை போல ஸ்டேஷனே வெறிச்!



• எழும்பூர் ஸ்டேஷன் காத்திருக்கும் போர்ட்டர்கள்

மீண்டும் தினம் தினம் திருவிழாவாக மாறும் என்று ரயில் நிலைய அதிகாரிகள் சொன்ன தேதிகளும் கடந்து விட்டன. அகல ரயில்பாதை அமைக்கும் பணி முடிய ஜூலை இறுதியானாலும் ஆகலாம் போல் தெரிகிறது. இந்தப் பணி நிமித்தமாக, ஏழு ரயில்கள் மாற்றுப் பாதையில் போவதால் எக்மோர் ஸ்டேஷனின் செல்லப் பிள்ளைகளான போர்ட்டர்கள் மெலிந்து போய் காணப்பட்டனர்.



• காற்று வாங்கும் கடை...

"ஒரு நாளைக்கு ஐம்பதிலிருந்து எழுபத்தைந்து ரூபாய் வரை கிடைச்சிக்கிட்டிருந்திச்சுங்க. இப்ப பதினைஞ்சு ரூபாய் கூடக் கிடைக்க மாட்டெங்குது. எனக்கு நாலு குழந்தைங்க. எல்லாம் ஸ்கூலுக்குப் போறாங்க. இந்தப் பதினைஞ்சு ரூபாய் எனக்கு மதிய சாப்பாட்டுக்கே போதலை. குழந்தைங்க எல்லாம் ரொம்ப மெலிஞ்சு போயிட்டாங்க. கூலி சம்பளத்த பொண்டாட்டிகிட்ட கொடுத்து நாலு மாசமாச்சுங்க. குழந்தைங்கள பாக்கவே பரிதாபமா இருக்குங்க. அதனால ராத்திரியில இங்கயே தூங்கிடுறேன்" என்றார் போர்ட்டர் சற்குணம்.

132 போர்ட்டர்களில் பலர் சாலை சீரமைப்புப் பணிகளுக்குச் சென்று விட்டதாகச் சொன்னார்கள். அரசிடம் இடைக்கால ஊதியமாக இவர்கள் கேட்டும் இரண்டு மாதங்கள் பொறுத்துக் கொள்ளுங்கள் என்று கூறி விட்டதாம்.

லத்தீப் நடத்தும் உணவு விடுதியில் மதியம் ஒரு மணிக்கே சப்ளையர்கள் இரண்டு இரண்டு டேபிளை ஒட்டிப் போட்டு அதன் மீது மல்லாக்கப்படுத்திருந்தனர்.

"இருபது பேர் வேலை செய்த கடையில் தற்போது ஏழு பேர் தூங்கிக் கொண்டிருக்கிறார்கள். மற்றவர்களை மனசில்லாமல்தான்



அடுத்த இதழில்...

கலைஞர் - 75

முதல்வரின் 75வது பிறந்த நாளையொட்டி ஸ்பெஷல் பக்கங்கள்!

விறுவிறுப்பு... சுவாரசியம்... வித்தியாசம்!

வீட்டில் போய்த் தூங்குங்கள் என்று அனுப்பி விட்டோம். சம்பளம் கொடுக்கவே கடை ஓடவில்லை" என்று நகைச்சுவை ததும்பக் கூறினார் லத்திப்.

புத்தகக் கடை, வெளியில் உள்ள பெட்டிக் கடை, டீக்கடை எல்லாம் ரெஸ்ட் எடுத்துக் கொண்டிருக்கின்றன.

வயிற்றுக்குள் பசிக்குதிரையின் டக்டக் பீதியைத் தாக்குப் பிடிக்க முடியாமல் ஓடியவர்கள் போக இன்னும் பாதி போர்ட்டர்கள் வயிற்றை இறுகக் கட்டிக் கொண்டு ரயில்கள் எப்போது வரும் என்று தண்டவாளங்களைப் பார்த்துக் கொண்டிருக்கின்றனர்.

சமரசம் உலாவும் இடம்!

பொது ஜனங்களின் திறந்தவெளிக் கழிப்பிடமாகவும் இருந்த கண்ணம்மாபேட்டை சுடுகாட்டை எக்ஸ்நோரா அமைப்பு பொறுப்பு ஏற்று நந்தவனமாக மாற்றிக் காட்டியுள்ளது.

போட்டி முடிவு— 5

ரான்பக்ஸி லாப்ரட்ரீஸ் என்ற அந்த நிறுவனத்தின் பெயரைச் சரியாக எழுதியவர்களுள் குலுக்கலில் தேர்வாகி பட்டுப் புடைவைப் பரிசு பெறுபவர்:

ஜி. பத்மனாபன்,
5/496 ஜே.ஜே. நகர்,
முகப்பேர் எஸ்டேட்,
சென்னை— 50

சுடுகாட்டுக்குள் கிளை கிளையாகத் தார்ச் சாலைகள், இருபுறமும் விதவிதமான குரோட்டன்ஸ் செடிகள்; சதுரமாகப் புல் தரை பரப்பு; ரோஜா செடிகள்.... வருபவர்களை (!) ஈர்க்கின்றன. ஆதிகாலத்து மரங்களெல்லாம் இல்லை. எல்லாம் ஐந்தாண்டு இளம் வயது மரங்கள்தான். பச்சை மரக்குடைகளாக நிற்கின்றன.

மாசுபட்ட காற்றை உறிஞ்சி மென் காற்றாக மாற்ற சுடுகாட்டைச் சுற்றி அசோக மரங்கள் இருக்கின்றன. ஏற்கெனவே இருக்கும் பீடங்களில் தூதுவளை போன்ற மருத்துவ குணமிக்கக் கொடிகளை வளர்த்துப் படர விட்டுள்ளனர்.

"புதைப்பதற்கோ, பீடம் கட்டவோ தற்போது அனுமதியில்லை. எல்லாம் எரிக்கத்தான் அனுமதி. அதனால் பூச்செடிகளை வளர்க்க முடிகிறது" என்கிறார் தோட்டப் பராமரிப்பாளர் முனுசாமி.

உள்ளேயே பிரார்த்தனை மண்டபம் இருக்கிறது. மின்சாரம் மூலம் எரிக்க அரசு ஒரு கட்டடத்தையும் கட்டியுள்ளது. இன்னும் செயல்படவில்லை. இந்துக்களுக்கான இந்த மயான பூமியை சோலையாக மாற்றிக் காட்டியுள்ள எக்ஸ்நோரா நிர்மல் ஒரு ஜெயின்.

மரங்கள் உதிர்க்கும் இலைகளைத் திரட்டி இங்கேயே இயற்கை உரம் தயாரிக்கிறார் இஸ்மாயில் என்கிற முஸ்லிம். அந்த உரத்தை இங்கிருக்கும் பூச் செடிகளுக்கே உரமாகப் பயன்படுத்துகின்றனர். சமரசம் உலாவும் இடம்!

— வேணுஜி

படங்கள்: ஸ்ரீஹரி

— நீலகிரித் தொகுதி
எம்.பி மாஸ்டர் மாதனுடன்
ஒரு
சந்திப்பு

"அமைச்சர் பதவிக்கு ஆசைப்பட்டேனா?"

தாம் ஜெயித்த தொகுதிக்கு (நீலகிரி) சரியாக ஒரு மாதம் கழித்து கடந்த வாரம் தலை நீட்டியிருந்தார் நீலகிரித் தொகுதி எம்.பி மாஸ்டர் மாதன். படு சுறுசுறுப்பாய் திரண்டு வந்த மக்களிடம் குறை கேட்டு, பதில் சொல்லிக் கொண்டே நம்முடனும் பேசினார். பேட்டியிலிருந்து:

"உங்களை வெற்றி பெறச் செய்தது வெடிகுண்டுகளா...? ஜெயலலிதாவா...?"

"கண்டிப்பாக வெடிகுண்டுகள் அல்ல... வெடிகுண்டுக் கலாசாரம் இங்கு பரவத் தொடங்குமுன்னரே எனது வெற்றி உறுதியானதாகத்தான் இருந்தது. மக்கள் நாட்டில் நிலவிய அரசியல் சூழ்நிலை குறித்து ரொம்பவும் வேதனைப்பட்டு, கடந்த கால ஆட்சியின் மீது நம்பிக்கையிழந்து பி.ஜே.பியின் மீது வலுவான நம்பிக்கை கொண்டு வோட்டுப் போட்டதாகவே என்னால் நிச்சயமாக சொல்ல முடியும். நாட்டில் நிலையான ஆட்சி வேண்டும். நேர்மையான பிரதமர் வேண்டும். அதற்கேற்ற மாதிரி தமிழகத்தில் எங்கள் கூட்டணியும் வலுவாய் அமைந்தது. மக்கள் மாற்றத்தை விரும்பினார்கள். அது இப்போது நடைமுறைக்கு வந்துள்ளது. எங்கள் வெற்றிக்குக் கூட்டணி உதவியாக இருந்தது என்று வேண்டுமானால் சொல்லலாம். அதுவே காரணம் என்று சொல்ல முடியாது."



• மாஸ்டர் மாதன்

"ஆனால் பி.ஜே.பி என்றால் தமிழக மக்களுக்கு ஒன்றுமே தெரியாது. அதைப் பட்டி தொட்டியெல்லாம் கொண்டு சென்றவள் நான்தான் என்று ஆவேசமாய் பேட்டி கொடுத்தாரே ஜெயலலிதா? அதற்கு என்ன அர்த்தம்...?"

"அவர் எந்த நோக்கத்தில், எந்த சூழ்நிலையில் அப்படிக் கூறினார் எனத் தெரியவில்லை. ஏற்கனவே நடந்த தேர்தல்களில் பாஜக வாங்கின வோட்டுக்களெல்லாம் பட்டி தொட்டிகளில் (44,000, 38,000 வோட்டுக்கள்) விழாமல் வேறெங்கு விழுந்தது? பாஜக பற்றி யாருக்குமே தெரியாது என்பதை நான் மட்டுமல்ல; எவரும் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். ஜெயலலிதா உதவியாக இருந்தார் - பேருதவியாக இருந்தார் - அவர் தம் கட்சி வோட்டுக்களை எங்களுக்கு விழ வைத்து வெற்றி வாய்ப்பை நல்கினார் என்று வேண்டுமானால் சொல்லாமே யொழிய இதற்கு முழு முதற்காரணம்




"என்னை எதுக்கு கைது பண்ணறீங்க? நான் படிச்சு டாக்டர் ஆனவன்"

"ஸாரி, நீங்க படிச்ச யுனிவர்சிடியே போலி!"



போலி டாக்டர் நண்பரிடம்: "என்னை கைது பண்ணிட்டு, பத்தாயிரம் ரூபாய் குடுத்தா, விட்டுடறதா சொன்னாங்க. விசாரிச்சதுல அவங்க போலி போலீஸாம்!"



"அவரு போலி டாக்டர்னு எப்படி கண்டுபிடிச்சீங்க?"

"முன்னாடி ஒத்தை தலைவலி வரும். இப்ப இரட்டைத் தலைவலி வருதுன்னு சொன்னதும், முன்ன சாப்பிட்ட மருந்தை இரண்டு மடங்கா சாப்பிடுன்னு சொல்லிட்டாரே!"

—ஜூலி

அவர்தான் என்று எப்படிச் சொல்வது...?"

"ஜெ ஆதரவுக் கடிதம் தராத போது டெல்லி பாஜக வட்டாரம் எப்படி நடந்து கொண்டது...?"

"கூட்டணி என்பது தேர்தலில் மட்டு மல்ல, ஆட்சியிலும் என்பது ஏற்கனவே உறுதி யானதுதான். அமைச்சரவையில் அவர்களும் பங்கு பெற வேண்டும் என்பதையே எங்கள் தலைவர்கள் அவரிடம் அப்போதும் வலி யுறுத்தி வந்தார்கள். அப்படியும் அவர் ஆத ரவு தராத பட்சத்தில் எதிர்க்கட்சி வரிசை யிலும் அமரத் தயார் நிலையில்தான் இருந் தோம்."

"உங்கள் நீலகிரித் தொகுதியில் உள்ள தலையாயப் பிரச்னை – உடனடியாக நிவர்த்தி செய்ய வேண்டிய காரியம் எதுவென்று கருதுகிறீர்களா?"

"குடிநீர், குடியிருப்பு, சுகாதார வசதி மிக அத்யாவசியப் பிரச்னை. உடனுக்குடன் தீர்க்க வேண்டியவை. இது தவிர உடனடி யாக கவனிக்க வேண்டியது, HPF (ஹிந்துஸ் தான் போட்டோ பிலிம்ஸ்) விவகாரம் நீண்ட நெடுங்காலமாக இந்த நீலகிரி மக்களை வாழ வைத்த – வேலை வாய்ப்பு அளித்த எச்பிஎஃப், நிதி ஆதாரம் இன்றி அவஸ்தைப் படுகிறது. அது Sick Industries List-ல் வந்துள்ளது. நடைமுறையில் சில விஷ யங்களை மாற்றணும். அதோடு உள்ளூர் தொழில்களுக்கு முன்னுரிமை கொடுத்து வேலை வாய்ப்பைப் பெருக்க வேண்டும்..."

"நீங்கள் இரண்டு முன்னாள் அமைச்சர் களை (எஸ்.ஆர்.பி., பிரபு) எதிர்த்து வென்ற தால் அமைச்சர் பதவிக்கு மேலிடத்தில் ப்ரெஷர் கொடுத்ததாகப் பரவலாய்ப் பேச்சு உள்ளதே...?"

"அமைச்சர் பதவிக்கு ஆசைப்பட் டேனா... நானா...? பாஜகவின் கலாசாரப்படி நாங்கள் எதையுமே வற்புறுத்திக் கேட்க மாட் டோம். எங்களுக்குள் ஊறிக் கிடப்பது தேச நலன் என்ற சிந்தனை ஒன்றே. எந்த ஒரு பாஜக தொண்டரும் இதற்கு விதிவிலக் கல்ல...!"

"ஆனால் நீலகிரி எம்பிக்கள் தொடர்ந்து அமைச்சர்களாயிருந்திருக்கிறார்களே!... மக் களுக்கு அந்த எதிர்பார்ப்பு இருக்குமே...?"

"நியாயந்தான். ஜனங்களின் எதிர்பார்ப் புக்கள் எங்கள் தலைவருக்கும் நிச்சயம் தெரி யும். அதை சரியான நேரத்தில் – சரியாகப் பயன்படுத்துவார் – செயல்படுத்துவார் என்று நம்புகிறோம்!" (அப்படிப் போடுங்கள்!) ●

சந்திப்பு: **கா.சு. வேலாயுதன்**

■ சுப்ர. பாலன்

"இந்தச் சனியனே இப்படித்தான்... கடைசி நேரத்தில் என்னத்தையாவது சொல்லிக் காலை வாரி விட்டு விடுவாள்..." என்று அலுத்துக் கொண்டாள் வந்தனா.

அறுபது ரூபாய் கொடுத்து, அந்தச் சினிமாவுக்கு மூன்று டிக்கெட்டுகளை வாங்கி வரச் சொன்னவளே அவள்தான். இப்போது ஒரு ரூபாய்த் தொலைபேசியில், "ஸாரிடி! ரொம்ப அவசரமான வேலை வந்துடுச்சு. நான் படத்துக்கு வர முடியல்லை..." என்கிறாள் அந்தச் 'சனியன்' சுந்தரா.

"இப்ப என்னடி செய்யறது? மூணாவது டிக்கெட்டை யாருகிட்டக் கொடுக்கறது?" என்று கேட்டாள் வந்தனா.

"தியேட்டர் வாசல்லே யாருகிட்டே யாவது 'பிளாக்'கிலே தள்ளி விடலாமா?" என்று யோசனை கேட்டாள் சங்கீதா.

"அதுக்கெல்லாம் துப்பு வேணும். நம்ம கிட்டே 'ஒயிட்'டிலேயே யாரும் வாங்க மாட்டாங்க" என்றாள் வந்தனா.

தியேட்டர் வாசலில் சொல்லி வைத்த மாதிரி, கொஞ்சம் நாகரிகமாக உடையணிந்த ஒரு பெண் இவர்களை நோக்கி வந்தாள். இவர்கள் 'எக்ஸ்ட்ரா' டிக்கெட்டைக் கையில் வைத்துக் கொண்டு தவித்தது அவளுக்கு எப்படித் தெரியுமோ!

"அக்கா... உங்ககிட்டே எக்ஸ்ட்ரா டிக்கெட் எதுனாச்சும் இருக்குமா. ஒரு டிக்கெட் வேணும்..." என்று கேட்டாள் அந்தப் பெண்.

"ஒரு சிநேகிதிக்காக வாங்கினது



இருக்கும்மா. அவளை இன்னும் காணலே. வராளான்னு கொஞ்ச நேரம் பார்த்துட்டுத் தரேனே..."

"சரிக்கா... வேற யாருட்டயும் தராதீங்க அக்கா..." என்று குழைந்து சொல்லிவிட்டுப் போனாள் அவள்.

சொன்னபடி இருபது ரூபாய்க்கு அந்த உபரி டிக்கெட்டைத் தள்ளி விட்டுத் தியேட்டருக்குள் நுழைந்தார்கள் வந்தனாவும் சங்கீதாவும். வழியில் ஒரு காப்பி அருந்திவிட்டுத் தியேட்டருக்குள் குறிப்பிட்ட இருக்கைகளைத் தேடிச் சென்ற போது அவர்களுக்கு ஒரு சின்ன அதிர்ச்சி. அவர்கள் 'விற்ற' உபரிச் சீட்டுக்குரிய இருக்கையில் ஒரு வாட்டசாட்டமான இளைஞன்.

வந்தனாவுக்கு எங்கேயோ உதைத்தது.

''எக்ஸ்கியூஸ்மீ! இது 'ஜி-பதினாறு'தானே... பதினேழு, பதினெட்டு எங்க ஸீட்..." என்று சந்தேகத்துக்குக் கேட்டு வைத்தாள்.

அவன் நிமிர்ந்து பார்த்தான். "யெஸ்... ஜி-பதினாறுதான்... இப்போதான் ஒரு பொண்ணுகிட்ட டிக்கெட் வாங்கினேன். பத்து ரூபா கூடுதலாக் கேட்டா... என்ன செய்யறது..."

பிளாக்கில் பெண்களும் டிக்கெட் விற்பார்கள் என்கிற உண்மை அப்போது தான் வந்தனாவுக்குத் தெரிந்தது. 'பேசாம... நாமளே யார்கிட்டயாச்சும் வித்திருக்கலாம்' என்று கிசுகிசுத்தாள் சங்கீதா.

மூன்று மணி நேரம் முள்ளாய் உறுத்தியது வந்தனாவுக்கு. வேண்டுமென்றோ, இயல்பாகவோ அந்தப் பக்கத்து இருக்கைக்காரன் இவளைப் பார்த்தபோதெல்லாம் குறுகி நெளிந்தாள். இடைவேளையில் கூட எழுந்து செல்லாமல் ஆணி அடித்த மாதிரி இருக்கையில் ஒட்டிக் கிடந்த அவனை வினோதமாகப் பார்த்தாள் வந்தனா.

காதல் வந்த நேரம்



'ஒரு சிகரெட் பிடிக்கக் கூடவா எழுந்து வெளியே போக மாட்டான்? என்ன ஆண் பிள்ளை இவன்!' என்று எண்ணிச் சலித்துக் கொண்டாள். விதியே என்று படத்திலும் ஒன்றாமல் பொழுதை ஓட்டி விட்டு அரங்கை விட்டு வெளியேறினாள்.

அந்த மூன்று மணி நேரமும் வந்தனாவால் வழக்கம் போல் தோழியுடன் கூட மனம் விட்டுப் பேச முடியாமல் போனது.

தியேட்டரின் நுழைவாயிலைக் கடந்த போது, அழகான சிவப்பு 'மாருதி'யில் அமர்ந்து பறவையாய், மெல்ல அதை நகர்த்திய அந்த வாலிபன் வந்தனாவைத் திரும்பிப் பார்த்தான். நல்ல வெளிச்சத்தில் அவன் முகம் தெளிவாகவே தெரிந்தது. இனம்புரியாத ஏதோ ஓர் உணர்வு அவளை ஆக்கிரமித்தது.

"என்னடி...? படம் எப்படியிருந்துச்சு?" என்று சங்கீதா இயல்பாகத்தான் கேட்டாள். இந்தக் கேள்வி வந்தனாவை ஏனோ திடுக்கிடப் பண்ணியது. படத்தை எங்கே அவளால் பார்க்க முடிந்தது? பக்கத்து இருக்கை வாலிபனைப் பற்றிய அச்சம் அவளைக் கலவரப்படுத்தியிருந்தது. ஆனால் அவன் எவ்வகையிலும் பண்பு கெடாமல் தன் பாட்டில் படத்தைப் பார்த்து விட்டுக் காரில் விரைந்து விட்டான். அவன் பார்வையை விட்டு மறைந்த பிறகும் அவளால் குற்ற உணர்விலிருந்து தன்னை விடுவித்துக் கொள்ள முடியவில்லை.

அந்த வாலிபன் தியேட்டர் இருளில் ஏதாவது சில்மிஷம் பண்ணியிருந்தால் தன்னால் என்ன செய்திருக்க முடியும் என்று நினைத்துப் பார்த்தாள். அப்படி எல்லோருமே தப்பு செய்கிறவர்களாக இருப்பார்கள் என்று நினைப்பது கூடத் தவறு தானோ என்றும் எண்ணினாள்.

வந்தனாவின் உள்ளப் போராட்டங்கள் எதையும் உணராதவளாய் சங்கீதா ஏதேதோ பேசிக் கொண்டு நடந்தாள். முழுமையாக அவளோடு ஒன்றிப் பேச முடியாமல் வந்தனா குழம்பிப் போயிருந்தாள்.

சில நிமிடங்களில் இருவரும் தத்தம் வழிகளில் ஆட்டோவில் ஏறிப் புறப்பட்டார்கள். வீட்டுக்குப் போயும் அதன் பின்னர் சில நாட்களும் அந்த இளைஞனின் முகம் அவளையே சுற்றிச் சுழன்று வந்தது. இதே போல் தன்னைப் பற்றியும் அந்த இளைஞன் நினைத்துப் பார்ப்பானா என்கிற எண்ணமும், அப்படி நினைத்துப் பார்க்க வேண்டும் என்கிற ஆசையும் கூட அவளுக்குள் துளிர் விட்டன.

எதிர்பாராமல் எத்தனையோ நிகழ்வுகள் நிஜ வாழ்க்கையிலும் அரங்கேறி விடுகின்றன.

வந்தனாவுக்கும் அப்படி ஒன்று நேர்ந்தது. தன்னுடைய கடமை முடிந்தது என்று பொறுப்பை இறக்கி விட விரும்பிய சந்தானகோபாலன் தன்னுடைய மகளுக்குத் தகுந்த வரன் என்று பார்த்துப் பொறுக்கிய சில விவரக் குறிப்புக்கள்... படங்கள் எல்லாவற்றையும் வந்தனாவின் பார்வைக்குத் தந்த போதுதான் அது நிகழ்ந்தது.

"என்னை ஏன் கேட்கறீங்க? நீங்களும் அம்மாவும் பார்த்து ஏதாவது தீர்மானிக்க வேண்டியதுதானே..." என்று அதற்கு முன் சிலமுறை கூறியது போல் இப்போது கூற மனம் வரவில்லை. ஏதோ ஒரு அவசரத்துடன் மேலாகக் கிடந்த அந்தப் படத்தை எடுத்தாள் வந்தனா. நாலைந்து மாதங்களாக அவளுடைய நினைவை நிறைத்திருந்த, அந்த சினிமாத் தியேட்டரில் உடன் அமர்ந்து படம் பார்த்த இளைஞனின் படம் தான்!

"பையன் லட்சணமா இருக்கான். பெரிய உத்தியோகம். நல்ல குடும்பப் பாரம்பரியம்... படிப்பு... எல்லாம் இருக்கு. நானே நினைச்சேன்" என்றாள் அம்மா.

அப்புறம் வேகம், மடமடவென்று காரியங்கள்.

பெண் பார்க்க என்று அவன் வந்து அவளை இனங்கண்டு கொண்டபோது ஏற்பட்ட பரபரப்பு வந்தனாவின் முகத்தில் ஒப்பனைகளையும்மீறி வியர்வை முத்துக்களை ஏராளமாய் விதைத்தன.

அவன் அவளுடன் சற்றுத் தனிமையில் போய்... "நீதானா?" என்று கேட்டான். "நீங்கள்தானா?" என்று கேட்க முடியாமல் அவள் சிவந்து நிலம் பார்த்தாள்.

'ஹனிமூன்' எங்கே என்பது பற்றி அவர்களுக்குப் பிரச்னை இருக்கவில்லை.

அதே தியேட்டர். இப்போது வேறு ஏதோ ஒரு படம். அன்றைக்கு 'பிளாக்'கில் டிக்கெட்டை விற்ற அந்தப் பெண் கண்ணில் படுகிறாளா என்று தேடினான் அவன்.

"ஸாரிடி... என்னால படத்துக்கு வர முடியல்லே..." என்று அன்றைக்குக் காலை வாரி விட்ட தோழியை நினைத்து நன்றி சொன்னாள் வந்தனா! ●

8

சரசரவென்று ஒரு கார் வேகமாக வந்தது. அதை அடுத்து ஒரு கார். இதுவரை அந்தத் தெரு காரையே கண்டதில்லை. அது வந்த வேகத்தில் தெருவே விழித்துக் கொண்டது. பகல் தூக்கம் முறித்து வாசலுக்கு வந்தது! எல்லா வீட்டுக் கதவுகளும் விரிந்து திறந்தன. கண்ணையும், காது மடலையும் மலர்த்தி முகத்தில் வியப்புக்குறி காட்டியது. கார்கள் வேலுப்பிள்ளையின் வீட்டின் முன் நின்றன. முதல் காரின் கதவு விரிந்தது. சாமி ஹோட்டல் முத்துப்பிள்ளை இறங்கினார். சலவை மடிப்பில் அவர் சட்டை விடைத்துக் கொண்டு நின்றது. கூடவே குசச் செட்டியாரும் இறங்கினார். இரண்டாவது காரில் இருந்து முத்துப்பிள்ளையின் குடும்பமே இறங்கிற்று. மனைவி, மகள், மருமகன்





பாரதிபாலன்

என்று ஒரு கூட்டம். எல்லாம் அலங்கார மிதப்பு! எல்லோர் முகத்திலும் முறுவல். முழுவதுமாய் சிரித்து விடக் கூடாது என்ற ஜாக்கிரதை முறுவல். கர்ச்சீப்பால் மூக்கை மூடிக்கொண்டே சாக்கடையைத் தாண்டிற்று!

வேலுப்பிள்ளை "வரணும்... வரணும்" என்று கூறிக் கொண்டே வாசலுக்கு ஓடி வந்தார். ஒரு தாம்பாளம் நிறைய வாழைப் பழம். வாகாய், வட்டமாய் அடுக்கிய வாழைப் பழம். சிறு தட்டில் வெற்றிலை பாக்கு. ஒரு சிறுகுடம். அது நிறைய அதி ரசம். அடுத்து ஒரு தட்டு சீடையோ, முறுக்கோ.

எல்லாம் நடைவாசலில் வந்து இறங்கி விட்டது.

"எதுக்கு இதெல்லாம்?" என்றார் அப்பா.

"எதுக்கா? என்ன கேள்வி?"

"நமக்குள்ள எதுக்குன்னேன்!"

"முறைன்னு எதுக்கு வச்சிருக்காங்க?"

"வாஸ்தவம்தான்..."

"என்ன வாஸ்தவம்! வாஸ்தவம் நின்னுக் கிட்டிருந்தா ஆச்சா?" என்று ஒரு குரல் அப்பாவை உலுக்கிற்று. அப்பாவுக்கு இது புதுசு. இத்தனை கூட்டத்திற்கு நடுவில் அவர் நின்றதே இல்லை. அவர் உடல் லேசாய் உதறியது. கன்னுகிட்ட உள்ள கன்னச் சதை நெகிழ்ந்து கனிந்தது. லேசாய் ஆடியது. குரல் கம்மிச் சிறுத்தது. கண்கள் நடுங்கிற்று! இதையெல்லாம் நம்ப முடியாத நடுக்கம்.

"தம்பி இல்லை?" முத்துப்பிள்ளை ஆவல் தாங்காது கேட்டார்.

"வந்திடுவான். வெளியிலே போயிருக் கான்."

நேரம் ஆயிற்று. ஒரு மணி நேரம். சக்தி வேல் வந்தபாடில்லை.

"ஒரு ஆளை அனுப்பலாமா?"

"உறங்காப்புலித் தேவரை அனுப்புங்க..."

"அவர் வேண்டாம். வயசானவர்."

"ஏலே எடுபட்ட பயலே. எனக்காடா வயசாயிடுச்சு. இன்னைக்கு ஒரு கலம் நெல் லைத் தலையில் வெச்சு ஒன்றரை மைலுக் குப் போவேன்" என்று எழுந்தார் தேவர்.

"பசின்னு சொன்னீங்களேன்னுதான் வேண்டாம்னு சொன்னேன்?"

"கிழவி உப்புமா பண்ணிப் போட்டா. சாப்பிட்டுப் போட்டு வாசலுக்கு வந் திருப்பேன். வயிறு சிரிச்சுப் போட்டது. கெக்கே கெக்கேனு சிரிப்பு..."

"ஏன் பத்தலையா?"

"அரிசி உப்புமாவெல்லாம் உழைக் கிறவன் சாப்பிடுற சாப்பாடா?"

"நாலு இட்லி தரட்டுமா?" என்று அம்மா குரல் கொடுத்தாள்.

"வேண்டாம். ஏதோ கல்யாணச் சாப் பாடு சாப்பிடுறேன்."

"ஏன்? இட்டிலி சாப்பிடுங்க!"

"சாப்பிடக் கூடாது பாப்பா. நான் இப்ப பொண்ணு வீட்டு ஆளு. சம்பந்தம் முடியாம கை நனைக்கப் படாது. சம்பந்தம் முடிஞ்சு நிச்சயத் தேதி வெச்சாத்தான் கை நனைக் கணும்..."

"நிச்சயத் தேதி நம்மகிட்ட இருக்கு. பஞ் சாங்க ஐயரே குறிச்சுக் கொடுத்திருக்கார். அதை உறுதி பண்ண வேண்டியது வேலுப் பிள்ளை. அதை வெற்றிலை பாக்கு மாத்தி உறுதி பண்ணிக்கிட்டாலும் சரி. நம்ம உறங் காப்புலிக்கு நாலு இட்லியைக் கொடுத்து உறுதி பண்ணிக்கிட்டாலும் சரி..." என்று கூறிவிட்டு முத்துப்பிள்ளை கடகடவென்று ஒரு சிரிப்புச் சிரித்தார்.

"வாஸ்தவம்தான்"- என்று ஒரு குரல்.

அம்மாவுக்கு ஒரு குறும் சிரிப்பு முகத்தில் ஓடிற்று. லேசாய் தலையைக் கவிழ்ந்தாற் போல் இருந்தாள். அப்பாவின் முகத்தைப் பார்த்தாள். பூரிப்பில் அவர் முகமே மாறிப் போயிருந்தது. அப்பாவுக்கு நேற்று இருந்து ஒரு ஆவல். என்றுமில்லாத ஆவல் தொற்றிக் கொண்டது. அவர் அந்த ஆவலை வீட்டு வேலியிலும் கொல்லைத் தோட்டத் திலும் காட்டி னார். நேற்று வீட்டு வேலியை ஒழுங்கு பண்ணினார். மண்ணை வெட்டிக் குழி பண்ணாமல் மரத்தை வெட்டிக் குதறாமல் எல்லாவற்றையும் தெளிச்சையாகப் பண்ணி னார். நேற்று முழுவதுமும் முன்னருவாளும் கையுமாகத்தான் இருந்

செவ்வந்தி

தார். கொல்லையையும் சுத்தம் பண்ணி விட்டார். கருகருவென்று கருஞ் சோலை மாதிரி இருக்கிறது இப்போது கொல்லை. நேற்றுக் காலை வேஷ்டியை மடித்து, மேலே தூக்கி தார்ப்பாச்சி செருகியவர், பொழுது தொங்கிய பிற்பாடுதான் அவிழ்த்தார். இருள் விழுந்த பிற்பாடுதான் தலையில் கட்டிய முண்டாசு தோளில் துண்டாய்த் தொங்கியது. எட்ட நின்று இளைப்பும் களைப்புமாய் வேலியைப் பார்த்தார். சந்தோஷமாகச் செய்வதில் எல்லாம் ஒரு அழகு வந்து விடுகிறது. சுருள் சுருளாய் தலைமயிர் வேலி. கரடு முரடாய் இருந்த வேலி இன்று கண் மலரச் சிரிக்கின்றது. எல்லாவற்றிலும் அப்பாவின் சிரத்தைத் தெரிகிறது. பொங்கி வருகின்ற சந்தோஷத்தை அவருக்கு இப்படித்தான் கரைக்க முடியும்.

"எதுக்குப்பா இதெல்லாம்?" என்றான் சக்திவேல்.

"அவங்க வர்றாங்கன்னு சொன்னாங்க!"

"யாரு?"

"முத்துப்பிள்ளை"

சக்திவேல் பதில் பேசவில்லை. அந்த வேலியைப் பார்த்தான். அதன் ஒழுங்கைப் பார்த்தான். அந்த ஒழுங்குக்குள் இருக்கும் உழைப்பைப் பார்த்தான். அந்த உழைப்பு சொன்ன பாடம் அவனை யோசிக்க வைத்தது. அவன் யோசனையில் ஒரு குரல் ஒலித்தது. அந்தக் குரல் சக்திவேலை துரத்தித் துரத்தி அடித்தது. அப்பாவின் நிலை குத்தின பார்வையிலும்கூட ஒரு குரல். சன்னமாய் ஒலிக்கும் குரல். அவனுக்குக் கண்ணால் இறங்கி மனசைப் பார்க்கத் தெரியும். பார்த்தான். அதன் எதிரொலியாய் ஒரு குரல். அவன் மனத்தில் ஒலித்தது. குலவிக் குரல். அக்குரல் அவனைக் கொட்டிக் குனிய வைத்து விட்டது.

"நாளைக்கு எங்கனா ஜோலி இருக்காப்பா?"

"இல்லை."

"அவுங்க வர்றப்ப வீட்டுலெ இருய்யா..."

"ம்..."

"நல்ல இடம்தான் இது. பட்டுனு ஒரு இடத்துலெ காலை வச்சிடமாட்டேன்"

"................"

"பிடிச்சிருக்குதானே?"

"ம்" என்று அந்த வேலியைப் பார்த்தான். அவனுக்குப் பயம். அவர் அவன் முகத்தைப் பார்ப்பதற்குள் திருப்பிக் கொண்டான்.

"ம், பின்ன என்ன அந்த இட்லியைத் தேவருக்கு எடுத்துக் கொடேன்" என்றார் அப்பா.

தேவர் எழுந்து, மேல் துண்டை முறம் மாதிரி விரித்தார். வாழை இலையில், நாலு இட்டிலியையும் சட்டினியையும் வைத்துக் கொடுத்தாள். இரண்டு ஒன்றோடு ஒன்றாய் கலந்தது.

"திருப்திதானே?" என்று ஒரு பார்வை தேவரையும் மறுபார்வை தன் மனைவியையும் பார்த்துக் கொண்டார் முத்துப்பிள்ளை.

தேவர் வேலிக் கேட்டைத் திறந்தார்.

"வாய்க்காலில் பாருங்க. இல்லாட்டால் சித்த தள்ளிப் போய் வாய்க்கால் மதகிலே பாருங்க. அங்கவும் இல்லைன்னா பிள்ளையார் கோவிலுக்குக் கிழக்காலே உள்ள மாங்



கொல்லையிலே பாருங்க..." என்று வாசலில் வந்து கூவினார் அப்பா. அந்தக் குரலில் இது வரை இப்படி ஓர் உற்சாகத்தைப் பார்த்ததே இல்லை.

"தம்பிக்கு வேலைக்குச் சொல்லியிருக்கு."

"செய்யுங்க. இனி நான் சொல்ல என்ன இருக்கு!"

"நீங்க சொல்லாதபடிக்குப் பண்ணிப் போடுவோம்."

"பிறகென்ன!"

"நிச்சயத்தை நம்ம வீட்டுல வெச்சுக் கலாம்."

"நல்லது."

"எல்லாம் நாங்க பார்த்துக்கிறோம்."

"........................"

"தம்பி வந்தா சொல்லிட்டுக் கிளம்பலாம்?"

"வரட்டும் என்ன அவசரம்?"

ஒரு மணி நேரம் ஓடிற்று –

சக்திவேல் வந்தான். வீடு முழுக்கக் கூட்டம். திக்கென்று முகத்தில் அடித்தாற்போல் ஒரு கூட்டம். வெறும் தலைகளாய் நிறைந்திருந்தது. அடுக்களை, கொடுக்காப்புளி மர நிழல். வேலிப்பட நிழல் என்று எல்லா இடத்திலும் கூட்டம். அவன் தத்தித் தத்தி நடை வாசலுக்கு வந்தான். கூட்டம் பார்த்துக் கை கூப்பினான். அவ்வளவுதான். ஒரு மூலையில் போய் சரிந்து விட்டான். அவன் எதுவும் பேசவில்லை. கண்களை மட்டும் நகர்த்தி, நகர்த்திப் பார்த்தான். ஜாக்கிரதையான பார்வை. யாரும் எந்த அர்த்தத்தையும் பிரித்து எடுத்து விடாதபடிக்கு ஜாக்கிரதை! ஆழமான மௌனம். எல்லோருடைய பார்வையும் அடிக்கொரு தரம் அவனைத் தொட்டுத் திரும்பியது. அந்த மௌனத்திற்கு ஊடே மறைந்திருக்கின்ற அர்த்தத்தைக்கூட, அங்குமிங்குமாய் அசைந்து, அதை அலசி விட்டு விட்டான். அவன் மனசு புதை மணல். விழுந்தால் எதுவும் அடையாளம் தெரியாது. எழுந்தால் சோளத் தட்டை. தொட்டால் ஒடிந்து விடும்.

இரவு-

ஒடைக்கு வெளியே போவதற்கு அம்மா இருளில் இறங்கினாள். எப்போதும் செவ்வந்தியின் குரல்தான் அம்மாவை இழுக்கும். இன்று அப்படியல்ல. அம்மாவே இறங்கினாள். இன்று செவ்வந்தி வரவில்லை. தலைவலி என்று சாய்ந்து விட்டாள். ஆனால் வலி தலையில் இல்லை. அம்மா கசாயம், களிம்பு என்று வைத்தியத்தில் இறங்கினாள். அதற்கெல்லாம் இறங்கி விடுகிற வலியா அது? அவள் தவிப்பு அதிகரித்தது. எந்தச் சுவடும், எந்தத் தடயமும் இல்லாத தவிப்பு. கண்ணுக்குப் புலப்படாத தவிப்பு. அந்தத் தவிப்பு அவளைத் தனிமைப்படுத்தியது. உலகமே தன்னைக் கைவிட்டு விட்டாற்போல் ஒரு எண்ணம். துவண்டு போனாள். அன்று அம்மாவுக்குத் துணையாகச் செவ்வந்தியின் அம்மா வந்தாள்.

> ''உன்னைத்தான் கல்யாணம் பண்ணிக் கொள்வேன்''
>
> ''சாந்தியிடமும் இதேதான் சொன்னீர்களாமே?''
>
> ''கே. சாந்தியா, எஸ். சாந்தியா?''
>
> – எஸ். மோகன்

''என்னவாம் இப்படிப் பண்ணிப் போட்டீங்க?''

''வரணும், வரணும்னுதான் இருந்தேன் சரசு.''

''நல்லா இருந்தீங்க. போ''

''செவ்வந்தி போட்டு அனத்திக்கிட்டே கிடந்தா!''

''எத்தனை வாட்டி வந்து, மெனக்கெட்டுச் சொல்லிட்டுப் போனேன்.''

''பேசி மூச்சாச்சா?''

''முடிஞ்சாப்புலெதேன்.''

''செவ்வந்திதேன் வரலை. வயசுப் பிள்ளை. வெக்கப்பட்டு ஒதுங்கிட்டான்னு நினைச்சேன். இப்படி நீங்களும் பண்ணிட்டீங்களே!''

''தம்பிக்குத் தோதான இடம்தான் சரசு.''

''கடவுள் விட்ட வழிதேன்.''

''கார் போட்டுல்ல வந்தாரு முத்துப் பிள்ளை...''

''ம்''

''ஊரே கூடில்லெ வந்து நின்னது!''

''நீங்க வரலை. அதான் வருத்தம்.''

''உண்மையைச் சொல்லட்டுமா சரசு?''

அம்மா அவளின் முகத்தை ஏறிட்டுப் பார்த்தாள். எதையோ தேடும் பார்வை. ஒரு கணம் அவளும் அந்தத் தகிப்பிலே இருந்தாள். சட்டென்று தலையைக் கவிழ்ந்து கொண்டாள். சேலைத் தலைப்பால் கண்களையும் மூக்கையும் சேர்த்துத் துடைத்துக் கொண்டாள். ஒரு நிமிஷம் மௌனம். பின் மூக்கை சர்ரென்று ஒரு இழுத்தாள். அந்த இழுப்பில் ஒரு வேகம். எதையோ பிடுங்கி எறிகின்ற வேகம்.

''நான் எதுவும் தப்பாச் சொல்லிட்டனா?''

''அந்தப் பெரியசாமி பய சொன்னது போதாதா?''

''ப்சு. அதை மனசுல வெச்சுக்காதே!''

''முடியலை சரசு. அப்படியே உடைஞ்சுட்டேன். ரெண்டு நாளா வாசல்லெ தலை காட்ட முடியலை.''

''வுடுங்க...''

''அதேன் உங்க வீட்டுக்கு வரலை. கூசிப் போயிட்டேன். யார்னா சாதாரணமாப் பார்த்தாக் கூட சந்தேகம் வரும்.''

''மனச வுட வேண்டாம்!''

''இத்தனை பழகிட்டு, தம்பி கல்யாணக் காரியத்திற்கு வராம போயிட்டாளேன்னு நீ நினைச்சுடக் கூடாது. அதான் மனசைத் தொறந்து கொட்டிட்டேன்.''

அம்மா ஒன்றும் பேசவில்லை. அவள் முகத்தைக் கூர்ந்து பார்த்தாள். அவள் மனதில் ஏதோ ஓர் எண்ணம் ஓடிற்று!

(தொடரும்)

இயக்குனராய் விஜயசாந்தி!

ஒரு பிற்பகலில் மீனாவை சந்திக்கச் சென்றபோது 'வி' சேனலுக்காக ஆங்கிலத்தில் பேட்டியளித்துக் கொண்டிருந்தார். ஒவ்வொரு கேள்விக்கும் நிறைய யோசனை. புன்னகைத்துக் கொண்டே பதில். கூடவே கூச்சமும். பிரபுவோடு நடித்துக் கொண்டிருக்கும் 'மனம் விரும் புதே உன்னை' பற்றி ஆஹா ஓஹோ என்று பெருமைப்பட்டுக் கொண்டார். ரம்பா, சிம்ரன் - வருகைக்குப் பின்னும் 'ஸ்டெடி' யாய் இருப்பதை சந்தோஷமாகச் சொன்னவர், 'ஆனாலும் ஒரு வருத்தம்' என்றார். பாலச்சந்தர், பாரதிராஜா, மணிரத்னம் போன்ற பெரிய டைரக்டர்களின் படங்களில் நடிக்காததைப் பற்றி. நிஜமாகவே இது மீனா வருத்தப்பட வேண்டிய விஷயம் தான்.

கதாநாயகியா ஓ.கே. தங்கச்சியா ஓ.கே., கதாநாயகியின் தோழியா ஓ.கே. என்று எந்த கேரக்டரிலும் தலைகாட்டிக் கொண்டிருந்த இந்து, இனி கதா நாயகிக்கு மட்டுமே ஓ.கே. சொல்லப் போகிறாராம். இப்படிப் பிடிவாதமாய் இருந்தால் வருகிற நல்ல கேரக்டர்களை இழக்க வேண்டியிருக்குமே? என்றால், "சின்ன சின்ன கேரக்டர்கள்ல நடிச்சு வெறுத்துப் போயிருச்சு. அதனாலதான் இப்படி ஒரு முடிவு. அதுக்காக ஒரேயடியா அடம் பிடிச்சிடப் போறதில்லை. பேசப்படுற கேரக்டரா இருந்த நடிக்காம இருக்க முடியுமா? சினிமாவுல கதாநாயகி சான்ஸ் கம்மியா இருந்தாலும் நெறைய டீ.வி. சீரியல்ஸ்ல கதாநாயகியா நடிச்சுக்கிட்டுத்தான் இருக்கேன்" – என்கிற இந்துவின் கதாநாயகி ஆசை ஒருபுறம் இருக்க, நடிப்போடு இன்னும் படிப்பைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு இருக்கிறார் இந்து. கரஸ்பாண்டன்ஸ் கோர்ஸில் ஆங்கில இலக்கியம்!

இன்னும் அப்பா பிள்ளையாகவே இருக்கிறார் சூர்யா. அப்பாவுக்குக் கதை பிடித்தால்தான் சூர்யா நடிப்பார். ஆனால், அப்பா கதை கேட்பதைக்கூட இப்போது நிறுத்தி வைத்திருக்கிறார். இதனால் சூர்யாவுக்கொன்றும் வருத்தமில்லை. சூர்யா இப்போது, கவனம் செலுத்திக் கொண்டிருக்கிற படம் 'சந்திப்போமா' மட்டுமே. இதன் வெற்றி தோல்வியை வைத்துத்தான் அடுத்தப் படங்களை 'கமிட்' செய்கிற முடிவில் இருக்கிறார் சூர்யாவின் அப்பா. அதனால்தான் கதை கேட்பதைத் தள்ளி வைத்திருக்கிறார். நிறைய புது இயக்குனர்கள் சூர்யாவிற்காகக் கதை வைத்துக் கொண்டு 'சந்திப்போமா'வின் ரிலீஸுக்காகக் காத்திருக்கிறார்கள்.

தீவிர அரசியலிலிருந்து விடுபடுகிற முடிவில் இருக்கிறாராம் விஜயசாந்தி. அவர் நடிக்கிற படங்களை இப்போது விரல் விட்டுக் கூட எண்ண முடியாத நிலைமை. ஒரு படம் கூடக் கைவசம் இல்லை. தமிழில் 'ஜான்சி'யைத் தவிர்த்து, விஜயசாந்தி நடித்து மூன்று படங்கள் ரிலீஸுக்குத் தயாராய் இருக்கின்றன. படத்தை வாங்கத்தான் ஆள் இல்லை. இதனால் ஏக வருத்தம் விஜயசாந்திக்கு. இதனால் அரசியலிலிருந்து கொஞ்சம் ஒதுங்கி சினிமாவில் தீவிர கவனம் செலுத்தலாம் என்றிருக்கிறார். அதுவும் இயக்குனராகப் பிரவேசித்து!

'வெள்ளிநிலவே' படத்தின் மூலம் மறுபிரவேசம் செய்ய இருக்கிறார் ஆர்.வி. உதயகுமார். எல்லோரும் தாய் மீது பாசத்தைப் பொழிந்து கம்பெனிக்குப் பெயர் வைப்பார்கள். உதயகுமாரோ அப்பா மேல் பாசம் வைத்து தனது கம்பெனிக்கு 'தந்தை ஆர்ட்ஸ்' என்று பெயர் வைத்திருக்கிறார். "பத்து மாசம் சுமந்து பெத்த அம்மா ஒசத்திதான். அதுக்காக வளர்த்த அப்பாவை ஒதுக்கிட முடியுமா? என்ன இருந்தாலும் அப்பாவுக்கு அப்புறம்தான் அம்மா" – என்றார் உதயகுமார். 'பொன்னுமணி'யில்



• சௌந்தர்யா

அறிமுகப்படுத்தியதற்கு நன்றிக் கடனாக 'வெள்ளி நிலவே' படத்தில் குடுத்த காசை வாங்கிக் கொண்டு சௌந்தர்யா நடித்திருக்கிறாராம். தெலுங்கில் தூள் கிளப்பிக் கொண்டிருந்தாலும் தமிழில் ரஜினியோடு நடித்த அருணாச்சலமும், கமலோடு நடித்த 'காதலா காதலா'வும் பெரிய வரவேற்பைப் பெறாதது சௌந்தர்யாவிற்குப் பெரிய வருத்தம்.

வெயிலுக்கு ஒதுங்கிக் கொள்ளலாம் என்று சிங்கப்பூருக்கு விமானமேறி விட்டார் நாசர். ஒரு வாரம் மனைவி குழந்தை குட்டிகளோடு ஜாலி ட்ரிப் அடித்துவிட்டு அடுத்து இயக்கப்போகும் படத்திற்கு லொகே ஷனையும் பார்த்து முடித்துவிட்டு திரும்பி இருக்கிறார். ●


— மஹந்த்



• மீனா



• சூர்யா, ப்ரீதா



ஏமாற்றினால் எலும்பு காட்டிக் கொடுக்கும்!

வழக்கம் போல்தான் அந்த ஆண்டும் தமிழ்நாடு நீச்சல் கழகம் சிறுவர் சிறுமிகளுக்கான நீச்சலில் நாலு பிரிவுகளிலும் (ஃப்ரீ ஸ்டைல், பாக் ஸ்ட்ரோக், பட்டர்ஃப்ளை, ப்ரெஸ்ட் ஸ்ட்ரோக்) போட்டிகளை சென்னை ஐ.ஐ.டி நீச்சல் குளத்தில் நடத்தியது.

ஆனால் வழக்கமில்லாத ஒரு விஷயமும் நடந்தது. போட்டியில் கலந்து கொண்டவர்கள், முதல் முறையாக மருத்துவப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டனர். அவர்கள் குறிப்பிட்ட வயது உண்மைதானா என்பதை அறியத்தான் அந்தச் சோதனை. சில பெற்றோர்களிடமிருந்து இதற்குக் கடும் எதிர்ப்பு. என்றாலும் உடன்பட வேண்டிய கட்டாயம்!

சப்-ஜூனியர் 'வகையில் நாலு பிரிவுகள் உண்டு – எட்டு வயதுக்குக் கீழ், 9 - 10, 11 - 12, 13 - 14 இப்படி. இதில் சில சிறுவர் சிறுமியர் தங்கள் வயதைக் குறைத்துக் கொடுத்துவிட்டு அதன் மூலம் பரிசு பெறும் வாய்ப்பை அதிகப்படுத்திக் கொண்டார்கள். தங்கள் பள்ளிக்குப் பெயர் வர வேண்டும் என்பதற்காக சில தலைமை ஆசிரியர்களும் பொய்ச் சான்றிதழ் கொடுத்தது வேதனை. அதற்காகத்தான் இந்த மருத்துவப் பரிசோதனை!

முதல் சுற்றில் 'சந்தேகத்திற்கு இடமானவர்கள்' என்று கருதப்பட்டவர்கள் அண்ணா நகரில் உள்ள 'போன் அண்ட் ஜாயிண்ட் மருத்துவ மனை'க்கு அனுப்பப்பட்டனர். அனுப்பப்பட்ட பதினான்கு சிறுவர் சிறுமி

அட இதுல இவ்ளோ விஷயம் இருக்கா?

களில் மூன்று பேர் தவறான வயதைக் குறிப்பிட்டிருந்ததாக மருத்துவர்கள் அறிவித்திருந்தனர்.

அந்த மருத்துவமனையின் இயக்குனர் டாக்டர் சிவமுருகனிடம் "எந்தவித சோதனையைக் கொண்டு ஒருவரின் வயதை துல்லியமாக நிர்ணயிக்க முடியும்?" என்று கேட்டோம்.

அவர் அளித்த விளக்கம் :

எக்ஸ்-ரேயின் உதவியைக் கொண்டு ஒருவரின் வயதை நிர்ணயிப்பது மருத்துவ உலகில் சாத்தியம்தான்.

'ரேப்' வழக்குகளில் பாதிப்புக்கு உள்ளான பெண் மைனரா இல்லையா என்பதை அறிந்து கொள்ளக் கூட எலும்பு முறிவு சிகிச்சை நிபுணர்களை, நீதிமன்றமும் காவல் துறையும் அணுகுவதுண்டு.

வயதை நிர்ணயிப்பதற்காக இப்படி அனுப்பப்படும் சிறுவன் அல்லது சிறுமியின் மணிக்கட்டு, முழங்கை, இடுப்பு ஆகிய பகுதிகளில் எக்ஸ்-ரே எடுப்பார்கள்.

இரண்டு மாதக் கருவிலேயே எலும்புகள் உருவாகத் தொடங்கி விடுகின்றன. முதலில் உருவாவது கழுத்துப்பட்டை எலும்புதான். பிறகு எலும்புகள் வளர்ச்சி அடைகின்றன. ஆண்களைப் பொறுத்தவரை இருபத்தோரு வயது வரையிலும், பெண்களைப் பொறுத்த வரை பதினேழு வயது வரையிலும் எலும்புகள் வளருகின்றன.

குறிப்பிட்ட எலும்புகளின் வளர்ச்சி விகிதம், வயதை நிர்ணயிக்க உதவும். அதை விட எலும்புகளை இணைக்கும் படலங்கள் தோன்றிய அல்லது மறைந்த விதத்தைக் கொண்டும் வயதை நிர்ணயிக்க முடியும்.

பொதுவாக பத்து வயதிற்குள் என்றால் துல்லியமாகவும், அதற்கு மேல் என்றால், சுமார் ஓர் ஆண்டு வேறுபாட்டுக்குள்ளும் வயதைக் கண்டுபிடிக்க முடியும்.

ஆனால் ஒன்று! குறிப்பிட்ட சிறுவன் வைட்டமின் டி சத்துக் குறைவால் உண்டாகும் ரிக்கெட்ஸ் என்ற வியாதியினால் பாதிக்கப்பட்டிருக்கிறானா என்பதை மருத்துவர்கள் உறுதி செய்து கொள்வார்கள். ஏனென்றால் ரிக்கெட்ஸால் பாதிக்கப்பட்டவரின் எலும்பில் வீக்கம் உண்டாகியிருக்க வாய்ப்பு உண்டு. இதனால் அது தவறான வயதைச் சுட்டிக் காட்டக்கூடும். அதே போல் மடிந்த பாதம் (Bowed Legs) கொண்ட சிறுவர்கள் விஷயத்திலும் எச்சரிக்கையோடுதான் வயதை நிர்ணயம் செய்வார்கள் மருத்துவர்கள்!

— ஜி.எஸ்.எஸ்.

கல்கி — B. M. SILK SAREES

BMSS

இணைந்து வழங்கும்

பட்டுப் புடைவை பரிசுப் போட்டி - 8

பாகிஸ்தானின் அணு ஆயுதத் திட்டங்களின் தந்தை யார்?

இந்த இதழைப் படித்துக் கண்டுபிடித்துக் கீழுள்ள ஒரு பாதிக் கூப்பனில் எழுதியனுப்புங்கள். பலர் சரியான விடையெழுதினால் குலுக்கல் முறையில் ஒருவருக்கே பட்டுப் புடைவை பரிசு!

மீதிப் பேருக்கு ஏமாற்றம்தானா? இல்லை. கூப்பனிலுள்ள மறுபாதியிலும் இதே விடையை எழுதிப் பத்திரப்படுத்திக் கொள்ளுங்கள். பன்னிரண்டு வாரம் தொடரப் போகும் இப் போட்டியின் முடிவில் பம்பர் பரிசாக கலர் டீவி. ஒன்று காத்திருக்கிறது. வழங்குபவர்:

Vasanth வசந்த் & கோ

- விடைகளைக் கூப்பனில் மட்டுமே எழுதியனுப்ப வேண்டும். ஒரிஜினல் கூப்பன்தான்; ஜெராக்ஸ் பிரதிகள் செல்லாது.
- ஆசிரியர் தீர்ப்பே முடிவானது.

முடிவு தேதி: 8.6.98

பட்டுப் புடைவை பரிசுப் போட்டி – 8
(நீங்கள் பத்திரப்படுத்த வேண்டிய கூப்பன்)

பாக். அணு ஆயுதத் திட்டங்களின் தந்தை :

....

என் பெயர் : ....

முகவரி : ....

....

பட்டுப் புடைவை பரிசுப் போட்டி – 8
(எங்களுக்கு அனுப்ப வேண்டிய கூப்பன்)

பாக். அணு ஆயுதத் திட்டங்களின் தந்தை :

....

என் பெயர் : ....

முகவரி : ....

....





காணாமல் போனவர்களின் கருப்புச் சட்டை ஊர்வலம்!

தேர்தலுக்குப் பின் கோவையில் அ.தி.மு.க பெரும்புள்ளிகள் 'காணாமல்' போயிருந்தனர்! குறிப்பாக முன்னாள் போக்கு வரத்துத் துறை அமைச்சர் செங்கோட்டை யனை மிக நீண்ட நாட்களாகக் காண முடியா திருந்தது! ஆனால் சமீபத்தில் நடந்த கோவை - மின்வெட்டு கறுப்புச் சட்டை பேரணியில் அவர் 'படு பளிச்'சாக ஆஜர். அந்தப் பேரணி யிலிருந்து சில துளிகள்...

● கோவை திருவள்ளுவர் பேருந்து நிலை யத்திலிருந்து புறப்பட்ட ஊர்வலத்தில் எண்ணி இரண்டாயிரம் பேர்! பல பேருக்குக் கறுப்புச் சட்டை இல்லை. பல பெண்களுக்கோ, கறுப் புச் சேலை (மாதர் அணி) இல்லை போலும். எங்காவது கொஞ்சம் கறுப்புத் தென்பட்டால் போதும் என்று அணிந்து வந்திருந்தனர். பல பேர் வெள்ளைச் சட்டையில் கறுப்புக் கொடி அணிந்து. (துக்க ஊர்வலமோ...?). "ச்சே... இந் நேரம் நம்ம ஆட்சி மட்டும் இருந்திருந்தா எல் லாருக்கும் கறுப்பு வெள்ளையில் ஒரு செட் துணி அன்பளிப்பாகக் கிடைத்திருக்கும்" என புலம்ப, ஒரு தொண்டர், "கவலைப் படாதே! அடுத்த ஊர்வலம் அன்பளிப்புத் துணியில் தான்" என்றார்!

● கோவை மாவட்ட அதிமுக செயலாளர் மலரவன் அங்கும் இங்கும் வியர்க்க விறுவிறுக்க ஓடிக் கொண்டிருந்தார். (அம்மாவே வருகிறாரோ...?) செங்கோட் டையன் வந்ததும் ஓட்டமும் வியர்வையும் கூடுதலாயின! 'கோஷம்' போட வேண் டிய வாசகங் களின் ஜெ ராக்ஸ் பிரதி களை ஓடி ஓடி விநி யோகம் செய்து விட்டு, அந்த வாசகங்களை மட்டுமே கூவ வேண்டும்' என அச் சுறுத்திச் சென்றார்!

● ஊர்வலத்தில் மின்சார வெட்டைக் கண்டித்து - கோஷம் போட்ட மாதிரியே காணோம். ஒரே கோஷம் - "வாஜ்பாயே... வாஜ் பாயே... கருணாநிதி அரசை டிஸ்மிஸ் செய்..." என்பதுதான்.

● கைகோத்துக் கொண்டே நடந்த தலை வர்களின் மனத்தில் கொண்டாட்டம். கால் களிலோ திண்டாட்டம். அப்படி ஆடி ஆடி அசைந்து வேகமாய்... திடீரென்று கூட்டம் நின்றது - காச்மூச்சென ஒரு சத்தம்! யாரிட மிருந்து? திருவாளர் செங்கோட்டைய னிடமிருந்து. "மெதுவாக நடங்கள்... நான்கு நான்கு பேராய் நடந்து வாருங்கள்...!" என்று.

"அண்ணன் ஏன் கத்தறார் தெரியுமா...? கூட் டம் குறைச்சலாயிருக்குல்ல.. அந்த டென்ஷன்!" என்றது ஊர்வலத்தில் ஒரு குரல்!

● கோவை தேரடித் திடலில் போடப்பட் டிருந்த பந்தோபஸ்து திணறடித்தது! போலீஸ் காரர்கள் வழிநெடுக பாதசாரிகளை - வாகன ஓட்டுனர்களை விரட்டின விரட்டல், ஒடுக்கின ஒடுக்கல்...! அப்பப்பா காவல்துறையே அ.தி. மு.க. படைதானோ என எண்ண வைத்தது!

— கேயெஸ்வி.

Printed and published by K. Rajendran at the Bharathan Press on behalf of Bharathan Publications Private Limited. Editor : Mrs. Seetha Ravi
Address : 47, Jawaharlal Nehru Road, Ekkaduthangal, Chennai - 600 097.
Telephones : Editorial : 2345624; Circulation Manager : 2345623; Subscription and Advertisement : 2345622; Chief Administrative Officer : 2345621
Annual Subscription : India Rs. 250/-; Overseas Rs. 1600/- (Air Mail)
Half Yearly Subscription : India Rs. 125/-; Overseas Rs. 800/- (Air Mail)

Registered with the Registrar of Newspaper of India under No. 1041/57 * Registered No. TN/MS (S) M4392/98 * Licensed to post without prepayment under PMG's Licence No. TN/MS/ (S) 161 * Registered as a Newspaper in Srilanka

